BELLWETHER INTERNATIONAL

புதிய ஏற்பாடு விளக்கவுரை
THE NEW TESTAMENT COMMENTARY
2 கொரிந்தியர்

GOOD NEWS PUBLISHERS

2 கொரிந்தியர்

பின்னணியும், பொருளடக்கமும்

முதலாம் கொரிந்தியரில் தான் எழுதின பிரச்சினைகளுக்கு நேரிடையானத் தீர்வு காணும்படி, பவுல் எபேசுவில் இருந்த பொழுது கொரிந்து சபையைச் சந்தித்திருக்கக் கூடும். அத்தகையதோர் சந்திப்பை அவர் இரண்டாம் கொரிந்தியரில் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது *(2:1; 12:14,21 13:1,2)*. அவர் கொரிந்துவை சந்தித்திருந்தால், அவரை நன்முறையில் வரவேற்றிருக்க மாட்டார்கள். பிரிவினைக் காரர்களால் சபை துண்டுபட்டுக் கிடந்தது *(10:7; 11:13)*.

பவுல் புறப்பட்டு, கொரிந்துவின் நிலவரத்தைப் பற்றிய அறிக்கையைக் கொண்டு வரும்படி தீத்துவைத் தனக்கு முன் அனுப்பினார். துரோவாவில் அவர் தீத்துவைக் காணாமல், கொரிந்தியரைப் பற்றி இன்னும் ஆழமான கரிசனையோடு மக்கெதோனியாவுக்குச் சென்றார். அவர் இங்கிருந்தபொழுது தீத்து தனது அறிக்கையுடன் வந்து சேர்ந்தார். இச்செய்தி யானது கொரிந்துவில் ஏற்பட்டிருந்த நல்மாற்றத்தைக் காட்டிற்று *(7:6-16)*. இருப்பினும், சிலர் பவுலைத் தொடர்ந்து குற்றப்படுத்தினர். சந்தோஷமான விளைவுகள் ஏற்படுமென்ற நம்பிக்கை உடையவராகத் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தின் ஆயத்தமாக இரண்டாம் கொரிந்தியரைப் பவுல் சந்தோஷத்துடன் அமர்ந்து எழுதினார்.

பவுலைக் குற்றஞ் சாட்டியவர்கள் யூதர்களே *(11:22)*. அவர்கள் தங்களை "கிறிஸ்துவின் ஊழியக்காரர்" *(11:23)* என உரிமை பாராட்டிக் கொண்டு, மற்ற சபைகளிலிருந்து பெற்ற சிபாரிசுகளை சாதுரியமாகப் பயன்படுத்தி *(3:1)*. பவுல் ஸ்தாபித்த சபைகளுக்குள் பிரவேசித்தார்கள்.

அவர்கள் புத்தியில்லாதவர்களும், தங்களை உயர்த்துகிறவர்களுமாயிருந்து *(11:19,20)*, பவுலைப் போலக் கிறிஸ்துவுக்காக உழைக்கவும், பாடுபடவும் ஆயத்தமற்றவர்களாயிருந்தார்கள் *(11:23,27)*.

"மாம்சத்தின்படி நடக்கிறவர்கள்" என்று அவர்கள் பவுலைக் குற்றப்படுத்தினார்கள் *(10:2)*. பவுலின் நிருபங்கள் பாரமானவைகளும், பலமுள்ளவைகள் என்றும், அவரின் தோற்றமோ பலவீனமும் வசனம் அற்பமுமாயிருக்கிறது என்றும் அவர்கள் கூறினார்கள் *(10:10)*. மேலும், பவுல் வேலை செய்ததினால் தன்னைத்தான் தாழ்வுபடுத்தினார் *(11:7)*; அவர் ஆதி அப்போஸ்தலர்களில் ஒருவராயிருக்கவில்லை *(11:5)*; போதிக்கத் தகுதியற்றவர் *(12:11,12)*, அவரிடம் மெச்சிக் கொள்ளப்படத்தக்கவை ஒன்றுமில்லை *(3:1)* என்பது போன்ற பல காரியங்களை அவர்கள் பேசினார்கள். அவர் மாம்சத்தின்படி நடக்கிறவர் *(10:2)*, தன்னைத்தான் மேன்மை பாராட்டுகிறவர் *(10:8,15)*, வஞ்சகன் *(12:16)* எனக் கூறி பவுலின் தனிப்பட்ட நடத்தையையும் தாக்கிப் பேசினார்கள். எருசலேம் சபைக்காகப் பவுலிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தப் பணத்தைக் கையாடினார் என்றும் கூட அவர்கள் கருதினார்கள் *(8:20-23)*.

2. கொரிந்தியரில், தனது நிலைமையைப் பவுல் விவரித்தார் *(1:3-2:4)*, கொரிந்தியரும் தன்னோடு கூடப் பூரிப்பாகும்படி கேட்டுக் கொண்டார் *(6:11-13)*, கொரிந்துவிலிருந்து பெறப்பட்ட நற்செய்தியினால் சந்தோஷப்பட்டார் *(7:6,7)*, தனது அப்போஸ்தல ஊழியத்தையும் தற்காத்தார் *(10:1-13:10)*. எல்லாவற்றிற்கும் மேலாக, இந்நிருபத்தில் ஊழியம் சிறப்புற சித்தரிக்கப்பட்டுள்ளது. மேலும், சபைக்கும், மற்றவர்களுக்கும் தேவையான செயல்முறை வழிகாட்டி இந்நிருபத்தில் இடம் பெற்றுள்ளது (ஆதியாகமம் *8,9*).

2 கொரிந்தியர்

பவுலினால் எழுதப்பட்டவைகள் எல்லாவற்றிலும் இந்த நிருபமே மிகவும் தனிப்பட்டத் தன்மையுடையது. குறிப்பிடப்பட்ட ஜனங்களால் தீய எதிர்ப்புகள் உண்டானதினால், தன்னையும் தனது ஊழியத்தையும் தற்காப்பது பவுலுக்கு அத்யாவசியமாயிருந்தது. இல்லையெனில், அவர் மாத்திரமின்றி சுவிசேஷமும் தாழ்வுபடுத்தப்பட்டிருக்கும்.

2 கொரிந்தியர்: உண்மை ஊழியத்தின் ஓர் தற்காப்பு

1. வாழ்த்து *(1:1,2)*
2. பவுலின் ஊழியத்தின் உள்ளெண்ணம் *(1:3-2:13)*
3. பவுலின் ஊழியத்தின் சிறப்பியல் *(2:14-7:16)*.
4. தேவையான விசுவாசிகளுக்காகப் பணம் சேகரித்தல் *(8:1-9:15)*.
5. பவுலின் அப்போஸ்தல ஊழியத்தின் அதிகாரம் *(10:1-13:10)*.
6. முடிவுரை *(13:11-14)*.

ஆவிக்குரிய முதிர்ச்சி அடையாதவர்களும், தனக்கு விரோதமாக இருந்தவர்களுமாகிய ஜனங்களுடன் அவர் எவ்விதம் நடந்து கொண்டார் என்பதைக் கொரிந்தியருக்கு எழுதின இரண்டு நிருபங்களிலும் பவுல் வெளிப்படையாகக் காண்பிக்கிறார்.

அவர்கள் எப்போதும் அவருடைய பண்புகளைச் சந்தேகிக்கவும், அவர்களிடையே செய்யப்பட்ட அவருடைய வேலையைத் தாழ்வடையச் செய்யவும் ஆயத்தமாயிருந்தனர். அவர்களுடைய இவ்வித மனோபாங்கு, ஆவிக்குரிய குறைவு போன்றவற்றுக்கு மாறாக, பவுல் தனது ஆழ்ந்த அன்பையும், கரிசனையையும் வெளிப்படுத்தி, தொடர்ந்து அவர்களுக்காக அக்கறை கொண்டிருந்தார் *(2 கொரிந்தியர் 12:14,15)*.

ஆதிக் கிறிஸ்தவர்களில் அநேகருக்குக் கடுமையான பிரச்சினைகள் இருந்தன என்பதைக் கொரிந்தியருக்கு எழுதப்பட்ட நிருபங்கள் வெளிப்படுத்துகின்றன. இப்பிரச்சினைகள் ஏதும் குறிப்பிடத்தக்கவைகள் அல்ல. குறிப்பிடத்தக்கவை யாதெனில், அவர்களுடைய பிரச்சினைகளின் மத்தியில் சபை தப்பிப்பிழைத்தது மாத்திரமன்றி, சீராய் வளர்ந்தேறியதேயாகும். சபை என்பது வெறும் மனுஷீக நிறுவனம் அல்ல என்ற சத்தியத்திற்கு இஃது ஓர் ஒப்பற்ற சாட்சியாகும். இயற்கைக்கு அப்பாற்பட்ட கிறிஸ்துவின் சரீரமாகிய சபை, பரிசுத்த ஆவியாகிய தேவனால் உருவாக்கப்பட்டு, அவரால் தாங்கப்பட்டு, அவராலே முன்னோக்கி வழி நடத்தப்படுகிறது என்பதற்கு இஃது ஓர் நிரூபணமாகும்.

முக்கியமானத் தகவலின் மறுபார்வை

1. பவுல் தனது மூன்றாம் சுவிசேஷப் பிரயாணத்தில் 2 கொரிந்தியரை எழுதினார். அவர் மூன்றாம் முறை கொரிந்துவுக்குச் செல்வதற்கு முன்னர் இதை எழுதினார். பவுலுக்கு முன்னதாகத் தீத்து கொரிந்துவுக்குச் சென்று அங்கிருந்து மக்கெதோனியாவுக்குத் திரும்பி வந்து, கொரிந்து சபையையும், அவர்பால் அவர்களுக்கிருந்த மனோபாங்கையும் பற்றிய நற்செய்தியைப் பவுலிடம் கொடுத்தார்.

2 கொரிந்தியர்

2. மற்றவர்களுக்கும், சபைக்கும் கொடுக்கும்படியான நடைமுறை வழிகாட்டியை 2 கொரிந்தியர் நமக்கு போதிக்கிறது.

3. பவுலைக் குற்றஞ்சாட்டியவர்களையும், அவரது ஊழியத்தின் தனிப்பட்டத் தற்காப்பையும் பற்றி கொரிந்தியர் நிருபங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. அவரைக் குற்றஞ் சாட்டியவர்களில் பெரும்பான்மையோர், இரட்சிப்படைவதற்கு மோசேயின் நியாயப்பிரமாணத்தைக் கைக்கொள்வதும் அவசியம் எனத் தவறாகப் போதித்து வந்த யூதர்களே. பவுல், 'மாம்சத்தின்படி நடக்கிறவர்' என்றும், அவரின் தோற்றம் பலவீனம், வசனம் அற்பமாயிருக்கிறது என்றும், வேலை செய்து தன்னைத்தான் தாழ்வுபடுத்தினார் என்றும், போதிக்கத் தகுதியற்றவர் என்றும் அவர்கள் பலவாறாக அவனைக் குற்றஞ்சாட்டினார்கள். அவரது தனிப்பட்ட சொந்த நடக்கையையும் கேள்வி கேட்டார்கள்.

4. கொரிந்தியர் முதிர்ச்சி அடையாதவர்களும், அப்போஸ்தலனாகிய பவுலின் நடத்தையை சந்தேகித்தவர்களும், அநேகந் தடவைகளில் அவரது ஊழியத்தை அவமதித்தவர்களுமாயிருந்த போதிலும், அவர், அவர்கள்பால் ஆழ்ந்த கரிசனையும், அன்பும் கொண்டிருந்தார். ஏனெனில், உண்மையில் ஓர் மேய்ப்பனின் இருதயம் அவருக்கிருந்தது.

5. தலைவன் ஒருவன் ஊழியத்தில் எதிர்ப்படும் என எதிர்நோக்கும் பல காரியங்களைக் கொரிந்தியர் நிருபங்கள் சிறப்புறப் படம் பிடித்துக் காட்டுகின்றன.

6. எதிர்ப்பட்ட எண்ணிறந்த பிரச்சினைகளின் மத்தியிலும் கொரிந்து சபை தொடர்ந்து வளர்தேறிற்று என்பது குறிப்பிடத்தக்கதாகும். சபை என்பது வெறும் மனுஷீக நிறுவனமாயிராமல், பரிசுத்த ஆவியானவரால் உருவாக்கப்பட்டு, அவரால் தாங்கப்பட்டு, அவராலே முன்னோக்கி வழிநடத்தப்படும் இயற்கைக்கு அப்பாற்பட்ட கிறிஸ்துவின் சரீரமே என்ற உண்மைக்கு இஃது ஓர் ஒப்பற்ற சாட்சியாகும்.

ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசிக்கு மன்னிப்பும் ஆறுதலும் (2 கொரிந்தியர் 2:5-11)

முகவுரை

அ. வேதத்தின் இப்பகுதியானது

1. சபையிலுள்ள, மோசமான குற்றத்திற்கு காரணமாயிருந்த ஒரு குறிப்பிட்ட நபருக்கு சம்பந்தப்பட்டது.

2. அந்த குற்றத்தின் காரணமாக அவன்மேல் வைக்கப்பட்ட சபையின் ஒழுக்கத்திற்கு சம்பந்தப்பட்டது.

ஆ. குற்றவாளி, உண்மையான துக்கத்தையும், மனந்திரும்புதலையும் காண்பித்ததினால், பவுல் கொரிந்து சபையாருக்கு, ஐக்கியத்திற்குள்ளே அவனை அன்போடு மறுபடியும் சேர்த்துக்கொள்ளும்படி போதிக்கிறார்.

இ. நம்முடைய உள்ளூர் ஐக்கியத்திலே, குற்றவாளிகள் திரும்ப வருவதை நாம் அனுமதிக்கத் தவறினால், நாம் சாத்தானால் ஏமாற்றப்பட்டு, ஒருவேளை, நம்முடைய சிலரையே நரக அக்கினிக்கு இழந்துவிடக் கூடும்.

1. ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசி, முழு சபையின் துக்கத்திற்கு காரணமாயிருக்கிறார். (2:5-6).

அ. வசனம்5: "துக்கமுண்டாக்கினவன்" "துக்கம்" என்பது வருத்தம் உண்டாக்குவது, மற்றவர்களைக் கவலைக்குள்ளாக்குவது, தங்கள் இருதயங்களிலே ஒரு பெரிய பாரத்தை சுமக்கும்படி செய்வதாகும்.

ஆ. வசனம்5. "எனக்கு மாத்திரமல்ல, ஒருவாறு உங்களெல்லாருக்கும் துக்கமுண்டாக்கினான்". "அவன்" என்பது கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்திலே, விபச்சாரம் செய்ததாக பவுல் சொல்லும் நபர், என்று ஒரு சிலர் கூறுகின்றனர் (1கொரிந்தியர்5:1-5). இங்கே சொல்லப்பட்ட குற்றவாளி, ஒரு வேளை பவுலை வெளியரங்கமாய் துக்கப்படுத்தி, அவனையும் அவனுடைய ஊழியத்தையும் அவமானப்படுத்திய, கொரிந்து சபையிலுள்ள ஒருவராய் இருந்திருக்கக் கூடும், அவன் ஒருவேளை, கீழ்ப்படியாத கட்சி பிரிவின் திறந்த மனம் கொண்ட கலகத்தலைவராய் இருந்திருக்கக் கூடும்.

இ. அந்த நபர் செய்தவற்றால் தான் தனிப்பட்ட விதத்தில் துக்கப்பட்டதாக பவுல் கூறுவதின்மூலம் இது வெளிப்படுகிறது. இந்த துக்கமோ, ஒரு ஆவிக்குரிய தலைவரின் துக்கத்தைப்போன்றே, இயற்கையாகவே வழிந்தோடி, முழு சபையின் விசுவாசிகளை பாதிக்கிறது.

ஈ. வசனம்6. "அப்படிப்பட்டவனுக்கு அநேகரால் உண்டான இந்த தண்டனையே போதும்" "தண்டனை" என்பது, சபையிலுள்ள தனது குடியுரிமையை மீறுவதற்காக விசுவாசியின் மேல் போடப்பட்ட அபராதமாகும். கொரிந்து விசுவாசிகளில் அநேகர்:

1. ஐக்கியத்திலிருந்து அவனை விலக்கவும்.

2. சபையின் மற்ற அங்கத்தினரின் (குடிமகனின்) சாதாரண சலுகைகளை அவனுக்கு மறுக்கவும், வேண்டிய தேவையை ஒத்துக் கொண்டிருந்தனர்.

உ. அமெரிக்காவில், இன்று, உள்ளூர் சபைகளிலுள்ள கட்சிகள் மற்றும், பிரிவுகளின் கலகத்தலைவர்கள், சாதாரணமாக, அந்த சபையை விட்டு, வேறொரு சபைக்கு, தாங்கள் செய்தவற்றிற்கு ஒழுக்கப்படுத்தப்படாமலேயே சென்று விடுகின்றனர்.

ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசிக்கு மன்னிப்பும் ஆறுதலும் (2 கொரிந்தியர் 2:5-11)

பெற்றுக்கொள்ளுகிற சபையின் போதகர், தான் ஒரு புதிய குடும்பத்தை பெற்றுக்கொண்டதாக சாதாரணமாக மகிழ்ச்சியடைகிறார். ஆனால் ஆதி சபையிலே அவ்விதமாக நடக்கவில்லை; தற்கால சபையிலும் அவ்விதமாக நடக்கக் கூடாது எந்த விசுவாசிகளின் கூட்டத்திலும் ஐக்கியத்திற்கு சேர்த்துக்கொள்ளும் முன் குற்றத்தை எந்த சபையில் செய்தாரோ, அதே சபைக்கு குற்றவாளி அனுப்பப்பட்டு, தனது செய்கைகளுக்கு மனந்திரும்பச் செய்பவேண்டும்.

ஊ. ஆதி சபையிலே, ஒரு சமுதாயத்தில், ஒரு சபை மாத்திரமே இருந்தது. கட்சிகள் மற்றும் பிரிவுகளின் கலகத்தலைவர் என்று குற்றஞ்சாட்டப்பட்டு, ஐக்கியத்திலிருந்து விலக்கிவைக்கப்படுவது எவ்வளவு மோசமான காரியம் என்பதை உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? அந்த நபருக்கு போவதற்கு இடமேயிருக்காது! சபையின் ஆவிக்குரிய ஐக்கியத்துக்கு வெளியே தான் அவன் இருப்பான்?

அவன்: 1. உள்ளூர் சபைக்கு திரும்பி, துக்கத்திலும், மனந்திரும்புதலிலும் ஐக்கியத்திற்குள்ளே மீண்டும் சேர்த்துக்கொள்ளும்படி கேட்கவேண்டும். 2. அல்லது கிறிஸ்துவைவிட்டே போய்விட வேண்டும்.

2. ஒழுங்குப்படுத்தப்பட்ட விசுவாசி அதிக துக்கத்தில் அமிழ்ந்துப் போகாதபடிக்கு, அவன் மன்னிக்கப்பட்டு, ஆறுதல் செய்யப்படவேண்டும் (2:7-10).

அ. வசனம் 7. "நீங்கள் அவனுக்கு மன்னித்து ஆறுதல் செய்பவேண்டும்." குற்றவாளி, உண்மையான துக்கத்தையும், மனந்திருப்புதலையும் காண்பிப்பானானால், முழு சபையாலும் அவன் மன்னிக்கப்பட்டு, ஆறுதல்படுத்தப்பட வேண்டும். "மன்னிப்பது" என்பது இலவசமாய் தயவாயிருப்பதின் மூலம் நிபந்தனையற்ற உதவியை காண்பிப்பதே. "ஆறுதல்" என்பது நீங்கள் ஒருவரை தேற்றும்படியாக அவரை அருகில் வரும்படி அழைப்பதே.

ஆ. வசனம்7. "அவன் அதிக துக்கத்தில் அமிழ்ந்து போகாதபடிக்கு" இது செய்யப்படாவிட்டால், குற்றவாளி தனது துக்கத்தில் அமிழ்ந்து விடக்கூடும். (கவலை, இருதயத்தின் பாரம்).

"அமிழ்ந்துபோவது" என்பது ஒரு உஷ்ணமான நாளில், ஒரு கிண்ணி குளிர்ந்த தண்ணீர் குடிப்பதுபோல் அவன் முழுமையாய் துக்கத்தினால் மூழ்கடிக்கப்படுவான்.

இ. வசனம்9. "நீங்கள் எல்லாவற்றிலேயும் கீழ்ப்படிந்திருக்கிறீர்களோ என்று உங்களைச் சோதித்தறியும்படி இப்படி எழுதினேன்" பவுல் கேட்டதின் பேரிலேயே குற்றவாளியை கொரிந்து விசுவாசிகள் தண்டித்திருக்கிறார்கள் என்று தெளிவாகிறது. கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் தன்னை இன்னும் தங்களுக்குள் ஏற்றுக்கொள்வார்களோ என்று ஒரு வேளை சந்தேகம் கொண்ட பவுலுக்கு, இது பெருக்கமான நிம்மதியைக் கொடுத்திருக்கும். அவர்கள் இன்னும் தன்னை மேற்பார்வையாளராக, கிறிஸ்துவின் உண்மையான சீஷனாக கருதினார்கள் என்பதை அது காட்டியது.

ஈ. வசனம் 10 "எவனுக்கு நீங்கள் மன்னிக்கிறீர்களோ, அவனுக்கு நானும் மன்னிக்கிறேன்"

ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசிக்கு மன்னிப்பும் ஆறுதலும் (2 கொரிந்தியர் 2:5-11)

குற்றவாளியை மன்னிப்பதில் கொரிந்து சபையிலுள்ள விசுவாசிகள் முன்னணி வகிக்கவேண்டும் என்று பவுல் விரும்புகிறார். கிறிஸ்துவுக்குள் உள்ள தங்கள் உறவிலும், ஒருவருக்கொருவர் உள்ள உறவிலும் அவர்கள் முதிர்ச்சியடையவேண்டும் என்று அவர் எப்பொழுதும் நம்பிக் கொண்டிருக்கிறார். இந்த முதிர்ச்சியை பேணிவளர்க்க அவருக்கு இது ஒரு தங்கமான சந்தர்ப்பமாகும். இவையெல்லாவற்றின் மூலம், கொரிந்து விசுவாசிகளுடன் தனக்கு உண்டான தனிப்பட்ட உறவை பெலப்படுத்த அவர் விரும்புகிறார்.

உ. வசனம் 10 "மன்னிப்பதற்கு ஏதேனும் உண்டானால்" குற்றத்தினால் தான் அனுபவித்த காயத்தை, சொல்லப்பட்ட தகுதியற்றதாக பாவிக்கிறார். ஒரு குற்றத்திற்காக, ஒரு விசுவாசியிடம் இன்னொரு விசுவாசி வந்து உண்மையாய் மன்னிப்பு கேட்கும்போது இவ்விதம் தான் பெரும்பாலான விசுவாசிகள் நடந்துக்கொள்கிறார்கள். தங்களது குற்றங்களை தாங்கள் கிறிஸ்துவிடம் ஒத்துக்கொள்ளும்போது, கிறிஸ்து அவ்விதமே தங்களிடம் நடந்துக்கொண்டதால், அவர்களும் இவ்விதம் செய்கிறார்கள். (2கொரிந்தியர் 3:13; எபேசியர் 4:32).

ஊ. வசனம் 10 அ "மேலும் எதை நான் மன்னித்திருக்கிறேனோ, அதை .....கிறிஸ்துவினுடைய சந்நிதானத்திலே மன்னித்திருக்கிறேன்" "கிறிஸ்துவின் சந்நிதானத்திலே" என்றால் "கிறிஸ்துவின் பிரசன்னத்திலே" என்று பொருள்படும்.

கிறிஸ்து எப்பொழுதும் பிரசன்னராயிருந்து, தமது சபையினுள் நடக்கின்ற எல்லாவற்றையும் அறிந்திருக்கிறார். மேலும், நாம் எல்லாரும் அறிந்திருக்கிறபடி, நமக்கு விரோதமான பாவம் செய்த அவர்களை மன்னிக்காவிட்டால், நமது பரமபிதாவும், நாம் அவருக்கு விரோதமாக பாவம் செய்யும் போது நம்மை மன்னிக்கமாட்டார் (மத்தேயு 6:14-15, 18:21-35).

3. நம்மை மோசம் போக்க ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசியை சாத்தான் பயன்படுத்த முடியும் (2:10-11).

அ. வசனம் 10-11. " உங்கள் நிமித்தம்.. சாத்தானால் நாம் மோசம் போகாதபடிக்கு". "உங்கள் நிமித்தம்" என்றால், குற்றவாளியை, கொரிந்து விசுவாசிகளின் நிமித்தம், பவுல் மன்னித்திருக்கிறார் என்று அர்த்தம்.

ஆ. சாத்தான் நம்மை "மோசம் போக்காதபடிக்கு" என்றால் நம்மை மேற்கொள்ள நாம் கொண்டிருக்கிற நிலையை தான் பெற; தந்திரத்தின் மூலம் நம்மைவிட மேம்பட்ட நிலையை அடைய என்று அர்த்தம். இந்த சம்பவத்திலே, குற்றவாளிக்கு விரோதமாக மன்னியாமலிருப்பதன் மூலமாகவும் உண்மையில் அவன் மனஸ்தாபப்பட்டு, தனது குற்றத்திற்காக மனந்திரும்பும்போது, அவனை தங்களது ஐக்கியத்தில் மீண்டும் சேர்த்துக்கொள்ளாமலிருப்பதன் மூலமாகவும், சாத்தான் பவுலையும், கொரிந்து விசுவாசிகளையும் மோசம் போக்கக் கூடும்.

இ. வசனம் 11. "அவனது தந்திரங்கள் நமக்கு தெரியாதவைகள் அல்லவே". "தந்திரங்கள்" என்று இங்கு சொல்லப்படுவது, நோக்கங்கள், மனதில் போடப்பட்ட திட்டங்கள், மனதின் ஊடாய் போகக்கூடிய சிந்தனைகள் என்று பொருள்படும்.

ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசிக்கு மன்னிப்பும் ஆறுதலும் (2 கொரிந்தியர் 2:5-11)

இந்த சம்பவத்திலே, தனிப்பட்ட விசுவாசிகளையும், விசுவாசிகளின் சபைகளையும் ஏமாற்றும்படியாக சாத்தான் யோசிக்கும் திட்டங்களும், நோக்கங்களுமாகும். இந்த நிருபத்திலே, பிசாசின் சில திட்டங்களை பவுல் குறிப்பிடுகிறார். *(3:14,4:4, 10:5, 11:3).*

ஈ. ஒவ்வொரு சபையாக விட்டு இன்னொரு சபைக்கு போகச் செய்வதின் மூலம் பல விசுவாசிகளை சாத்தான் ஏமாற்றிக்கொண்டிருக்கிறான். இதனால், அவர்கள்

1. மற்ற விசுவாசிகளிடத்தில்

2. ஆவிக்குரிய தலைவர்களிடத்தில்

3. குறிப்பிட்ட பகுதியை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்துவதில்

4. தேசீய மற்றும் வெளிநாட்டு மிஷனெரி முயற்சிகளுக்கு அடுத்த விஷத்தில்.

5. தங்களுக்கே, வார்த்தையிலும், கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்திலும் முதிர்ச்சி அடைய தவறுகின்ற விஷயத்திலும்.... பொறுப்புள்ளவர்களாகிறதில்லை.

கிறிஸ்துவுக்காக அவர்கள் பயனற்றவர்களாகவும், வல்லமையற்றவார்களாகவும், இருப்பது மாத்திரமல்ல, அவர்கள் ஒரு பிரச்சனைக்குள் சிக்கும்போது, அதிலிருந்து அவர்களை விடுவிப்பதற்கு அவர்களுக்கு யாரும் இல்லாமல் இருக்கிறது.

உ. எபேசியருக்கு எழுதின நிருபத்தில், பவுல் கூறுகிறார், "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுத வர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள், ஆவிக்குரிய சர்வாயுத வர்க்கத்தின் ஏழு பகுதிகளைக் குறித்து கூறி அவர் தொடருகிறார். "கிறிஸ்து உங்களுக்கு மன்னித்ததுபோல, நீங்கள் ஒருவரையொருவர் மன்னியுங்கள்'' என்று அவர் சேர்த்து சொல்லியிருக்கலாம்.

முடிவுரை

அ. ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசி முழு சபைக்கும் துக்கத்தின் காரணமாயிருக்கிறான். ஆனாலும் அவன் உண்மையான துக்கத்தையும், மனந்திரும்புதலையும் காண்பிக்கும்போது, அவன் மன்னிக்கப்பட்டு, ஆறுதல் படுத்தப்பட வேண்டும்.

இது, சாத்தானால் நாம் ஏமாற்றப்படுவதைதடுத்து, நம்மில் சிலரை நரக அக்கினிக்கு இழப்பதையும் தடுக்கும்! கிறிஸ்துவோடு, நம்முடைய பரம பிதாவோடும் சரியான உறவிலும் இதுநம்மை வைத்துக்கொள்ளும்!.

ஆ. இந்த வேதப்பகுதியிலே, பவுல் குறிப்பிடுகிற நபரோ அல்லது குற்றமோ எதுவாயிருப்பினும், தலைமைத்துவத்திற்கும், சபையின் மற்ற அங்கத்தினர்களுக்கும் விரோதமாக குற்றம் செய்யும் ஒரு அங்கத்தினரை (அல்லது விசுவாசியை) புதிய ஏற்பாட்டின் ஒழுக்கப்படுத்தும் முறையின் நுண்ணறிவு நமக்கு உண்டாகிறது.

1. இரண்டு அல்லது மூன்று சாட்சிகளின் ஆதாரம் இருந்தாலொழிய, இன்னொரு விசுவாசியின் மேல் சொல்லப்படும் குற்றச்சாட்டு ஏற்றுக்கொள்ளப்படக்கூடாது. (மத்தேயு 18:15-6; 2கொரிந்தியர் 13:1, 1தீமோத்தேயு 5:19).

ஒழுக்கப்படுத்தப்பட்ட விசுவாசிக்கு மன்னிப்பும் ஆறுதலும் (2 கொரிந்தியர் 2:5-11)

2. இந்த முறையில் காரியத்தை தீர்த்து வைக்க முடியாவிட்டால், இது முழு சபைக்கும் முன்பாக கொண்டு வரப்பட்டு, அந்த நபர் பகிரங்கமாக கடிந்துகொள்ளப்பட வேண்டும். (சபைக்குள்ளே) (மத்தேயு 18:17, 1தீமோத்தேயு5:20).

3. சபையின் உண்மைத்துவத்தை பாதுகாக்கவும், மற்றவர்கள் இந்த குற்றத்தை பார்த்து பின்பற்றாதபடிக்கும், குற்றவாளி, விசுவாசிகளின் ஐக்கியத்திலிருந்து விலக்கப்பட வேண்டும். (1கொரிந்தியர் 5:1-7).

4. ஒரு பொருத்தமான காலகட்டத்திற்கு பின்னால், குற்றவாளி துக்கப்பட்டு, மனந்திரும்பினால், அவன் மன்னிக்கப்பட்டு, ஆறுதல்படுத்தப்பட்டு, ஐக்கியத்திற்குள்ளே, அன்பின் ஆவியோடு கூட மீண்டும் சேர்த்துக்கொள்ளப்பட வேண்டும். (2கொரிந்தியர் 2:7-8, கலாத்தியர் 6:1).

கிறிஸ்துவின் வாசனை
2 கொரிந்தியர் 2:14-17

முகவுரை

அ. இந்த நாளுக்கான பாடத்திற்குரிய வேத வசனங்களுக்கு முன்பு, பவுல்:

1. முரட்டாட்டமான சிலரை சந்திக்கவேண்டியிருக்கும் என்பதால் கொரிந்துவுக்கு இன்னொரு முறை தான் போவதை தாமதித்ததை விளக்குகிறார்.

2. தன் ஒழுக்கமற்ற நடக்கைக்காக ஒழுக்கப்படுத்தப்பட்ட நபரை மீண்டும் சேர்த்துக்கொள்ளுமாறு, சபைக்கு உத்தரவிடுகிறார்.

3. தன்னுடைய மிஷனெரி பயண விவரத்தின் ஒரு பகுதியை தான் ஏன் மாற்றினார் என்ற விளக்குகிறார்; துரோவாவிலே தங்காமல், மக்கேதோனியாவிற்கு பயணம் செய்ததை.

ஆ. பின்பு, திடீரென்று, கிறிஸ்துவின் சுவிசேஷத்தை உலகம் முழுவதிலும் பரப்புகையில், நாம் வெற்றி சிறந்ததற்காக அவர் தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்த ஆரம்பிக்கிறார். ரோம எதிரிகளை வெற்றி கொண்ட போரிலிருந்து திரும்பும் ஒரு தளபதி, மற்றும் அவரது வீரர்களுக்கு, இதை அவர் ஒப்பிடுகிறார். வழியிலே பலவிதமான தடைகளும், ஏமாற்றங்களும் உண்டு; ஆனால் நாம் கிறிஸ்துவோடு கூடிய வெற்றியின் ஊர்வலத்தில் இருக்கிறோம்.

1. கிறிஸ்துவின் வாசனை நம்மூலமாக, மனிதருக்குள் தேவன் வெளிப்படுத்துகிறார் (2:14)

அ. "கிறிஸ்துவோடு கூடிய வெற்றியின் ஊர்வலத்தில் நம்மை எப்பொழுதும் நடத்துகிற தேவனுக்கு எப்பொழுதும் ஸ்தோத்திரமுண்டாவதாக". பட்டணத்தின் தலைநகரின் வீதிகளிலே தன்னுடைய வீரர்களையும், கைதிகளையும் கொண்டு செல்லும் ஒரு வெற்றி பெற்ற தளபதியை இங்கு உருவகமாக கூறப்பட்டுள்ளது. வெற்றியோடு திரும்பிய தளபதிக்கும் அவரது சேனைக்கும், கொண்டாட்டமும், குதூகலமுமான காலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆ. கொலோசெயருக்கு தான் எழுதிய நிருபத்தில், பவுல் இவ்வாறு நமக்கு கூறுகிறார்.

"இயேசு, துரைத்தனங்களையும், அதிகாரங்களையும் உரிந்துக்கொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்தார்" (கொலோசெயர் 2:15)

இ. இயேசு தனது வீரர்களையும், பிசாசையும் அவனது பொல்லாத தூதர்களையும் கட்டப்பட்டவர்களாக, இந்த உலகத்தின் பட்டணங்களுக்குள்ளே கொண்டு போவதை வேதத்தின் இந்த வசனம் படம் வரைந்துக் காட்டுகிறது. எல்லா பொல்லாத வல்லமைகளின் மேலும், கிறிஸ்துவும் அவருடைய ஜனங்களும் முழு வெற்றி கொள்வதை, ஜனங்கள் பார்க்கும்போது ஆச்சரியமடைகிறார்கள்.

ஈ. அதே விதத்தில், தேவனும் எப்பொழுதும் நம்மை கிறிஸ்துவுக்குள்ளான வெற்றியின் ஊர்வலத்தில் நடத்துகிறார். எதிராளியோடு நாம் ஆவிக்குரிய யுத்தத்தில் ஈடுபடும் போது, நாம் கிறிஸ்துவுக்குள் வெற்றியடைகிறோம். கிறிஸ்துவுடன் வெற்றியின் ஊர்வலத்தில் நாம் செல்லும்போது, காண்கிற ஜனங்கள் முற்றிலுமாய் ஆச்சரியப்படுகிறார்கள்!

கிறிஸ்துவின் வாசனை
2 கொரிந்தியர் 2:14-17

தொடர்ச்சியாக நாம் அவருக்காக யுத்தம் செய்வதை காணும் நமது நண்பர்கள், பக்கத்துவீட்டுக்காரர்கள் மற்றும் உறவினர்களுக்கும் இது முக்கியமாக உண்மையாகும்.

உ. வழியிலே ஏற்படும் தடைகள் மற்றும் ஏமாற்றங்கள் எதுவாயிருப்பினும், நாம் கிறிஸ்துவுக்குள் வெற்றியடைகிறோம். பவுல் சொல்லுகிறார், "இவையெல்லாவற்றிலேயும், நாம், நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர் களாயிருக்கிறோமே (இருப்போமே)" (ரோமர் 8:37)

ஊ. சுவிசேஷத்திற்காக நாம் யுத்தம் செய்யும்போது, நம்மேல் தோல்வியைக் கொண்டுவர எதற்கும் அதிகாரமில்லை:

1. மரணமோ அல்லது ஜீவனோ - மரணம் தேவனிடம் நம்மை கொண்டு செல்லுகிறது.

2. இந்த பிரபஞ்சத்தின் பிசாசுகளோ அல்லது வான மண்டலத்திலுள்ள பிசாசுகளோ - கிறிஸ்து அவர்களை சிலுவையிலே வெற்றிச் சிறந்தார்.

3. நிகழ்காரியங்களோ அல்லது வருங்காரியங்களோ

4. அறியப்படாத அதிகாரங்களோ அல்லது அறியப்பட்ட அதிகாரங்களோ

5. மேலே வானத்திலுள்ளவைகளோ, கீழே பாதாளத்திலுள்ளவைகளோ - தேவனுடைய கட்டுக்களை விட்டுப் போக முடியாது.

6. தேவனுடைய சிருஷ்டிப்பிலுள்ள வேறெந்த காரியமானாலும் - ஏதேனும் விடப்பட்டு இருந்தால், அதுவும் சேர்த்துக் கொள்ளப்படுகிறது. கிறிஸ்துவின் மூலமாய் நாம் எல்லாவற்றிலேயும், முற்றிலுமாய் எல்லாவற்றிலேயும் ஜெயங்கொள்ளுவோம். (ரோமர் 8:38-39)!

எ. "எல்லா இடங்களிலேயும் எங்களைக் கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிறார்" தெருக்களிலே மக்கள் வாசனைப்பொருட்களை எரிப்பதும், வெற்றிப் பெற்ற தளபதியும் அவரது வீரர்களும், தங்களது யுத்தத்தின் கைதிகளை காண்பித்து பட்டணத்தின் வீதிகளில் அணிவகுத்து செல்வதும், ஆகியவற்றுடன், இந்த உருவகம் வருகிறது.

ஏ. அதே விதத்திலே, தேவன் நம்மூலமாக, கிறிஸ்துவின் வாசனையை நாம் போகும் இடமெல்லாம் பரப்புகிறார். கிறிஸ்துவை அறிகிற அறிவு மற்றும் கல்வாரியில் எல்லா பொல்லாத வல்லமைகளுக்கு மேலும் அவர் பெற்ற முழு வெற்றி ஆகியவற்றின் இனியதும் மற்றும் பிரியமுமான மணத்தால், காற்று நிரம்பியிருக்கிறது.

2. நாம் கிறிஸ்துவின் மணத்தை மக்கள் மத்தியில் பரப்பும்போது, தேவனுக்கு பிரியமான நற்கந்தமாயிருக்கிறோம் (2:15-16)

அ. வசனம் 15. "நாங்கள் தேவனுக்கு கிறிஸ்துவின் நற்கந்தமாயிருக்கிறோம்" கிறிஸ்துவின் சீஷர்கள், கிறிஸ்துவின் மணத்தை மக்கள் மத்தியில் பரப்பும்போது, ஆசரிப்பு கூடாரத்தில் தேவனிடத்தில் இனியதும் மற்றும் பிரியமுமான தூபத்தின் வாசனை எழும்புவதை போலிருக்கிறது.

கிறிஸ்துவின் வாசனை
2 கொரிந்தியர் 2:14-17

ஆ. இந்த வசனத்தை எழுதும்போது, பவுல் ஒரு வேளை பொன் தூபபீடத்தை மனதில் கொண்டிருக்கக்கூடும். (யாத்திராகமம் 30:1-3, 7-8). "பரிசுத்த ஸ்தலத்தையும்", "மகா பரிசுத்த ஸ்தலம்" மற்றும் தேவ பிரசன்னத்தையும் பிரிக்கும் திரைச்சீலையினூடே எப்பொழுதும் தூபத்தின் நற்கந்தம் வீசும்படியாக, ஒவ்வொரு காலையிலும், மாலையிலும் பிரதான ஆசாரியரால் சுகந்த தூபம் காட்டப்பட வேண்டும்.

இ. பழைய ஏற்பாட்டின் "தகனபலியை" ஒருவேளை பவுல் மனதில் கொண்டிருக்கக்கூடும். (லேவியராகமம் 1:1-17). தகனபலியானது முற்றிலுமாய் நெருப்பினால் தகனிக்கப்படவேண்டிய ஒரு காளை, கடா அல்லது ஆண்பறவையாக இருக்கும். அது, ஆராதனையின் ஒரு சுயவிருப்பதின் செய்கையாகவும், தேவனுக்கு வெளிப்படுத்தும், பக்தி, ஒப்புக்கொடுத்தல் மற்றும் அர்ப்பணிப்பாக இருக்கும். (லேவியராகமம் 1:13).

ஈ. வசனம் 16. "ஒருவருக்கு, மரண வாசனையாகவும், இன்னொருவருக்கு ஜீவ வாசனையாகவும் இருக்கிறோம். நாம் சுவிசேஷ செய்தியை பறைசாற்றும் போது, அதற்கு இரண்டு பதில்களுண்டு. ஒவ்வொரு பதிலும் ஒரு வித்தியாசமான வாசனைக்கு ஒப்பாயிருக்கிறது.

1. அதை மறுக்கிறவர்களுக்கு, மரித்த மனிதர்களைப் போல, நாற்றத்தை வெளிப்படுத்துகிறது.

2. அதை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்படுகிறவர் களுக்கு, இளவேனிற் காலத்தின் முதற்பூக்களின் மணத்தைப்போலிருக்கிறது.

உ. இயேசுவை இந்த உலகிற்கு யோவான்ஸ்நானகன் அறிமுகப்படுத்தியபோது, "என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார்... அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்" என்றான். (லூக்கா 3:16), இதினால் அவன் அர்த்தப்படுத்தியது.

1. இயேசுவையும், சுவிசேஷ செய்தியையும் ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானங் கொடுக்கப்படுவார்கள் (மூழ்கடிக்கப்படுவார்கள்). அவர்களுடைய ஆவிகளில் ஒரு புதிய பிறப்பை பரிசுத்த ஆவியானவர் உண்டாக்கி, அவர்களுக்குள் தங்குவார். கிறிஸ்துவுக்குள் அவர்கள் புதிய வாழ்க்கை வாழ்ந்த, தேவனுடைய குடும்பத்தின் அங்கத்தினர்களாவார்கள்.

2. கிறிஸ்துவையும், அவரது செய்தியையும் நிராகரிப்பவர்கள், தேவனுடைய அக்கினியான நியாயத்தீர்ப்பிலே ஞானஸ்நானங் கொடுக்கப்படுவார்கள் (மூழ்கடிக்கப்படுவார்கள்). அவர்கள் நித்தியம் முழுவதிலும் அவரிடத்திலிருந்து பிரிக்கப்படுவார்கள்.

ஊ. ரோமரிலும் இதை பவுல் கூறும் போது இந்த வேறுபாட்டை காண்பிக்கிறார். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்" (ரோமர் 6:23).

எ. விதைக்கிறவனுடைய உவமையிலே, வழியருகே விழுந்தவையும், கற்பாறைகளிலும், முட்களிலும் விழுந்தவையுமாகிய சுவிசேஷத்தின் பல விதைகளைக் குறித்து நமக்கு சொல்லப்படுகிறது.

ஒரு சிலவையே நல்ல நிலத்தில் விழுகின்றன (மத்தேயு 13:3-8)

கிறிஸ்துவின் வாசனை
2 கொரிந்தியர் 2:14-17

ஏ. சுவிசேஷத்திற்கு வரும் பலன் எதுவாயிருப்பினும், அதன் பறைசாற்றுதலே பிதாவாகிய தேவனுக்கு மகிழ்ச்சியாக (பிரியமான நற்கந்தமாக) இருக்கிறது. ஏனென்றால், அது, அவர் நேசிக்கின்றவரும், மனுகுலத்திற்கு அவரது திட்டங்களின் நிறைவேறுதலுமாயிருக்கிற குமாரனை மையமாக கொண்டுள்ளது. அதை பறைசாற்றுகிறவர்கள், திரைச்சீலைக்கு மறுபுரத்திலுள்ள தூபபீடத்திலிருந்து, மகா பரிசுத்த ஸ்லத்திற்குள் கடந்துச் சென்ற தூபத்தைப் போலிருக்கிறார்கள்.

3. தேவனுடைய வல்லமையாலே, கிறிஸ்துவின் மணம், நம்மூலமாய் மனிதருக்குள் பரவுகிறது (2:16-17)

அ. வசனம் 16. "இவைகளை நடப்பிக்கிறதற்கு எவன் தகுதியானவன்?" தடைகள், ஏமாற்றங்கள் மற்றும் உபத்திரவங்களுக்கிடையில் சுவிசேஷ செய்தியை பறைசாற்றுவதே இங்கு குறிக்கப்பட்டுள்ளது. பவுலின் கேள்விக்கு, மூன்றாம் அதிகாரத்தில் பதில் வருகிறது: "நாங்கள் எங்களாலே தகுதியானவர்கள் அல்ல; எங்களுடைய தகுதி தேவனால் உண்டாகிறது".

"புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரராயிருக்கும்படி, அவரே எங்களைத் தகுதியுள்ளவர்களாக்கினார்" (2 கொரிந்தியர் 3:5-6)

ஆ. 1. பவுல், கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்திலே "என் பேச்சும், என் பிரசங்கமும்.... ஆவியினாலும், பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது (1கொரிந்தியர் 2:4) என்று நமக்கு கூறுகிறார்.

2. கொரிந்தியருக்கு எழுதின இரண்டாம் நிருபத்திலே, பவுல், "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல், தேவனால் உண்டாயிருக்கிறது" (2கொரிந்தியர் 4:7) என்று கூறுகிறார்.

3. ரோமருக்கு எழுதிய நிருபத்திலே, "ஆவியின் பிரமாணம் (வல்லமை), மரணத்திற்கேதுவான (அதனிடம் நடத்தக்கூடிய) பாவ பிரமாணத்தினின்று (வல்லமை) விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2)

ஒரு அவிசுவாசியை பாவத்தின் வல்லமையிலிருந்து விடுவித்து, கிறிஸ்துவினிடத்தில் நடத்தும் வேலைக்கு சரியானவர் பரிசுத்த ஆவியானவரே. (யோவான் 16:8-11)

இ. வசனம் 17. "அநேகரைப்போல, நாங்கள் தேவ வசனத்தைக் இலாபத்திற்காக கலப்பாய்ப் பேசுவதில்லை". பவுலை கொரிந்துவில் எதிர்த்து, தங்களது தவறான போதனைகளுக்காக கிரயம் தரும்படி கேட்ட பல யூதமார்க்கத்தாரை (பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணத்திற்கு இணங்கும்படிக்கும் இரட்சிப்புக்கு கிறிஸ்துவின்மேல் விசுவாசம் வைக்கும்படியாக பலவந்தம் செப்பும் மனந்திரும்பிய யூதர்களை) இது குறிக்கும் (2கொரிந்தியர் 11:13). எந்த கிரயத்தையும் பெற்றுக்கொள்ளாமல், பவுல் சுவிசேஷத்தை கொரிந்துவில் பிரசங்கித்தார். அவர் அவர்களோடு இருந்தபோது, அவரது தேவைகள் மற்ற சபைகளால் சந்திக்கப்பட்டன (2கொரிந்தியர் 11:7-9)

ஈ. வசனம் 17. "கிறிஸ்துவுக்குள் தேவசந்நிதியில் பேசுகிறோம்". ஐந்தாம் அதிகாரத்தில், "தேவன்.... ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார். ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறதுபோல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாதிபதிகளாயிருக்கிறோம்" (2 கொரிந்தியர் 5:19-20)

கிறிஸ்துவின் வாசனை
2 கொரிந்தியர் 2:14-17

உ. வசனம் 17. "தேவனால் அனுப்பப்பட்ட மனிதராய்" கலாத்தியருக்கு எழுதின நிருபத்தில் மட்டும், தான் சுவிசேஷ செய்தியை அறிவிக்கும்படி, தேவனால் அனுப்பப்பட்டதாக பவுல் பறை சாற்றுகிறார். "பவுல்..... இயேசுகிறிஸ்துவினாலும், பிதாவாகிய தேவனாலும் அனுப்பப்பட்டவன்.....தம்முடைய கிருபையினால் அழைத்த தேவன் தம்முடைய குமாரனை நான்.... அறிவிக்கும்படியாக" (கலாத்தியர் 1:1,12, 15-16).

ஊ. பவுலை எவ்விதமாய் தேவன் அழைத்து, அதிகாரம் கொடுத்தாரோ, அதே விதமாய் கிறிஸ்து நம்மையும் அழைத்து, சுவிசேஷ செய்தியை உலகம் முழுவதற்கும், தெய்வீக வல்லமையோடு பறைசாற்றும்படியாக, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தின் மூலமாய் அதிகாரம் கொடுத்திருக்கிறார்! (அப்போஸ்தலர் 1:8)

முடிவுரை

அ. 1. தேவன் கிறிஸ்துவின் மணத்தை மனுஷருக்குள் நம்மூலமாய் பரப்புகிறார்.

2. மனுஷருக்குள், கிறிஸ்துவின் மணத்தைப் நாம் பரப்பும்போது பிதாவாகிய தேவனுக்கு பிரியமான நற்கந்தமாயிருக்கிறோம்.

3. நம்மூலமாய் மனுஷருக்குள் கிறிஸ்துவின் மணம் பரப்பப்படுவது பரிசுத்த ஆவியின் வல்லமையினாலேயே.

ஆ. நம்முடைய நண்பர்கள், பக்கத்துவீட்டுக்காரர்கள் மற்றும் உறவினர்களிடத்தில் நாம் சுவிசேஷ செய்தியை பரப்பும் போது, பலவிதமான எதிர்விளைவுகள் இருக்கும் என்பதை நாம் பார்க்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறார்; தடைகளும், ஏமாற்றங்களும் கூட இருக்கும். ஆனாலும், அவ்வாறு நாம் செய்யும்போது, அவருடைய சமூகத்தில் மிதக்கும் பிரியமான நற்கந்தம் போலிருக்கும்.

இ. புதிய ஆண்டின், இந்த முதல் ஞாயிற்றுக்கிழமையிலே, நம்மை அர்பணிப்பதற்கென்று ஏதோ ஒன்றை இது நம்மெல்லாருக்கும் தருகிறது.

கிறிஸ்துவின் மூலமாய் மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமுள்ள மகிமை

2 கொரிந்தியர் 3:7-18

முகவுரை

அ. வேதத்தின் இந்தப் பகுதியிலே, பழைய ஏற்பாட்டின் நியாயபிரமாணத்தோடு சீனாய் மலையிலிருந்து இறங்கிப் போது, மோசேயின் முகத்திலிருந்து தேவ மகிமையை, கிறிஸ்துவின் மூலமாய் மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகிமையை ஒப்பிடுகிறார் (யாத்திராகமம் 34:29-35)

ஆ. மோசேயின் முகத்தில் பிரதிபலித்த தேவ மகிமையைப் பார்க்கிலும், புதிய உடன்படிக்கையின் மகிமை இன்னும் மகிமையானது. அவனுடைய முகத்திலிருந்து மகிமை சில காலத்திற்குப்பின் மறைந்தது. தங்கி தரிக்கின்ற பரிசுத்த ஆவியானவரின் பரிசுத்தப்படுத்துகிற வேலையினாலான அதிகரிக்கும் மகிமையானது, ஒவ்வொரு விசுவாசியின் ஜீவியத்திலும், கிறிஸ்துவின் மூலமான புதிய உடன்படிக்கையின் மகிமையினாலே, வெளியரங்கமாகிறது.

1. பழைய உடன்படிக்கை கொடுக்கப்படும் போதிருந்த மகிமையிலும், இந்த புதிய உடன்படிக்கை மகத்துவமுள்ளது.

அ. வசனம் 7. "மரணத்துக்கேதுவான ஊழியம்..... மகிமையுடையதாயிருந்தது" "ஊழியம்" என்பது சீனாய் மலையிலே கல்லிலே செதுக்கப்பட்டிருந்த பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணமாகும்.

இஸ்ரவேலோடு கூடிய தேவனுடைய பழைய உடன்படிக்கையின் ஒப்பந்தத்தை அது கொண்டிருந்தது. அதின் எந்த ஒரு கட்டளையையும் உடைத்த ஒரு நபரை அது நியாயந்தீர்த்து, மரணத்துக்குள்ளாக ஆக்கினை தீர்ப்பளித்ததால், அது மரணத்துக்கேதுவான ஊழியம் (2:10 மற்றும் ரோமர் 3:20, 4:15, 5:13,20)

ஆ. வசனம் 7. "(பழைய உடன்படிக்கை) மகிமையோடு கூட வந்தது". "மகிமை" என்பது இங்கே பிரகாசம்; தேவனுடைய பொலிவு; இயற்கைக்கு அப்பாற்பட்டது, "ஷெக்கினா" அவரிலிருந்து வெளிவருகிற மகிமையாகும்.

சீனாய் மலையிலிருந்து, கற்பலகைகளை எடுத்துக் கொண்டு இறங்கிய மோசேயின் முகத்தில் பிரகாசித்த மகிமை இதுவே. (யாத்திராகமம் 34:29-30). ஆகவே, இஸ்ரவேலோடு கூடிய தேவனின் பழைய உடன்படிக்கையை கொண்ட பழைய ஏற்பாட்டின் நியாயபிரமாணம், சீனாய் மலையிலிருந்து, இறங்கியபோது, தேவனுடைய மகிமையை பிரதிபலித்த மோசேயின் மூலமாய் வந்தது.

இ. வசனம் 8. "ஒழிந்துப் போகிற மகிமையையுடைய" ஒரே சமயத்தில் அதிக நேரம் இஸ்ரவேலரால் மோசேயின் முகத்தைப் பார்க்கக்கூடாதபடிக்கு, அவனுடைய முகத்தில் பிரதிபலித்த தேவ மகிமையானது அவ்வளவு பிரகாசமாயிருந்தது. ஆனாலும் இந்த மகிமை சீக்கிரத்தில் மறைந்துப்போனது. எவ்வளவு நேரம் தேவ சமுகத்தை விட்டு மோசே இருந்தானோ, அவ்வளவிற்கு அதிகமாய் அவனுடைய முகத்திலிருந்து தேவ மகிமை மறைந்தது. ஒவ்வொரு முறை அவன் தேவ பிரசன்னத்திற்குள் போகும்போதும், மறுபடியும் அவனது முகம் தேவ மகிமையை பிரதிபலித்தது.

ஈ. தேவனுடைய ஷெக்கினா மகிமையை பிரதிபலித்த மோசேயின் மூலமாய் இஸ்ரவேலருக்கு கொண்டுவரப்பட்டதால்,

கிறிஸ்துவின் மூலமாய மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமுள்ள மகிமை

2 கொரிந்தியர் 3:7-18

பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் மகிமையுள்ளதாயிருந்தது. ஆனாலும், அதின் எந்த ஒரு கட்டளையையும் உடைப்பவனை அது மரணத்திற்கு ஏதுவாக ஆக்கினை தீர்ப்பளித்தது. இதனால் தான், கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய புதிய உடன்படிக்கையானது இன்னும் மகிமையுள்ளதாக தெரிகிறது. அது மரணத்திற்குப் பதிலாக;

1. விடுதலை (ஆக்கினை தீர்ப்பிலிருந்தும், மரணத்திலிருந்தும்)

2. தேவனுக்கு முன்பாக சரியான நிலையில் நிற்குதல்

3. பரிசுத்தமும், கிறிஸ்துவைபோலாகுதல் - ஆகியவற்றைக் கொண்டு வருகிறது.

மோசேயின் முகத்தில் பிரதிபலித்த மகிமைக்கும், புதிய உடன்படிக்கையின் மகிமைக்கும் எந்த ஒப்புமையுமில்லை.

உ. வசனம் 8-10. "ஒழிந்து போகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?" கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய புதிய உடன்படிக்கையானது, விசுவாசிக்கிற யாவருக்கும் நீதியைக் கொண்டு வருகிறது. "நீதி" என்பது:

1. இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து, தங்களது ஆவியிலே, பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பை அனுபவித்து, தேவனுக்கு முன்பாக சரியான நிலையில் இருப்பது (யோவான் 3:3-8; யோவான் 16:8-11)

2. விசுவாசியின் ஜீவியத்தில் பரிசுத்த ஆவியினால் எப்பொழுதும் வளர்க்கப்படுகின்ற பரிசுத்தமும், கிறிஸ்துவின் சாயலும், (ரோமர் 3:21,22, 1கொரிந்தியர் 1:30, 2கொரிந்தியர் 5:21) என்று பொருள்படும்.

ஊ. வசனம் 11. "அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே!" மோசேயின்

17. நான் எகிப்தியரை ஜாதிகளுக்குள்ளே சிதறடித்து, அவர்களை தேசங்களுக்குள்ளே தூற்றிவிடுவேன்.

18. நாற்பது வருஷம் முடியும்போது, நான் எகிப்தியரை அவர்கள் சிதறுண்டிருக்கிற ஜனங்களிடத்திலிருந்து சேர்த்துக் கொள்வேன். (எசே 29:13).

19. எகிப்தியரின் சிறையிருப்பைத் திருப்புவேன். (எசே 29:14).

20. அவர்களை அவர்களுடைய ஜநநதேசமாகிய பத்ரோஸ் தேசத்திலே திரும்பி வரப்பண்ணுவேன்.

21. அங்கே அவர்கள் அற்ப ராஜ்யமாயிருப்பார்கள்.

22. அது மற்ற ராஜ்யங்களிலும் அற்பமானதாயிருக்கும் (எசே 29:15).

23. அது இனி ஜாதிகளின்மேல் தன்னை உயர்த்தாது.

கிறிஸ்துவின் மூலமாய் மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமுள்ள மகிமை

2 கொரிந்தியர் 3:7-18

பழைய ஏற்பாட்டின் நியாயப்பிரமாணம் மகிமையுள்ளதாயிருந்தது. ஆனாலும், அதின் எந்த ஒரு கட்டளையையும் உடைப்பவனை அது மரணத்திற்கு ஏதுவாக ஆக்கினை தீர்ப்பளித்தது. இதனால் தான், கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய புதிய உடன்படிக்கையானது இன்னும் மகிமையுள்ளதாக தெரிகிறது. அது மரணத்திற்குப் பதிலாக;

1. விடுதலை (ஆக்கினை தீர்ப்பிலிருந்தும், மரணத்திலிருந்தும்)

2. தேவனுக்கு முன்பாக சரியான நிலையில் நிற்குதல்

3. பரிசுத்தமும், கிறிஸ்துவைபோலாகுதல் - ஆகியவற்றைக் கொண்டு வருகிறது.

மோசேயின் முகத்தில் பிரதிபலித்த மகிமைக்கும், புதிய உடன்படிக்கையின் மகிமைக்கும் எந்த ஒப்புமையுமில்லை.

உ. வசனம் 8-10. "ஒழிந்து போகிற மகிமையையுடைய அந்த ஊழியம் அப்படிப்பட்ட மகிமையுள்ளதாயிருந்தால், ஆவிக்குரிய ஊழியம் எவ்வளவு அதிக மகிமையுள்ளதாயிருக்கும்?" கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய புதிய உடன்படிக்கையானது, விசுவாசிக்கிற யாவருக்கும் நீதியைக் கொண்டு வருகிறது. "நீதி" என்பது:

1. இயேசுவின் மேல் விசுவாசம் வைத்து, தங்களது ஆவியிலே, பரிசுத்த ஆவியினால் மறுபிறப்பை அனுபவித்து, தேவனுக்கு முன்பாக சரியான நிலையில் இருப்பது (யோவான் 3:3-8; யோவான் 16:8-11)

2. விசுவாசியின் ஜீவியத்தில் பரிசுத்த ஆவியினால் எப்பொழுதும் வளர்க்கப்படுகின்ற பரிசுத்தமும், கிறிஸ்துவின் சாயலும், (ரோமர் 3:21,22, 1கொரிந்தியர் 1:30, 2கொரிந்தியர் 5:21) என்று பொருள்படும்.

ஊ. வசனம் 11. "அன்றியும் ஒழிந்து போவதே மகிமையுள்ளதாயிருந்ததானால், நிலைத்திருப்பது அதிக மகிமையுள்ளதாயிருக்குமே." மோசேயின் முகத்திலிருந்து தேவ மகிமை ஒழிந்து போனதை பழைய உடன்படிக்கைக்கு பவுல் ஒப்பிடுகிறார். அது ஒழிந்து போனது. "நிலைத்திருப்பது" என்பது கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலமாய் ஏற்படுத்தப்பட்ட தேவனுடைய புதிய உடன்படிக்கையே (எரேமியா 31:31-34; லூக்கா 22:20) கிறிஸ்து தமது சபைக்காக வரும்வரைக்கும் அது நடையிலிருக்கும். ஆகவே அது மகிமையில் சிறந்தது.

நாம் பார்க்கப்போகும் வண்ணம், அது விசுவாசிகளுக்கு விடுதலையையும், கிறிஸ்துவுக்கொப்பான நிலையையும் கொண்டு வருவதால், அது மகிமையுள்ளது.

2. புதிய உடன்படிக்கையானது, விசுவாசிக்கு விடுதலையைக் கொண்டு வருகிறது (3:12-17)

அ. வசனம் 12. "நாங்கள் இப்படிப்பட்ட நம்பிக்கையை உடையவர்களாதலால்" "நம்பிக்கை" என்றால் எதிர்நோக்குவது, எதிர்ப்பார்ப்பது, எதிர்காலத்திற்கு ஏதோ ஒரு நன்மையைக் குறித்து தைரியம் கொள்வது என்று பொருள்படும்.

கிறிஸ்துவின் மூலமாய் மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமுள்ள மகிமை

2 கொரிந்தியர் 3:7-18

பரிசுத்த ஆவியின் ஊழியத்தின் மூலமாய் நாம் இப்பொழுது உணரும் கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய புதிய உடன்படிக்கையை குறித்ததாகவுள்ளது (வசனம் 8-9). இது நம்மொருவருக்கும்:

1. ஆக்கினைத்தீர்ப்பு மற்றும் மரணம் (நரகத்தில் நித்தியத்திற்கு தேவனிடத்திலிருந்து பிரிவு) ஆகியவற்றிலிருந்து விடுதலை

2. மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுதலுக்கான வாக்குத்தத்தமும், மகிமைபடைந்த சரீரம்.

3. கிறிஸ்து மற்றும் பிதாவின் சமுகத்தில், புதிய எருசலேமில் நித்திய ஜீவன் ஆகியவற்றைக் கொண்டு வருகிறது.

இது நமக்கு பெரிய நம்பிக்கையை உண்டு பண்ணுகிறது. முக்கியமாக, ஆக்கினைத்தீர்ப்பு மற்றும் மரணம் (நரகத்தில் தேவனிடமிருந்ததான நித்திய பிரிவு) ஆகியவற்றைக் கொண்டு வரும் நியாயப்பிரமாண ஊழியத்தின் கீழிருப்போருடன் ஒப்பிடும்போது (வசனம் 7)

ஆ. வசனம் 12. இதினிமித்தம் "நாங்கள் தைரியங்கொண்டிருக்கிறோம்", கிறிஸ்து மூலமாய் உண்டான புதிய உடன்படிக்கையில் உள்ளடங்கிய தேவ வாக்குத்தத்தங்களிலுள்ள நமது நம்பிக்கை, உறுதியைக் கொடுத்து, நம்மை தைரியமுள்ளவர்களாக்குகிறது.

எப்படிப்பட்ட பின்விளைவுகளை நாம் சந்திக்க வேண்டியிருந்தாலும், சுவிசேஷ செய்தியை, ஒன்றையும் மறைக்காமல், வெளியரங்கமாக, திறந்த மனதுடனும், உள்ளதை உள்ளபடியேயும் நாம் பறை சாற்றுகிறோம்.

இ. ஜெபித்து, பரிசுத்த ஆவியின் ஒரு புதிய அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்ட பிறகு, இந்த தைரியம் தான் ஆதி சீஷர்களுடைய வாழ்க்கையிலும், சுவிசேஷ ஊழியத்திலும் காணப்பட்டது. (அப்போஸ்தலர் 4:31, அப்போஸ்தலர் 7-ஸ்தேவான்; அப்போஸ்தலர் 21-பவுல்)

ஈ. வசனம் 13. "மோசே தன் முகத்தின் மேல் முக்காடு போட்டுக் கொண்டதுபோல நாங்கள் போகிறதில்லை". கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய புதிய உடன்படிக்கையைக் குறித்து நாங்கள் பெருமைபடைகிறோம். அது நம்முடைய நித்திய நம்பிக்கையாயிருக்கிறது. நாமும், ஆதி சீஷர்களைப்போல ஒருநாளும் மறுதலிக்கவோ, மற்றவர்களிடம் தைரியமாய் பறைசாற்றவோ தவறமாட்டோம்.

உ. வசனம் 14-16. "அவர்களுடைய மனது கடினப்பட்டது; இந்நாள் வரைக்கும் பழைய ஏற்பாடு வாசிக்கப்படுகையில், அந்த முக்காடு நீங்காமல் இருக்கிறது...முக்காடு அவர்கள் இருதயத்தின் மேல் இருக்கிறது" மறுபுறத்தில் இஸ்ரவேலரோ, பழைய உடன்படிக்கை மறைந்துவிட்டது; இன்னும் நடைமுறையிலில்லை என்று உணரவேயில்லை. (எபிரெயர் 8:13). மோசேயின் முகத்தை இஸ்ரவேலர் பார்ப்பதைத் தடுத்த முக்காட்டைப் போல, இந்த உண்மை அவர்களிடத்திலிருந்து மறைக்கப்பட்டுள்ளது. (ரோமர் 11:7-8,25).

ஊ. வசனம் 14-16. "கிறிஸ்துவில் மட்டுமே அது எடுப்பட்டுப்போனது". எப்பொழுது ஒருவன் கர்த்தரிடத்தில் திரும்புகிறானோ, முக்காடு எடுக்கப்படுகிறது". யூத தேசமானது, கல்வாரியின் உண்மையை ஏற்றுக் கொள்ளவேயில்லை.

கிறிஸ்துவின் மூலமாய் மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமுள்ள மகிமை

2 கொரிந்தியர் 3:7-18

அவர்களுடைய ஒரே நம்பிக்கை, கிறிஸ்துவிடம் திரும்புவதே. "இரட்சிப்பானது (யூதருக்கும், புறஜாதியாருக்கும் ஒரேவிதமாக) வேறு எவராலும் உண்டாகிறதில்லை. ஏனென்றால் வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே, அவருடைய நாமமேயல்லாமல், நாம் இரட்சிக்கப்படுவதற்கு வேறே நாமம் கட்டளையிடப்படவில்லை". (அப்போஸ்தலர் 4:12; யோவான்14:6).

எ. வசனம் 17. "கர்த்தரே ஆவியானவர்" பிதாவும் குமாரனும் ஒன்றாயிருக்கிறதுபோல ஆவியோடு கர்த்தர் (இயேசு) ஒன்றாயிருக்கிறார். (யோவான் 10:30; 17:21) ஆகவே பரிசுத்த ஆவியானவர் இருக்கும் பட்சத்தில், கிறிஸ்துவின் செல்வாக்கு வெளிப்படுத்தப்படுகிறது. திரித்துவத்தின் ஒரு நபர் பிரசன்னமாயிருக்கும்போது, மற்ற இரு நபர்களும் கூட அங்கு பிரசன்னமாயிருக்கின்றனர். அந்த மூன்றும் ஒரே ஆள்தத்துவமாய், ஒரே இயல்பாய் இருக்கின்றனர். (உபாகமம் 6:4; 4:35; மத்தேயு3:16-17; 28:19; யோவான் 14:16-17; 1கொரிந்தியர் 12:4-6; 2கொரிந்தியர் 13:14). ஆகவே "கர்த்தர்" மற்றும் "ஆவியானவர்" என்ற பதங்கள் பரிமாற்றம் செய்யப்பட்டு உபயோகிக்கப்படக்கூடியவை. (அப்போஸ்தலர் 5:3-4-இல் "பரிசுத்த ஆவியானவர்" மற்றும் "பிதாவாகிய தேவன்" ஆகிய பதங்களை பேதுரு பரிமாற்றம் செய்வதை பார்க்கவும்).

ஏ. ஏசாயா 17 "கர்த்தருடைய ஆவி-எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு" "விடுதலை" என்று இங்கு கூறப்படுவது தேவ பிரசன்னத்திற்குச் செல்ல விடுதலை, பாவத்தின் விளைவுகளிலிருந்து (ஆக்கினைத்தீர்ப்பு மற்றும் மரணம்-நித்தியத்திற்கு தேவனிடத்திலிருந்து பிரிவு) விடுதலை என்று பொருள்படும். பவுல், ரோமரில், "அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள்" என்று கூறுகிறார் (ரோமர் 8:15) "கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் (வல்லமை) என்னை மரணத்திற்கேதுவான (அதற்கு நேராக நடத்தும்) பாவத்தின் பிரமாணத்தினின்று (வல்லமை) விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2). பரிசுத்த ஆவியானவர் இப்பொழுது ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் தங்குகிறார் (ரோமர் 8:9, 1கொரிந்தியர் 12:13).

இதனாலே நமக்கு விடுதலையுண்டு! தேவனுக்கு ஸ்தோத்திரம்!

1. ஆக்கினைத்தீர்ப்பு மற்றும் மரணத்திலிருந்து விடுதலையும், அகிலத்தை உருவாக்கி, தாங்குகிற ஒருவரோடு தனிப்பட்ட விதத்தில் உறவாடுவதற்கான விடுதலையும், நாம் தைரியமாய் பேசக்கூடிய ஒன்றாகும். நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

3. புதிய உடன்படிக்கையானது கிறிஸ்துவின் சாயலை விசுவாசிக்கு கொண்டுவருகிறது (3:18).

அ. நாம் முக்காடிடப்படாத முகங்களோடு, கர்த்தருடைய மகிமையை பிரதிபலிக்கிறோம்".

"கர்த்தருடைய மகிமை" என்பது கர்த்தரின் தார்மீக பண்பையும், அவர் வாழ்ந்த விதத்தையும் குறிக்கிறது. "பிரதிபலிப்பது" என்பது கண்ணாடியில் ஒரு சாயலைப் பார்ப்பது போலாகும்.

கிறிஸ்துவின் மூலமாய் மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமுள்ள மகிமை

2 கொரிந்தியர் 3:7-18

ஆ. சீனாய் மலையிலிருந்து இரு கற்பலகைகளோடு மோசே இறங்கியப்போது, அவன் கர்த்தரோடிருந்தபடியால், அவனது முகம் பிரகாசித்தது. கர்த்தருடைய பிரகாசத்தையும், மகிமையையும் அவன் பிரதிபலித்தான். ஆனால் இந்த பிரகாசம் சீக்கிரம் மறைந்தது. கர்த்தருடைய பிரசன்னத்திற்கு தான் மறுபடியும் செல்லும் வரை இதை இஸ்ரவேலரிடத்திலிருந்து மறைக்க மோசே தன் முகத்தின்மேல் முக்காடிட்டுக் கொண்டான். (யாத்திராகமம் 34:29-35).

இ. விசுவாசிகளோ, மோசேயைப் போல் அல்லாமல், தங்கள் முகங்களின்மேல் முக்காடிட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை. அவர்கள் எப்போதுமே கர்த்தரின் தார்மீக பண்பையும், வாழ்க்கையையும் பிரதிபலிக்கிறார்கள். நம் சொந்த சாயலை கண்ணாடியிலே பிரதிபலிப்பது போல, நாம் கிறிஸ்துவின் தார்மீக பண்பையும், வாழ்க்கை முறையையும் இந்த உலகிற்கு பிரதிபலிக்கிறோம்.

ஈ. நாமும் அவருடைய சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமைபடைந்து மறுரூபப்படுகிறோம். "மறுரூபமாக்கப்படுவது" என்பது அடிப்படையான மாற்றம் அடைவது; முற்றிலுமாய் மாறுவதாகும்.

தற்காலத்தில் நாம் கிறிஸ்துவின் தார்மீக பண்பையும், வாழ்க்கையையும் பிரதிபலிப்பதோடல்லாமல், இன்னும் முழுமையாய் :

1. அவரது தார்மீக பண்பை பிரதிபலிக்கவும்,

2. அவர் வாழ்ந்த வாழ்க்கையை வாழவும், நாம் தொடர்ச்சியாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

உ. தனது இரண்டாவது நிருபத்திலே பேதுரு, "உங்கள் விசுவாசத்தோடே தைரியத்தையும், தைரியத்தோடே ஞானத்தையும், ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவ பக்தியையும், தேவ பக்தியோடே சகோதர சிநேகத்தையும், சகோதர சிநேகத்தோடே அன்பையும் கூட்டி வழங்குங்கள்" (2பேதுரு 1:5-7).

நாம் கிறிஸ்துவில் வளருகிறோம். அவரைப்போல நாம் ஆவதில் ஒரு வளர்ச்சி முறை உண்டு; (ரோமர் 5:3).

ஊ. "ஆவியாயிருக்கிற கர்த்தராலே, உண்டாயிருக்கிறது" வாசமாயிருக்கிற பரிசுத்த ஆவியானவரின் வேலையே இவையெல்லாம். கிறிஸ்து பரிசுத்த ஆவியின் மூலமாய் தற்பொழுது தனது சீஷர்களோடு பூமியிலிருக்கிறார். (யோவான்14:15-20,23). பேதுரு நமக்கு சொல்லுகிறார் "ஜீவனுக்கும் தேவபக்திக்கும் வேண்டிய யாவற்றையும் அவருடைய (கிறிஸ்துவினுடைய) திவ்விய வல்லமையானது நமக்கு தந்தருளினது" (2பேதுரு1:3). இயேசுவை தங்களது ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளுகிறவர் களுக்குள் வாழும்படிக்கு வரும் பரிசுத்த ஆவியின் வல்லமையை இங்கு அவர் குறிப்பிடுகிறார்.

கிறிஸ்துவின் மூலமாய் மனிதவர்க்கத்துடனான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகத்துவமுள்ள மகிமை

2 கொரிந்தியர் 3:7-18

எ. பரிசுத்த ஆவியானவர்:

1. மரண தீர்ப்பிலிருந்து விடுவிப்பவர்.

2. நமது ஆவிகளில் மறுபடியும் புதுப்பித்தலை உண்டாக்குகிறவர்.

3. பரலோகத்திலுள்ள பிதாவினிடத்தில் சேர விடுதலையளிப்பவர்

4. நமது வாழ்க்கையில் தொடர்ந்து கிரியை செய்து கிறிஸ்துவின் சாயலில் நம்மை மேலும் மேலும் மாற்றுகிறவர்.

(வசனம் 8:10; பிலிப்பியர் 2:13, கலாத்தியர் 5:22-25; எபிரெயர் 2:11).

நம்முடைய பங்கானது, யார் நம்முடைய ஜீவியத்தில் வேலை செய்கிறார் என்ன செய்ய முயற்சிக்கிறார் என்பதை உணர்ந்து, அதை அவர் செய்யும்படி இடங்கொடுக்கவேண்டும். (தனிப்பட்ட விதத்திலேயும், இணைக்கப்பட்ட விதத்திலேயும்).

முடிவுரை

அ. மோசேயின் மூலமாய் நிறுவப்பட்ட பழைய உடன்படிக்கையின் மகிமையைப் பார்க்கிலும், கிறிஸ்துவின் மூலமான தேவனுடைய புதிய உடன்படிக்கையின் மகிமையானது மகத்துவமுள்ளது.

ஆ. பழைய உடன்படிக்கையைப் போலல்லாமல், புதிய உடன்படிக்கையானது, விசுவாசிக்கு.

1. பிதாவினிடத்தில் சேர்வதற்கு விடுதலையைக் கொண்டு வருகிறது.

2. பாவத்தின் விளைவிலிருந்து (ஆக்கினைத்தீர்ப்பு மற்றும் மரணத்திலிருந்து) விடுதலையைக் கொண்டுவருகிறது.

3. கிறிஸ்துவின் சாயலைக் கொண்டு வருகிறது.

இ. புதிய உடன்படிக்கையின் மூலமாய் நமக்கு கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தங்களாலேயும், அது நமக்கு கொடுக்கிற நம்பிக்கையினாலும், நாம் அதை தைரியமாக மற்றவர்களுக்கு பறைசாற்றுகிறோம். நாம் விரும்புவது எல்லாரும்

1. பிதாவாகிய தேவனிடத்தில் உறவாட விடுதலை பெறவும்.

2. பாவத்தின் விளைவுகளான குற்ற உணர்வு, ஆக்கினைத் தீர்ப்பு, மற்றும் மரணத்திலிருந்து விடுதலை பெறவுமே

சுவிசேஷத்தின் பொக்கிஷம்

(2 கொரிந்தியர் 4:7-18)

முகவுரை

அ. தேவ பிரசன்னத்தில் சீனாய் மலையிலிருந்தபின்னர் மோசேயின் முகத்தில் பிரகாசித்த ஒளியோடு, கிறிஸ்துவின் முகத்தில் பிரகாசித்த ஒளியை ஒப்பிட்டு, வேதத்தின் இந்த பகுதியை பவுல் அறிமுகப்படுத்துகிறார். (4:6). மோசேயின் முகத்தில் பிரகாசித்த தேவ மகிமை கொஞ்சம் கொஞ்சமாக மறைந்தது (3:13). பரலோகத்திலிருந்து (தேவ பிரசன்னம்) பூலோகத்திற்கு வந்த கிறிஸ்துவும், தேவ மகிமையை தனது முகத்தில் பிரதிபலித்தார். ஆனால் இந்த மகிமையானது, மோசேயின் முகத்தில் காணப்பட்ட மகிமையைப் போல, மறைந்து போகவில்லை.

ஆ. கிறிஸ்துவின் முகத்தின் ஒளியானது, விசுவாசத்தினால் வருகிற இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் காட்டுகிறது. பவுலின் இருதயத்தில் இப்பொழுது பிரகாசித்து, அவனது மண்பாண்டமாகிய சரீரத்தில் கொண்டிருந்து "பொக்கிஷம்" உலகிற்கு அறிவிக்கும்படி நம்மெல்லாரும் அழைப்பு விடுவித்துள்ள கிறிஸ்துவின் ஒப்புரவாக்கும் செய்தி" இதுவே.

1. சுவிசேஷத்தின் பொக்கிஷத்தை நாம் மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம் (4:7-12).

அ. வசனம் 7 "இந்த பொக்கிஷத்தை மண்பாண்டங் களில் பெற்றிருக்கிறோம்". நாம் சொன்னபடி, "பொக்கிஷமானது" கிறிஸ்துவில் (மட்டுமே) கொண்டிருக்கிற விசுவாசத்தினாலான இரட்சிப்பின் சுவிசேஷம்.

பவுலும் இந்த "பொக்கிஷத்தை" "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள் அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கினார்" (5:19).

ஆ. "மண்பாண்டங்கள்" என்பவை, விசுவாசிகளின் சரீரங்களே. தேவன் சொன்னபடி "நீ மண்ணாயிருக்கிறாய்; மண்ணுக்குத் திரும்புவாய்" (ஆதியாகமம் 3:19). யாக்கோபு நமக்கு நினைப்பூட்டுகிறார். "உங்கள் ஜீவன்...கொஞ்சக் காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே" - பெலவீனமும், கடந்துபோகிறதுமான மண் பாண்டங்களிலுள்ள, வாழ்க்கையை மாற்றுகிற சுவிசேஷம்.

இ. "சுவிசேஷ பொக்கிஷத்தை" "மண்பாண்டங்களில்" பெற்றிருப்பதற்கு, ஒரு நல்ல உவமை வங்கிகள், மற்றும் பாதுகாப்பு பெட்டகங்களை நம்புமுன், அமெரிக்க நாட்டின் மக்கள், பொன், வெள்ளி ஆகிய பொக்கிஷத்தை, தகர டப்பிகளில் போட்டு, தரையில் புதைப்பதாகும். கொரிந்துவே, பவுலின் நாட்களில், பணக்காரர், வெள்ளியையும், பொன்னையும் தான், குறைந்த மதிப்புள்ள மண்பாண்டங்களில் சேமித்து வைப்பார்கள்.

ஈ. வசனம் 7. "இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிரு க்கிறதென்று விளங்கும்படி" நம்முடைய தற்கால பலவீனமானதும் கடந்தபோகிற தன்மையையுடையதுமான மனுஷ சரீரங்களை நாம் புரிந்துக் கொள்வோமானால், மனுஷர்களை அவர்களது பாவங்களினின்று விடுவிக்கும் சுவிசேஷத்தின் வல்லமையானது நம்மிடத்திலிருந்தல்ல, தேவனிடத்திலிருந்து வருகிறது என்பதை நாம் புரிந்து கொள்வோம். நம்முடைய எல்லா சரீர பெலமும் அறிவாற்றலின் பகுத்தறிவுத்திறனும், சாத்தானின் பிடியிலும், பாவ சுபாவத்திலுமிருந்து ஒரு ஆத்துமாவைக் கூட இரட்சிக்க முடியாது.

சுவிசேஷத்தின் பொக்கிஷம்

(2 கொரிந்தியர் 4:7-18)

உ. கொரிந்துவுக்கு எழுதிய தனது முதலாம் நிருபத்தில் பவுல் கூறுகிறார். "தேவனுடைய பைத்தியம் எனப்படுவது. மனுஷருடைய ஞானத்திலும் அதிக ஞானமாயிருக்கிறது; தேவனுடைய பலவீனம் எனப்படுவது மனுஷருடைய பலத்திலும் அதிக பலமாயிருக்கிறது" (1கொரிந்தியர் 1:25). ரோமருக்கு தான் எழுதிய நிருபத்தில் அவர் கூறுகிறார். "சுவிசேஷம்.... விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவ பெலனாயிருக்கிறது" (ரோமர் 1:16; 1கொரிந்தியர் 1:18; எபேசியர் 2:8-10).

ஊ. வசனம் 8-9 "நாங்கள் எப்பக்கத்திலும் நெருக்கப்பட்டும் ஒடுங்கிப்போகிறதில்லை". மனிதர்களை இரட்சிப்பதற்கான சுவிசேஷத்தின் வல்லமையானது, நம்மிடத்திருந்தல்ல, தேவனிடத்திலிருந்து வருகிறது என்பதை தெளிவாக பார்ப்பதற்கென்று உள்ள ஒரு வழிதான், நாம்:

1. எப்பக்கத்திலும் நெருக்கப்படுவது - எந்த வழியும் தோன்றாத கடினமான சூழ்நிலைகளுக்குள் விரட்டப்படுவது.

2. கலக்கமடைவது - வாழ்க்கையின் அடிப்படை தேவைகள் கூட சந்திக்கப்படாத பல சமயங்கள்.

3. துன்பப்படுத்தப்படுவது - நம்மை எதிர்ப்பவர்களால், ஒரு வேட்டையாடப்பட்ட மனிதனைப்போல இருப்பது.

4. கீழே தள்ளப்படுவது - மரண முனை வரைக்கும் சரீர உபாதைகளை அனுபவிப்பது.

சுவிசேஷத்தைமற்றவர்களுக்கு அறிவிக்கும் நம்மெல்லாருமே, பவுலோடு, தனிப்பட்ட விதத்தில் இந்த பிரச்சினைகளை அனுபவித்திருக்கிறோம். பவுலினுடையது போல, நமது பட்டியல் நீளமாயில்லாமலிருக்கலாம். ஆனால்நம்மெல்லாருக்கும்ஒன்றுண்டு. (2கொரிந்தியர் 11:23-29; அப்போஸ்தலர்14:19).

எ. கிறிஸ்துவின் சீஷர்கள் என்ற முறையில் நாம் சந்திக்கும் கஷ்டங்கள் மற்றும் பிரச்சனைகள் எதுவாயிருந்தாலும், பவுல், நாம்

1. ஒடுங்கிபோகிறதில்லை

2. நம்பிக்கை இழப்பதில்லை

3. கைவிடப்படுவதில்லை

4. முற்றிலும் அழிக்கப்படுவதில்லை என்று பறை சாற்றுகிறார்.

ஆனாலும் இப்படிப்பட்ட காரியங்கள் நமக்கு சம்பவிக்கின்றன என்ற உண்மையே நாம் எவ்வளவுபெலவீனமும்,தாக்குதலுக்கு உட்படக்கூடியவர்களாயும் நாம் இருக்கிறோம். என்றும்,ஜனங்களை இரட்சிக்கக்கூடிய சுவிசேஷத்தின் வல்லமையானது தேவனிடத்திலிருந்துவருகிறது,நம்மிடத்திலல்லஎன்பதையும் காட்டுகிறது.

ஏ. வசனம் 10-12 "இயேசுவின் மரணத்தை எப்பொழுதும்எங்கள்சரீரத்தில்சுமந்து திரிகிறோம்" இங்கேபவுல்கூறுவதின் அர்த்தம் என்னவென்றால், நாம்சுவிசேஷத்திற்காக அனுதினம் பாடுகளுக்கும், பிரச்சனைகளுக்கும் ஏதுவாகிறோம் என்பதே. பவுலோடு கூட, நாமும் கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும் "அனுதினமும் சாகிறோம்" (1கொரிந்தியர்15:30).சங்கீதத்திலிருந்து மேற்கோள் காட்டி அவர் கூறுகிறார் "உமது (கிறிஸ்துவின்) நிமித்தம்எந்நேரமும்கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும்ஆடுகளைப்போலஎண்ணப்படுகிறோம்" (ரோமர் 8:36).

சுவிசேஷத்தின் பொக்கிஷம்

(2 கொரிந்தியர் 4:7-18)

ஐ. வசனம் 10. "இயேசுவினுடைய ஜீவனும் எங்கள் சரீரத்திலே விளங்கும்படிக்கு". அநேக பாடுகளையும், கஷ்டங்களையும் நாம் சகிப்பதற்கு ஒரு காரணம், நம்முடைய மண்பாண்டங்களில் நாம் பெற்றிருக்கும் கிறிஸ்துவின் சுவிசேஷம் அறிவிக்கப்படுவதே. எப்படிப்பட்ட விளைவுகள் வந்தாலும் கிறிஸ்துவின் மிகப் பெரிய உத்தரவை நாம் நிறைவேற்ற, பவுலைப்போல உறுதி கொண்டிருக்கிறோம்.

1. முதலில் நம்முடைய நண்பர்கள், அயலகத்தார் மற்றும் உறவினர்களிடம்.

2. நம்முடைய பட்டணம், மாநிலம் மற்றும் தேசத்திலுள்ள மற்றவர்களுக்கு

3. உலகின் மற்ற நாடுகளிலுள்ள ஜனங்களுக்கு.

ஒ. வசனம்12. "இப்படி மரணமானது எங்களிடத்திலும், ஜீவனானது உங்களிடத்திலும் பெலன் செய்கிறது" தனது விவாதத்தின் முதல் பகுதியை பவுல் இப்போது முடிக்கிறார்.

மற்றவர்கள்:-

1. கிறிஸ்துவை கண்டடையும்படியாக

2. புதிய வாழ்க்கை வாழும்படியாக

3. விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் அவர் வாக்குத்தத்தம் பண்ணின மரித்தோரிலிருந்தான சரீர உயிர்த்தெழுதலையும், நித்திய ஜீவனையும் சுதந்தரிக்கும் படியாக, கிறிஸ்துவின் சீஷர்கள் தங்களை ஜீவபலிகளாக அர்ப்பணிக்கிறார்கள்.

2. சுவிசேஷத்தின் பொக்கிஷமாகிய எங்கள் ஊழியம், மனுஷனுக்கும், தேவனுக்கும் பலனுள்ளதாயிருக்கிறது (4:13-15).

அ. வசனம்13. "விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன்" என்று எழுதியிருக்கிறது. இது சங்கீதம் 116:10 இலிருந்து மேற்கோள் காட்டப்படுகிறது. தங்களுக்குள் தாபரிக்கின்ற பரிசுத்த ஆவியானவரால், எல்லா உண்மையான விசுவாசிகளும், கிறிஸ்துவிலுள்ள தங்கள் விசுவாசத்தை தன்னிச்சையாக வெளிப்படுத்தும்படி பலவந்தப்படுத்தப் படுகிறார்கள். தன்னுடைய விசுவாசத்தினால் பேசும்படியாக சங்கீதக்காரன் பலவந்தப்படுத்தப்படுவதுபோல, நாமும் நமது விசுவாசத்தினால் கிறிஸ்துவைக் குறித்து பேசும்படியாக பலவந்தப்படுத்தப்படுகிறோம்.

ஆ. வசனம் 14. "கர்த்தராகிய இயேசுவை எழுப்பினவர் எங்களையும் இயேசுவைக் கொண்டு எழுப்புவாரென்று அறிந்திருக்கிறோம்". "கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர்", பரிசுத்த ஆவியாகிய தேவனே. (ரோமர் 8:11; அப்போஸ்தலர் 2:24). சபையின் இரகசிய வருகையில், இயேசு வானத்தில் தோன்றும்போது, இதுவே ஒவ்வொரு உண்மையான விசுவாசியின் சரீரத்திற்கும் உண்டாகும் (1தெசலோனிக்கேயர் 4:16-17; 1கொரிந்தியர் 6:14; 15:51-52). மரித்தோரிலிருந்து நமது உயிர்த்தெழுதலின் நிச்சயத்தினாலேயே, நாம் நமக்கு எப்பக்கத்திலிருந்தும் வரும் உபத்திரவங்கள், கஷ்டங்களின் நடுவில் கிறிஸ்துவைக் குறித்த நமது சாட்சியை தைரியமாய் சொல்ல முடிகிறது.

சுவிசேஷத்தின் பொக்கிஷம்

(2 கொரிந்தியர் 4:7-18)

இ. வசனம் 14. "உங்களுடனேகூட தமக்கு முன்பாக நிறுத்துவர்". சபையின் இரகசிய வருகையிலே, பவுலும் அவருடனிருந்தவர்களோடு கூட, எல்லா விசுவாசிகளும், புதிதும், மகிமைபடைந்ததுமான சரீரங்களில் கிறிஸ்துவுக்கு முன்பாகநிறுத்தப்படுவார்கள்!.

ஈ. வசனம் 15. "இவையெல்லாம் உங்கள் நிமித்தம் உண்டாயிருக்கிறது"."இவை எல்லாம்" என்பது பவுலின் சுவிசேஷ ஊழியத்தோடு சம்பந்தப்பட்ட பாடுகளும், கஷ்டங்களையும் குறிக்கிறது. கொரிந்தியர்களும், மற்றவர்களும் கிறிஸ்துவைக் கண்டுக் கொண்டு, தங்களது உயிர்த்தெழுந்த மற்றும் மகிமைபடைந்த சரீரங்களைப் பெற்றுக்கொள்ளும் படியாக, இவை சகிக்கப்பட்டன.

உ. வசனம் 15. "தேவனுடைய மகிமை விளங்கு வதற்கேதுவாகக் கிருபையானது அநேகருடைய ஸ்தோத்திரத்தினாலே பெருகும்படிக்கு". சுவிசேஷத்தை அதிகமதிகமான குழுக்களுக்கும், உலகின் அதிகமான நாடுகளுக்கும் அறிவிக்கும்போது தனது ஜனங்கள் அனுபவிக்கிற வேதனைகளாலும், கஷ்டங்களாலும், நம்முடைய பரமபிதாவும் நம்மைபடைகிறார். கிறிஸ்துவின் மூலமாய், குற்ற உணர்வு மற்றும் ஆவிக்குரிய மரணத்திலிருந்து இந்த ஜனங்கள் விடுதலையைக் கண்டடைவார்களானால், தேவன் தமது ஈவான தயவை தங்களுக்கு காண்பிக்கிறதற்காக, அவர்கள் மகிமையை (பயபக்தி, உயர்ந்த மதிப்பு, ஸ்தோத்திரம் மற்றும் ஆராதனை) அவருக்கு கொடுக்க ஆரம்பிக்கிறார்கள்.

3. சுவிசேஷ பொக்கிஷத்தின் நமது ஊழியத்தின் விளைவானது நித்திய மற்றும் காணாத மகிமையை நாம் பெற்றுக்கொள்வதில் இருக்கும். (4:16-18).

அ. வசனம் 16. "ஆனபடியினாலே, நாங்கள் சோர்ந்து போகிறதில்லை". "சோர்ந்து போகிறது" என்றால், பெலவீனமாய், சோர்வாய், ஆவிக்குரிய ரீதியில் அதைரியப்படுவதாகும். கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும், நாம் பாடுகளையும், கஷ்டங்களையும் அனுபவிக்கும்போது, சோர்ந்துபோகாமலி ருப்பதற்கு இரண்டு காரணங்களையும் பவுல் கூறுகிறார்.

1. சபையின் இரகசிய வருகையில், மற்றவர்கள் கிறிஸ்துவைக் கண்டுகொண்டு, பாவம் மற்றும் மரணத்திலிருந்து விடுபட்டு, தங்கள் சரீரங்கள், உயிர்த்தெழுந்து, மகிமைபடைந்து கிறிஸ்துவுக்கு முன்பாக நிலைநிறுத்தப்படுவார்கள்.

2. நம்முடைய சாட்சியின் காரணமாக விசுவாசிக் கிறதான அநேக மக்கள், கிறிஸ்துவின் மூலமாய் தாங்கள் தேவனிடத்தில் பெற்ற ஈவான தயவிற்காக, தேவனை பயபக்தியோடு வணங்கி, உயர்வாக மதித்து, ஸ்தோத்தரித்து, ஆராதிப்பார்கள்.

ஆ. வசனம் 16. "எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது புதிதாக்கப்படுகிறது" நாம் "அழிந்துபோகிறோம்" என்று பவுல் கூறும்போது, சுவிசேஷத்திற்காகப் பாடுகள் மற்றும் உபத்திரவங்களாய் நம்முடைய சரீரங்கள் அழிக்கப்பட்டு, அவை அழுகிக்கொண்டேயிருக்கிற நிலையில் இருக்கின்றன என்று அர்த்தப்படுத்துகிறார்.

இ. "உள்ளான மனுஷன்" ஒரு மனுஷனுடைய ஆவிக்குரிய பகுதியாகும் நமது சரீரத்திற்கு முரணாக, அது புதிதாக்கப்படுகிறது.

சுவிசேஷத்தின் பொக்கிஷம்

(2 கொரிந்தியர் 4:7-18)

தூபரிக்கின்ற பரிசுத்த ஆவியின் வல்லமையாய் அது புதிதாக்கப்படுகிறது. என்று இது பொருள்படும். அது, கிறிஸ்துவின் சாயலாக, இன்னும் அதிகமதிகமாய் மகிமையடைவதாகும். (2கொரிந்தியர் 3:18, 2பேதுரு 1:5-7).

ஈ. வசனம் 17. "அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் சுவிசேஷ செய்தியை நாம் அறிவிக்கும்போது, சந்திக்கும் பாடுகளையும், கஷ்டங்களையும், இது குறிக்கிறது.

உ. வசனம் 17. "மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" "நித்திய கனமகிமை" என்பது கிறிஸ்து நம்மைக் குறித்த ஒரு உயர்ந்த எண்ணம் அல்லது மதிப்பீட்டைக் குறிக்கிறது. சுவிசேஷத்திற்காக, பாடுகளையும், கஷ்டங்களையும் நாம் சகிப்பதற்கு ஆயத்தமாயிருந்ததன் விளைவு. இது சுவிசேஷத்திற்காக நம்முடைய எல்லா உபத்திரவங்களையும், கஷ்டங்களையும், நாம் கிறிஸ்துவினிடத்திலிருந்து பெறப்போகிற "நித்திய கனமகிமையை" ஒப்பிடும்போது, அது உண்மையில் "அதிசீக்கிரத்தில் நீங்கும் லேசானதாக" தோன்றும். ரோமரில், பவுல் கூறுகிறார்: "இக்காலத்துப் பாடுகள் இனி நம்மிடத்தில் வெளிப்படும் மகிமைக்கு ஒப்பிடத்தக்கவைகள் அல்ல" (ரோமர் 8:18).

ஊ. வசனம் 18 மேலும் காணப்படுகிறவைகளையல்லகாணப்படாதவைகளை நோக்கியிருக்கிறோம்."காணப்படுகிறவைகள்" என்பது, சுவிசேஷத்திற்காக நாம் அனுபவிக்கும் தற்காலபாடுகளும்,கஷ்டங்களும், காணப்படாதவைகள்,நாம்இன்னும் அனுபவித்திராத கிறிஸ்துவின் நித்திய வாக்குத்தத்தங்கள்.

1. நம்மைக் குறித்த கிறிஸ்துவின் உயர்ந்த எண்ணமும், மதிப்பீடும்.

2. கிறிஸ்து, அவரது நியாயாசனத்தில் நமக்கு வெகுமதிகளைக் கொடுப்பது.

3. அழிவுள்ள நமது சரீரங்களின் உயிர்த்தெழுதல் (1தெசலோனிக்கேயர் 4:16-17; 1 கொரிந்தியர் 15:51-52).

4. பரலோகத்தில் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்ற பொக்கிஷங்கள்

5. கிறிஸ்து நமக்கு ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிற ஸ்தலம்; புதிய வானம், பூமி மற்றும் புதிய எருசலேம் (யோவா 14:2-3, வெளிப்படுத்தின விசேஷம் 21:1-2).

6. அவரை நேசிக்கிறவர்களுக்கென்று, தேவன் ஆயத்தப்படுத்தியவைகள் (1கொரிந்தியர் 2:9).

நம் கண்கள் நோக்கமாயிருக்கிற காரியங்கள் இவைகளே "கண்கள் நோக்கமாயிருப்பது" என்பது ஒரு குறிப்பிட்ட பொருளின் மேல் கவனம் செலுத்துவது.

எ. சுவிசேஷத்திற்காக நாம் சகிக்கும் பாடுகளும், கஷ்டங்களும் நம்மை இரட்சிப்பதில்லை. தேவனுடைய இரக்கத்தாலும், கிறிஸ்துவின் மேலுள்ள நம் நம்பிக்கையினாலும் நாம் இரட்சிக்கப்படுகிறோம் (எபேசியர் 2:8-9). நாம் இரட்சிக்கப்பட்டப்பின் செய்கின்ற நல்ல காரியங்களுக்காக, நம்மைக் குறித்த ஒரு உயர்வான எண்ணங்கொண்டு, கிறிஸ்து நமக்கு பலனளிப்பதில்லை. "நல்லது, உண்மையும், உத்தமமுள்ள ஊழியக்காரனே" என்று சொல்லக் கேட்பதே, இவையெல்லாவற்றையும் பயனுள்ளதாக்கும்!

சுவிசேஷத்தின் பொக்கிஷம்

(2 கொரிந்தியர் 4:7-18)

முடிவுரை

அ. அழிந்துபோகிறதும், கடந்துப்போகிறதுமான சரீரங்களில் சுவிசேஷத்தின் பொக்கிஷத்தை நாம் பெற்றிருக்கிறோம். மனிதர்களை இரட்சிப்பதற்கான வல்லமை, தேவனிடத்திலிருந்து வருகிறது, நம்மிடத்திலிருந்தல்ல என்பதை இது நிரூபிக்கிறது.

ஆ. நம்முடைய சுவிசேஷ ஊழியமானது தேவனுக்கும், மனிதனுக்கும் ஒருசேர பலனளிக்கிறது.

1. உலகம் முழுவதிலுமுள்ள மனுஷர்கள் பாவத்திலிருந்தும் அதன் விளைவுகளிலிருந்தும் இரட்சிக்கப்படுகிறார்கள்.

2. தேவன் தமது ஈவாகிய கிருபையை தங்களுக்கு காண்பித்ததற்காக, இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனுக்கு கனத்தையும், துதியையும் செலுத்துகிறார்கள்.

இதனாலேயே, நாம் சுவிசேஷத்திற்காக பாடுகளையும், கஷ்டங்களையும் சந்திக்கும்போது, சோர்ந்துப்போகிறதில்லை.

இ. இதற்கும் மேலாக, நமக்கு காணக்கூடாதவைகளும், நித்தியமுமான நன்மைகள் நமக்காக காத்திருக்கின்றன. “நல்லது, உண்மையும், உத்தமுமுள்ள ஊழியக்காரனே” என்று தமது நியாயாசனத்திற்கு முன் நாம் நிற்கும் போது சொல்லும்படியான ஒரு உயர்ந்த எண்ணத்தை, கிறிஸ்துவும், நம்மைப்பற்றி உருவாக்கிக் கொண்டிருக்கிறார். “சுவிசேஷத்தின் பொக்கிஷத்தை” நம்மில் வைத்து, அதை முழு உலகிற்கும் அறிவிக்கும்படியாக நமக்கு அனுமதி கொடுத்த தேவனுக்கு ஸ்தோத்திரம்.

ஒரு உண்மையான விசுவாசியின் ஏக்கங்கள்

2 கொரிந்தியர் 5:1-10

முகவுரை

அ. பரலோகத்திலிருந்து கிறிஸ்து தோன்றுவதையும், பரதீசில் நித்தியத்திற்கு அவரோடு தாங்கள் இருப்பதையும், உண்மையாக எதிர்நோக்கியிருக்கும் விசுவாசிகளின் உணர்வுகளை, இந்த குறுகிய வேத பகுதியிலே பவுல் பிரதிபலிக்கிறார். அவர்கள்.

1. உள்ளே தவித்து, தங்கள் உயிர்த்தெழுந்த, மகிமையடைந்த சரீரங்களை தரித்துக் கொள்ள வாஞ்சையாயிருக்கிறார்கள்.

2. இந்த தேகத்தை விட்டு குடிபோகவும், பரலோகத்தில் கர்த்தரோடு குடியிருக்கவும் விரும்புகிறார்கள்.

3. கர்த்தரை பிரியப்படுத்த என்ன செய்யமுடியுமோ அவை எல்லாவற்றையும் செய்கிறார்கள். ஏனென்றால், அவர்கள் இந்த தேகத்திலிருக்கும் போது செய்தவைகள், கிறிஸ்துவின் நியாயாசனத்தில், அதனுடைய தன்மைக்காகவும்,மேன்மைக்காகவும் நியாயந்தீர்க்கப்படும்என்பதை அறிந்திருக்கிறார்கள்.

1. இந்த கூடாரத்திலே நாம் தவித்து, பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம் (5:1-5).

அ. வசனம் 1 "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலை யல்லாத நித்திய வீடு பரலோகத்திலே நமக்கு உண்டு".

"பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு" என்பது நமது மனுஷ சரீரமே (2பேதுரு 1:13). அது பெலவீனமும், நலிந்ததும், அழியக்கூடியதுமாயிருப்பதால், நம்முடைய மரணத்தில் அது அழியும் (1 கொரிந்தியர் 15:42-44) "தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு" என்பது, மத்திய ஆகாயத்தில் கிறிஸ்து தமது சபைக்காக வரும்போது, நம்மொருவருக்கும் வாக்குத்தத்தம் செய்த அழியாததும், மகிமையானதும், வல்லமையானதும், சாவில்லாத உயிர்த்தெழுந்த சரீரமாகும் (1 தெசலோனிக்கேயர் 4:15-17; 1 கொரிந்தியர் 15:42-44, 52-53).

ஆ. வசனம் 2 "நாம் தவிக்கிறோம்" தங்களது பெரிய தேவனும், இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்து வருவதற்கும், தங்கள் மகிமையடைந்த சரீரங்களைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் விரும்புகிற விசுவாசிகளுக்கே உரித்தான செய்கை இது. "தவிப்பது" என்பது வார்த்தைகளினால் விவரிக்க முடியாத உள்ளான துக்கம் கொள்வது. இது சாதாரணமாக, செவிக் கெட்டாத பெருமூச்சினால் வெளிப்படுத்தப்படும்.

இ. சீலோவாவிலே ஆசாரியனாகிய ஏலியினால் கடிந்துக் கொள்ளப்பட்டபோது அன்னாளின் தவிப்பதைப் போன்று இது (1 சாமுவேல் 1:10,12-14)

நம்முடைய சரீரங்களில் மீட்புக்காக நாம் மட்டும் தவிக்கிறதில்லை; சர்வசிருஷ்டியும், தனது அழிவு மற்றும் நாசத்திலிருந்த விடுதலைக்காக ஏகமாய் தவிக்கிறது. (ரோமர் 8:22-23).

ஈ. வசனம் 2-3 "நம்முடைய பரம வாசஸ்தலத்தைத் தரித்துக்கொள்ள மிகவும் வாஞ்சையுள்ளவர்களாயிருக்கிறோம்... நிர்வாணிகளாய் காணப்படாதிருக்கும் படியாக" மரணத்தில், சரீரத்தை விட்டு கர்த்தரோடிருக்கும்படி ஆவி செல்லுவது, நிர்வாணியாய் இருக்கிற மனுஷனைப் போன்றதாகும்.

ஒரு உண்மையான விசுவாசியின் ஏக்கங்கள்

2 கொரிந்தியர் 5:1-10

ஆகவே நம்முடைய சரீரங்களின் உயிர்த்தெழுதலை, ஏதோ ஒரு மேலங்கி அல்லது வேறொரு வெளி ஆடையை நாம் போட்டுக் கொள்வதாக படம் பிடித்துக் காட்டுகிறார். நம்முடைய தவிப்பிற்கும், உயிர்த்தெழுந்த நம்முடைய சரீரங்களால் நாம் தரிப்பிக்கப்பட நாம் வாஞ்சைக்கும் நல்ல காரணங்கள் உண்டு.

1. நம்முடைய தற்கால வாழ்க்கையில் கஷ்டங்கள், மற்றும் உபத்திரவங்களுக்கு ஒரு முடிவை காண விரும்புகிறோம்.

2. நம்முடைய தற்கால நிரந்தரமற்ற சரீரங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன (4:16-18).

3. நாம் நிர்வாணிகளாய் காணப்பட விரும்பவில்லை; சரீரங்களற்ற நம்முடைய ஆவிகளோடு.

உ. வசனம் 4. இதனாலே நம்முடைய "மரணமானது (சரீரங்கள்) ஜீவனாலே விழுங்கப்படுவதற்கு" நாம் ஊக்கமாய் விரும்புகிறோம். "விழுங்கப்படுவது" என்பது முற்றிலும் உட்கொள்ளப்படுவது முழுவதும் பட்சிக்கப்படுவது என்று பொருள்படும். நம்முடைய தற்கால அழிவுள்ள சரீரங்கள், நித்திய ஜீவனால் முற்றிலுமாய் உட்கொள்ளப்பட்டு, பட்சிக்கப்படுவதை இது குறிக்கிறது. நம்முடைய தற்கால அழிவுள்ள சரீரங்கள், நித்தியகாலத்திற்காய், அழியாததாய், நாசமடையாததாய் மாறும்.

ஆண்டவராகிய கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த சரீரத்திற்கு முற்றிலும் ஒப்பாய் அவை முழுவதும் மாற்றப்படும். (1கொரிந்தியர் 15:53 பிலிப்பியர் 3:21).

ஊ. விசுவாசிக்கிற ஒவ்வொருவருக்கும் கிறிஸ்து வாக்குத்தத்தம் பண்ணினது இது. இதைதான் நாமும் எதிர்ப்பார்க்கிறோம் (யோவான் 6:40). சபையின் இரகசிய வருகையிலே நம்முடைய உயிர்த்தெழுந்த, மகிமைபடைந்த சரீரங்கள், நம்முடைய ஆவிகளோடு இணைக்கப்படும்!.

எ. வசனம் 5. "இதற்கு நம்மை ஆயத்தப்படுத்துகிறவர் தேவனே" "இதற்கு என்பது நம்முடைய மகிமைபடைந்த சரீரங்களை நாம் பெற்றுக்கொள்வதைக் குறிக்கிறது (ரோமர் 8:28-30). ஆதியிலே நோக்கங்கொண்டபடியே (ஆதியாகமம் 3:8 வெளிப்படுத்தின விசேஷம் 21:2-4). நாம் அவரோடு ஐக்கியம் கொள்ளுவதையும் (மகிமைபடைந்த சரீரமும், ஆவியும்), அவரது பிரசன்னத்தில் நித்திய காலமாயிருப்பதையும் கூட இது குறிக்கிறது.

ஏ. "ஆவியென்னும் அச்சாரத்தை நமக்கு தந்தவரும் அவரே," வரப்போகிறவைகளுக்கான உத்தரவாதத்தைத் தந்து. "அச்சாரத்தை தருவது" என்பது வாங்குகிற பொருளின் விலையின் முதல் தவணையை முன் பணமாகக் கொடுப்பது, எதிர்கால தவணைகள் வாக்குப்பண்ணினபடியே கொடுக்கப்படும் என்று பாதுகாப்பை (உத்தரவாதத்தை) கொடுப்பதாகும்.

ஐ. "ஆவியை அச்சாரமாக கொடுப்பது" என்பது பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைக் குறிக்கிறது. (லூக்கா 24:49; அப்போஸ்தலர் 1:8; 2:1-4) எபேசியரிலே பவுல் நமக்குக் கூறுகிறார். "நீங்களும் .... விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் (ஞானஸ்நானத்தால்) அவருக்குள் முத்திரைப்போடப்பட்டீர்கள் (உரிமையைக் காட்டுகின்ற) ..நம்முடைய சுதந்தரத்தின் அச்சாரமாயிருக்கிறார்"

ஒரு உண்மையான விசுவாசியின் ஏக்கங்கள்

2 கொரிந்தியர் 5:1-10

(எபேசியர் 1:13-14). கொரிந்துவிற்கு எழுதின இரண்டாம் நிருபத்திலே இதை, பவுல் "ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார்" அல்லது உரிமையை காட்டுகின்றதமது முத்திரையைக் கொடுத்திருக்கிறார் "என்று குறிப்பிடுகிறார் (2கொரிந்தியர் 1:22).

ஓ. பரிசுத்த ஆவியானவரால் நாம் புதுப்பிக்கப்பட்டு, அவர் நமக்குள் வாசம் செய்தபோது, தேவன் நம்மேல் உரிமை கொண்டார் (யோவான் 3:3-8) ரோமர் 8:9, 1கொரிந்தியர்6:19, 12:13) பின்னர் விசுவாசிகளை அவர்கள் கற்றறியாத பாஷையில் பேசுகின்றதான தொடக்க சாட்சியோடு, பரிசுத்த ஆவியில் ஞானஸ்நானம் கொடுப்பதின்மூலமாக இந்த உரிமையை அவர் வெளிப்படுத்துகிறார். (அப்போஸ்தலர் 2:4; அப்போஸ்தலர் 10:46, 19:6).

ஓ. இதுவே தேவன் நமக்கு கொடுக்கும் அடையாளச் சின்னம்; அவர் சொல்லும் விதம் "பரிசுத்த ஆவியில்ஞானஸ்நானமாகிய அச்சாரத்தை நான் உங்களுக்கு தந்ததுபோலவே, சபையின் இரகசிய வருகையில் என் குமாரனாகிய இயேசு கிறிஸ்து வெளிப்படும்போது, நான் உங்களுக்கு வாக்குப் பண்ணின மீதியையும் உங்களுக்கு கொடுப்பேன்" இந்த நேரத்தில், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்ப, பரிசுத்த ஆவியானவர்எந்தவல்லமையைபயன்படுத்தினாரோ, அதே வல்லமையை பயன்படுத்தி, நமது அழிந்து போகக்கூடிய சரீரங்களை மகிமைப்படுத்தி, கிறிஸ்துவின் மகிமையடைந்த சரீரத்திற்கு முற்றிலும் ஒப்பாய் மாற்றுவார் (ரோமர் 8:11, 1கொரிந்தியர் 6:14, பிலிப்பியர் 3:21).

2. இந்த தேகத்தை விட்டு குடிபோகும் போது, நாம் கர்த்தரிடத்தில் குடியிருப்போம் என்று தைரியமாயிருக்கிறோம் (5:6-8)

அ. வசனம் 6, 7. ஆகையால், "எப்பொழுதும் தைரியமாயிருக்கிறோம்" "ஆகையால்" என்பது நாம் மகிமையடைந்த நமது சரீரங்களைப் பெற்றுக்கொள்ளும் முதல் தவணையாக, பரிசுத்த ஆவிக்குள்ளாக ஞானஸ்நானம் பெறுவதைக் குறிக்கிறது. பரிசுத்த ஆவிக்குள்ளான ஞானஸ்நானமானது, தேவன் தங்களுக்கென்று திட்டம் பண்ணி வைத்திருக்கிற எல்லாவற்றையும்தாங்கள் பெற்றுக்கொள்வார்களென்றநிச்சயத்தைவிசுவாசிகளுக்குக் கொடுக்கிறது.

ஆ. "தைரியம்" என்ற பதமானது நல்ல மனோதிடத்தைகொள்வதையும்கர்த்தர் எல்லாவற்றையும் தனது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறார்என்ற அறிந்துக் கொள்வதையும் குறிக்கும் இது, முறையாக நம்மை:

1. சோதனைகள், உபத்திரவங்கள், கஷ்டங்களின் மத்தியில் ஊழியத்தை தொடர்ந்து செய்யவும்,

2. எதிர்காலத்தை எதிர்நோக்கவும், மரணத்தைக் குறித்து பயமின்றி சிந்திக்கவும், உதவுகிறது.

இ. வசனம் 67 "இந்தத் தேகத்தில் குடியிருக்கையில், கர்த்தரிடத்தில் குடியிராதவர்களாயிருக்கிறோமென்று, அறிந்தும் "தேகத்தில் குடியிருக்கையில்" என்பது நமது தற்பொழுதுள்ள மாம்ச சரீரங்களில் வாழ்வதைக் குறிக்கிறது. இதை பவுல் ஏற்கனவே "பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு" என்று குறிப்பிடுகிறார் (வசனம் 1) நம்முடைய ஆவிகள் நம்முடைய சரீரங்களில் இருக்குமட்டும் பரலோகத்திலுள்ள கர்த்தருடைய பிரசன்னத்தை விட்டு தள்ளியே அவைகள் இருக்கின்றன.

ஒரு உண்மையான விசுவாசியின் ஏக்கங்கள்

2 கொரிந்தியர் 5:1-10

ஈ. வசனம் 7, 6. "நாம் தரிசித்து நடவாமல், விசுவாசித்து நடக்கிறோம்" "விசுவாசமானது நம்பப் படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று எபிரெயரின் ஆசிரியர் நமக்கு கூறுகிறார் (எபிரெயர் 11:1).

நாம் இன்னும் கர்த்தரிடத்திற்கு செல்லவில்லை. அவரது மகிமைபடைந்த சரீரத்தில் நாம் இன்னும் அவரைப் பார்க்கவில்லை. ஆனால் விசுவாசத்தில் நாம்:

1. அவரைப்பார்த்து, அவரோடு இருப்போமென்றும்.

2. நம்முடைய தற்பொழுதுள்ள மாம்ச சரீரங்கள் மாறி, அவரது மகிமைபடைந்த சரீரத்தைப் போலாகும், என்று அறிந்திருக்கிறோம். (1கொரிந்தியர் 15:49).

உ. வசனம் 8. "நாம் தைரியமாகவேயிருந்து, இந்தத் தேகத்தை விட்டுக் குடிபோகவும், கர்த்தரிடத்தில் குடியிருக்கவும் அதிகமாய் விரும்புகிறோம்". இன்று நாம் இந்த சரீரத்திலிருக்கிறோம். ஆனாலும் இந்த சரீரத்தை விட்டுக்குடிபோய், கர்த்தரிடத்தில் பரலோகத்திலிருப்பதையே அதிகமாய் விரும்புகிறோம்!.

ஊ. பிலிப்பியரில் பவுல் கூறுகிறார். "சாவு எனக்கு ஆதாயம்...தேகத்தை விட்டுப் பிரிந்து கிறிஸ்துவுடனே கூட இருக்க எனக்கு ஆசையுண்டு" (பிலிப்பியர் 1:21,23).

பவுலுக்கும், நமக்கும்கூட, மரணம் என்பது, உடனடியாக கிறிஸ்துவின் பிரசன்னத்திற்கு எடுத்துச்செல்லப்படுவதாகும். பவுலிற்கு நாம் செவி கொடுப்பது நல்லது. முன்பு ஒருமுறை அவர் கிறிஸ்துவோடு கூட இருந்திருக்கிறார். (சரீரத்திற்குள்ளேயோ, புறம்பேயோ அவருக்குத் தெரியாது) (2கொரிந்தியர் 12:1-4)!.

3. நாம் சரீரத்திலிருந்தாலும் இராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம் (5:9-10).

அ. வசனம் 9. "நாம் சரீரத்தில் குடியிருந்தாலும், குடியிராமற்போனாலும் அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" என்று நாம் சொல்லுவோம்.

1. ஜீவனானாலும், மரணமானாலும் உயர்ந்த தண்ணீரானாலும், ஆழமான பனியானாலும், நல்ல காலமானாலும், துர்க்காலமானலும், கர்த்தரை பிரியப்படுத்துவதே என் நோக்கம்.

2. என் ஜீவனே போனாலும், நான் கர்த்தரைப் பிரியப்படுத்தப்போகிறேன்.

3. என்னிடத்தில் மீதமுள்ள நேரம், மற்றும் பெலனால், நான் கர்த்தரைப் பிரியப்படுத்தப்போகிறேன்.

ஆ. "அவருக்குப் பிரியமானவர்களாயிருக்க நாடுகிறோம்" என்பது, அதை நமது குறிக்கோளாக்குவது, அதையே ஆசையாகக் கொள்வது, உற்சாகம் கொள்வது, சுவிசேஷ வேலையை வேகமாகச் செய்து கர்த்தரைப் பிரியப்படுத்தும் விதத்தில் அதை காண்பிக்க உந்தப்படுவதாகும். (5:11)

ஒரு உண்மையான விசுவாசியின் ஏக்கங்கள்

2 கொரிந்தியர் 5:1-10

இ. வசனம் 10. "நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" ஒப்புரவாக்குதலின் நல்ல ஊழியராய் நாம் இருக்கும்படி உள்ளுணர்வு வருவதே, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும் என்று அறிவதினால் வருகிறது என்று பவுல் கூறுகிறார். "வெளிப்படவேண்டும்" என்பது, வெறுமையாகக் காணப்படுவது, எல்லாவித போர்வையும் களையப்படுவது; நாம் செய்தவற்றின் தரத்தையும், சிறப்பையும் முழுவதுமாக வெளிப்படுத்துவதாகும். ஒருவன் கிறிஸ்தவனானப் பின்னர் நாம் இந்த தேகத்தில் இருக்கும்போது நாம் செய்த சுவிசேஷ வேலையையும், ஊழியத்தையும், கர்த்தர் நியாயந்தீர்ப்பதாகும். (ரோமர் 14:10-12).

ஈ. எபிரெயரின் ஆசிரியர் நமக்குக் கூறுகிறார். "அவருடைய பார்வைக்கு மறைவான சிருஷ்டி ஒன்றுமில்லை; சகலமும் அவருடைய கண்களுக்குமுன்பாக நிர்வாணமாயும், வெளியரங்கமாயுமிருக்கிறது, அவருக்கே நாம் கணக்கு ஒப்புவிக்கவேண்டும்." 1 கொரிந்தியரில் பவுல் நமக்கு கூறுகிறார் "இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்" (1கொரிந்தியர் 4:5, சங்கீதம் 33:13-15).

உ. கர்த்தர் நாம் செய்கின்ற நன்மையை தீமையிலிருந்து பிரித்து, நன்மைக்காக மட்டும் நமக்கு பலனளிப்பார். பவுல் எபேசியரில் நமக்குக் கூறுகிறார்.

"அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவான்" (எபேசியர் 6:7). கொரியந்திருக்கு எழுதின முதலாம் நிருபத்தில், நமது சுவிசேஷ சாட்சி, மற்றும் வேலையின் தரத்திற்கும், சிறப்பிற்கும் ஏற்ப நாம் பலனைப் பெறுவோம், என்று கூறுகிறார் (1கொரிந்தியர் 3:11-15, லூக்கா 19:11-26).

முடிவுரை

அ. கிறிஸ்து மீண்டும் சீக்கிரமாய் வரப்போகிறார். நாம் இன்னமும் நம்முடைய தற்காலிக மாம்ச சரீரத்திலிருக்கும்போதும், அவருடைய வருகைக்காக காத்திருக்கும்போதும், இந்த உண்மையோ நாம் தவிப்பதை அது நிறுத்துவதில்லை. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமானது, அவர் திரும்ப வருவார் என்றும், நமக்கு உயிர்த்தெழுந்த, மகிமையடைந்த சரீரத்தை தருவாரென்றும் நமக்கு தைரியத்தைக் கொடுக்கிறது. இது நல்லதும் நமக்கு துணிவை கொடுப்பதுமாயிருக்கிறது. ஆனால் தவிப்பை இது ஒருக்காலும் நிறுத்துவதாக தெரியவில்லை.

ஆ. இவை எல்லாமிருந்தும், நாம் இந்த பூமியிலிருக்கும் மட்டும், கர்த்தரைப் பிரியப்படுத்த நாம் என்ன செய்ய முடியுமோ அதை செய்கிறோம். நாம் எல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக நிற்கவேண்டுமென்றும், நாம் சுவிசேஷத்திற்காக செய்யும் தரமான, மற்றும் சிறப்பான காரியங்களுக்காக மட்டுமே பலனளிக்கப்படுவோம் என்றும் நாம் அறிவதே, கிறிஸ்துவுக்காக சாட்சி சொல்லவும் வேலை செய்யவும் நம்மை உற்சாகம் மற்றும் ஆசைக் கொள்ளச் செய்கிறது.

இ. பத்து காசுகளைக் குறித்த உவமையில் எஜமானன் திரும்பி வருவதைப் பயன்படுத்தி நாம் இன்னமும் உலகத்திலிருக்கையில் சுவிசேஷத்திற்காக எவ்வளவு தூரம் முழு பொறுப்புள்ளவர்களாயிருக்கவேண்டும் என்பதை எடுத்துக்காட்டுங்கள். (லூக்கா 19:11-26).

ஒப்புரவாக்குதலின் ஊழியர்

(2 கொரிந்தியர் 5:11-21)

முகவுரை

அ. கிறிஸ்துவின் நியாயாசனத்தைக் குறித்த பவுலின் போதனை மற்றும் சுவிசேஷ செய்தியைக் கொண்டு நாம் என்ன செய்தோம் என்று கணக்கு ஒப்புவித்தல் ஆகியவற்றோடு சம்பந்தப்படுத்தி இந்த வேதப் பகுதி புரிந்துக் கொள்ளப்பட வேண்டும். (வசனம் 5:10).

ஆ. ஒப்புரவாக்குதலின் சுவிசேஷத்திற்காக நாம் உற்சாகமுள்ள, ஊழியர்களாய் மாறுவதற்கான அடிப்படை இதுவே. "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல் கிறிஸ்துவுக்குள்ளே அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி" என்று சொல்லும் ஊழியம். கிறிஸ்து மூலமாய் தேவனோடு ஒப்புரவாகாத பட்சத்தில், எல்லா மனுஷருமே நித்திய காலமாக தேவனிடமிருந்து பிரிவுக்கென்று ஆக்கினைத் தீர்ப்பு அடைவார்கள் என்ற வெளிச்சத்தில் புரிந்துக்கொள்ளப்படுகிற ஊழியம். (வசனம் 14).

1. கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நிற்பது, நம்மை ஒப்புரவாக்குதலின் ஊழியராகும்படி உற்சாகப்படுத்துகிறது (5:11-15).

அ. வசனம் 11 "ஆகையால், கர்த்தருக்கு பயப்படத்தக்கதென்று அறிந்து, மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம்" சுவிசேஷத்தின் உண்மையைக் குறித்து "மனுஷருக்குப் புத்தி சொல்லுகிறோம். என்றால், சொல்லும்படியாகக் கூடிய விவாதங்களின் மூலமாக நாம் மனுஷரை நம்பவைக்கிறோம்; அவர்களை ஆதாயப்படுத்த முயற்சிக்கிறோம். தார்மீக உண்மைகள் மற்றும் பகுத்தறிவை பயன்படுத்தி ஒரு மனமாற்றத்தை கொண்டு வர முயற்சி செய்கிறோம். நாம் கர்த்தருக்கு பயப்படுவதனால் இது செய்யப்படுகிறது" என்று பவுல் சொல்லுகிறார். "பயம்" என்பது இங்கே அச்சமடைவதை, பீதியடைவதைக் குறிக்கிறது. நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நின்று நமது ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைக் குறித்து கணக்கு ஒப்புவிக்க வேண்டியிருப்பதால், நாம் சுவிசேஷத்தின் உண்மையைக் குறித்து மனுஷருக்கு புத்தி சொல்லுகிறோம். (5:10, 1கொரிந்தியர் 3:11-15).

ஆ. இதனால் தான்:

1. தெசலோனிக்கேயர் (அப்போஸ்தலர் 17:1-4).

2. அத்தேனே (17:16-17).

3. கொரிந்து (அப்போஸ்தலர் 18:4)

4. எபேசு மற்றும் ஆசியா (அப்போஸ்தலர் 19:26; 26:28 மற்றும் 28:23) ஆகிய இடங்களில் சுவிசேஷத்தை அறிவிப்பதில் பவுல் தைரியமாகவும், விடாப்பிடியாகவும் இருந்தார்.

1. ஒப்புரவாக்குதலின் ஊழியராய் நாம் பின்பற்றி நடக்க பவுல் ஒரு நல்ல மாதிரியாவார்!

இ. வசனம் 11. "தேவனுக்கு முன்பாக வெளியரங்கமாயிருக்கிறோம்; உங்கள் மனச்சாட்சிக்கும் வெளியரங்கமாயிருக்கிறோம் என்று நம்புகிறேன்" பவுல் மற்றும் அவனது உடன் ஊழியர்களின் மனதை தேவன் அறிவார். தேவனுக்கு முன்பாக அவர்கள் மறைவின்றி, வெளியரங்கமாயிருப்பதால் இது தெளிவாக இருக்கிறது.

1. அவர்களுடைய தார்மீக நடத்தையும், ஊழியத்திற்கான நோக்கமும் சுத்தமாயிருந்தது. (2கொரிந்தியர் 1:12; அப்போஸ்தலர் 23:1; 24:16).

ஒப்புரவாக்குதலின் ஊழியர்

(2 கொரிந்தியர் 5:11-21)

2. கொரிந்துவிலே சுவிசேஷத்தை அறிவித்தபோது அவர்கள் தந்திரத்தை உபயோகிக்கவுமில்லை, தேவ வசனத்தை புரட்டவுமில்லை. (2கொரிந்தியர் 4:2).

இது தேவனுக்கு தெளிவாயிருக்கிறது போல கொரிந்துவிலுள்ள விசுவாசிகளுக்கும் தெளிவாக இருக்கும் என்று பவுல் நம்புகிறார்.

ஈ. வசனம் 12. "இருதயத்திலல்ல, வெளிவேஷத்தில் மேன்மை பாராட்டுகிறவர்களுக்கு எதிரே எங்களைக் குறித்து நீங்கள் மேன்மை பாராட்டும்படிக்கு ஏதுவுண்டாக்குகிறோம்". தான் என்னவாக இருப்பதாக பவுல் கூறுகிறாரோ, அவர் அதுவாகத் தான் இருக்கிறார் என்று, தன்னிடம் நம்பிக்கையுள்ள கொரிந்து விசுவாசிகள் கொரிந்துவிலுள்ள தனது எதிரிகளுக்கு புத்தி சொல்லவைக்கும்படி பவுல் முயற்சி செய்கிறார்.

உ. வசனம் 13. "நாங்கள் பைத்தியங்கொண்டவர்களென்றால், தேவனுக்காக அப்படியிருக்கும்; தெளிந்த புத்தியுள்ளவர்களென்றால், உங்களுக்காக அப்படியிருக்கும்; "பவுலுக்கு பைத்தியம் பிடித்துவிட்டது, அவர் குழம்பி போயிருக்கிறார், அவரது மனோதத்துவ செயல்திறனை இழந்து விட்டார்" என்று கொரிந்துவில் சொல்லி கொண்டிருந்தவர்களை இது ஒரு வேளை குறிக்கும்.

இந்த கள்ள போதகர்கள் பவுலையும் அவரது சுவிசேஷத்தையும் அவதூறு செய்ய முயற்சிக்கிறார்கள்.

ஊ. பவுலுக்கு விரோதமாக பெஸ்து என்ற அதிபதி கொண்டுவந்த குற்றச்சாட்சியைப் போன்றது இது. (அப்போஸ்தலர் 26:24-25). கிறிஸ்துவின் பூமிக்கடுத்த குடும்பமும் இந்த குற்றச்சாட்சியையே அவருக்கு விரோதமாக கொண்டுவந்தார்கள் (மாற்கு 3:20-21).

எ. கிறிஸ்து எனக்கு கொடுத்த கட்டளையை தான் நிறைவேற்ற முயற்சி செய்தபோது தான் 1. மிக அதிகமான ஆர்வத்தோடு நடந்துக்கொண்டதையும் 2. மத சம்பந்தமான பித்துபிடித்தவனாக இருந்ததையும் 3. ஒரு இரத்த சாட்சிக்குரிய நோக்கம் கொண்டவனாக இருந்ததையும் உடனே ஒப்புக்கொள்வார். அதேனென்றால், அவர்:-

1. தேவனை பிரியப்படுத்தவும்.

2. கொரிந்துவில் காணாமற்போனவர்கள் இரட்சிக்கப் படவும், (2கொரிந்தியர் 11:23-29, 12:10; அப்போஸ்தலர் 21:13; 9:15-16) அவர் விரும்பியதேயாகும்.

ஏ. கொரிந்துவிலிருக்கும்போது, பவுலின் மனநிலையின் உண்மையானது, கள்ளபோதகர்கள் சொல்வதற்கு முற்றும் வித்தியாசமானதாய் இருந்தது. உண்மையில் பவுல், சுவிசேஷத்தை அவர்களுக்கு அளித்தபோது, "தெளிந்த புத்தியுள்ள" ஒரு மனிதனைப்போலத் தான் நடந்துக்கொண்டு. அவர் எளிதில் புரிந்துகொள்ளப்பட்டவராய், நிலையான மனநிலை உடையவராய், எந்த ஒரு மத வெறி மற்றும் மகிழ்ச்சி வெறி அற்றவராய் இருந்தார். கொரிந்துவை சுவிசேஷ மயமாக்கும் பாரமான பணியின் முன் அவர் உண்மையில் பயத்தோடுதானிருந்தார் (2கொரிந்தியர் 2:3-4).

ஐ. வசனம் 14-15. "கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது" 'சுவிசேஷத்திற்காக பவுல் ஆர்வம் கொண்டவராகவும், தேசம் பந்தமான பித்து பிடித்தவராகவும், தான் இருப்பதற்கு நல்ல காரணங்களைக் கொண்டிருந்தார்.

ஒப்புரவாக்குதலின் ஊழியர்

(2 கொரிந்தியர் 5:11-21)

1. முழு உலகிற்கும் சுவிசேஷத்தை எடுத்துச் செல்லும்படியாக கிறிஸ்துவின் அன்பு அவனை நெருக்கி ஏவி கொண்டிருந்தது - கிறிஸ்துவின் அன்பு அவனை தன் பிடியில் வைத்துக்கொண்டிருந்தது. அது அவன் மீது அத்தனை செல்வாக்கு கொண்டிருந்தது, அவனுடைய வாழ்க்கையில் அவ்வளவு வல்லமையுடையதாயிருந்தது. அதினால் அவன் மற்றவர்களுக்கு அன்பின் ஊழியம் செய்யும் வாழ்க்கையை வாழ்வதை விட வேறு வழியில்லாதிருந்தது. அவன் இந்த அன்பினால் முழுவதும் சிறையிலடைக்கப்பட்டுள்ளான்.

(விழுங்கப்பட்டுள்ளான்). அது சுவருள்ள பட்டணத்ினுள் இருப்பது போலவும், வேலை முடியும்மட்டும் வெளியேற முடியாதது போலவும் உள்ளது.

2. உலகிலுள்ள யாவருக்காவும் கிறிஸ்து மரித்தார் - சுவிசேஷமானது எல்லா இடங்களிலும் உள்ள மனுஷருக்காகும். ஒருவரும் கெட்டுப்போகாமல் இருப்பது தேவனுடைய விருப்பம் (2 பேதுரு3:9). கிறிஸ்துவை கண்டடையாத பட்சத்தில் எல்லா மனுஷரும் மரண ஆக்கினையின் கீழ்தான் இருக்கிறார்கள். (ரோமர் 5:12). ஆகவே பவுல், தான் உயிரோடிருக்கும் போதே எத்தனை பேருக்கு முடியுமோ, அத்தனை பேருக்கும் இந்த செய்தியை கொண்டு செல்லவேண்டும். அவர்களுடைய நித்திய முடிவு அதையே சார்ந்திருக்கிறது.

ஒ வசனம் 15. ஆகையால், "பிழைத்திருக்கிறவர்கள், இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல்", "மற்றவர்களுக்காக அன்பின் ஊழியம்செய்யும் வாழ்க்கை வாழ வேண்டும்.

"பிழைத்திருக்கிறவர்கள்" என்பது நித்திய ஜீவனை சுதந்தரிக்கப்போகும் விசுவாசிகளைக் குறிக்கிறது. கிறிஸ்துவின்றி, தங்களது பாவங்களில் மரித்திருக்கிற மற்ற எல்லா மனுஷருக்கும், சுவிசேஷத்தைக் கொண்டு செல்லும் பணிக்கு நாமெல்லாரும் நம்முடைய ஜீவியங்களை முழுவதும் அர்ப்பணிக்கும்படி சவால் விட்டு அழைக்கப்படுகிறோம். பவுல் நமக்கு நினைவுபடுத்துவார், "ஞாபகமிருக்கட்டும், நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பு நின்று கணக்கு ஒப்புவிக்கவேண்டும்" அவர் ஒரு பதிலை உரிமையுடன் கேட்பார்!.

2. கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாய் மனுஷர்கள் ஆகவேண்டிய தேவையே, ஒப்புரவாக்குதலின் ஊழியராய் நாமிருக்கும் படி நம்மை உற்சாகப்படுத்துகிறது (5:16-17).

அ. வசனம் 16. "ஆகையால், இது முதற்கொண்டு, நாங்கள் ஒருவனையும் மாம்சத்தின்படி அறியோம். நாங்கள் கிறிஸ்துவை மாம்சத்தின்படி அறிந்திருந்தாலும்". "மாம்சத்தின்படி அறிவது" என்பது, ஆவியினால் புதுப்பிக்கப்படாத மனுஷர்களின் தரத்தின்படி, கிறிஸ்துவையும், உலகிலுள்ள மற்ற மனுஷர்களையும் பார்ப்பதாகும். அவர்கள், வெளியரங்கத்தையும், இயற்கையானதையும் பார்த்து, பாரபட்சங்கள் மற்றும் கலாச்சார விதிகளின் அடிப்படையில் கருத்துக்களைக் கொள்வார்கள். விசுவாசியாத பரிசேயர்களுக்கு கிறிஸ்து கொடுத்த பதிலில் இது காணப்படுகிறது. "நீங்கள் மாம்சத்துக்கேற்றபடி நியாயந்தீர்க்கிறீர்கள், நான் ஒருவனையும் (இம்முறையில்). நியாயந்தீர்க்கிறதில்லை" (யோவான் 8:15; 1கொரிந்தியர் 2:14).

ஒப்புரவாக்குதலின் ஊழியர்

(2 கொரிந்தியர் 5:11-21)

ஆ. தன்னுடைய மனந்திரும்புதலுக்கு முன்னால், தான் கிறிஸ்துவை ஒரு கள்ளத்தீர்க்கதரிசியாகவும், தூஷிக்கிறவராகவும், முழுவதும் மாம்ச (உலகப்பிரகாரமான) தரம் மட்டும் உத்தேசத்தினால் கண்ணோக்கியதாக ஒத்துக்கொள்ளுகிறார். இப்பொழுது அவரை கர்த்தராக, கிறிஸ்துவாக, ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாக, மேசியாவாக, உலக இரட்சகராக பார்க்கிறார். ஒரு காலத்தில் அவர் எல்லா புறஜாதிகளையும் அவர் அசுத்தமானவர்களாகவும், தேவனுடைய அன்பிற்கு பாத்திரமற்றவர்களாகவும் கண்ணோக்கினார். கிறிஸ்து மூலமாகவுள்ள தேவனுடைய மன்னிக்கும் கிருபைக்கு தன்னைவிட அவர்கள் மிகவும் தகுதியுள்ளவர்களாக இப்பொழுது அவர் அவர்களைப் பார்க்கிறார். அவர்கள் அவரைக் கண்டடையும்படி, தனது ஜீவனையும் அவர் கொடுக்க ஆயத்தமுள்ளவராயிருக்கிறார். (அப்போஸ்தலர் 8:1; 9:1-2; பிலிப்பியர் 3:6;அப்போஸ்தலர் 9:5; கலாத்தியர் 1:13-16).

இ. வசனம் 17. "இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச் சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின", "கிறிஸ்துவுக்குள்" இருப்பது என்பது, கிறிஸ்துவின் இரத்தத்தினால் மீட்கப்படுவது; அவருடைய சரீரமாகிய சபையில் பங்காக மாறுவது; அவரது பரிசுத்த ஆவியை உனக்குள் வாசம் செய்வது, அவரது ஆளுகை மற்றும் வழிநடத்தலுக்குள் இருப்பது "புதுச்சிருஷ்டி" என்பது தேவன் மட்டும் செய்யக்கூடியதைக் குறிக்கும். (கலாத்தியர் 6:15).

ஈ. அவர் ஏதேனும் ஒன்றைச் சிருஷ்டிக்கும்போது, அது எப்பொழுதும் புதியதாய், தூய்மையானதாய் சுத்தமானதாய் இருக்கிறது. வேதம் சொல்லுகிறது. "ஆதியிலே தேவன் வானத்தையும், பூமியையும் சிருஷ்டித்தார்" (ஆதியாகமம் 1:1). மறுபடியும், "இரட்சிப்பும், நீதியும் கர்த்தருடைய சிருஷ்டிகள்" (ஏசாயா 45:8). மனிதர்களிலிருந்து புது சிருஷ்டிகளாக தேவன் மாற்றுவதை தாவீது அறிந்திருந்தார். (சங்கீதம் 51:10). தேவன் புதிய இருதயங்களை சிருஷ்டித்தாரென்றும், இருதயங்களை தூய்மையானதாகவும், சுத்தமானதாகவும் ஆக்கினார் என்று அவன் அறிந்திருந்தான். "இருதயம்" என்பது ஒரு மனுஷனுடைய உள்ளான வாழ்க்கை; அவனது சித்தம் அவனது சிந்தனைகள், அவனது மனம், அவனது உணர்ச்சிகளாகும். "புது சிருஷ்டியாவது" என்பதைக் குறித்து பவுல் பேசும்போது இதைத் தான் அர்த்தப்படுத்துகிறார்... புதியவைகள் வந்து விட்டன.

உ. இந்த "புதிய சிருஷ்டியும்", "புதியன வருவதும்" என்பது நமக்கு கிறிஸ்துவையும், மற்ற மனுஷரையும் பார்ப்பதில் ஒரு புதிய விதத்தையும் கொண்டுள்ளது. முதல் முறையாக, கிறிஸ்து உண்மையில் என்னவாக இருக்கிறாரோ, யாராக இருக்கிறாரோ, அவ்வாறாகவே நாம் பார்க்கிறோம். கிறிஸ்துவை கண்டடைந்து, அவரைத் தங்கள் சொந்த ஆண்டவராகவும் இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளாத மற்ற மனுஷர்களை, ஆக்கினைத் தீர்ப்படைந்து, அக்கினிக் கடலிலே தள்ளப்படும் நித்திய ஆத்துமாகளாக நாம் கண்ணோக்க ஆரம்பிக்கிறோம். இது, முறையாக ஒப்புரவாக்குதலின் ஊழியராய் நாமிருக்கும்படி உற்சாகப்படுத்துகிறது.

3. ஒப்புரவாக்குதலின் ஊழியராக நம் ஒவ்வொருவரையும்கர்த்தர் ஒப்புக்கொடுத்தார் (5:18-21).

அ. வசனம் 18. "இவையெல்லாம் தேவனாலே உண்டாயிருக்கிறது". ஒரு விசுவாசி

ஒப்புரவாக்குதலின் ஊழியர்

(2 கொரிந்தியர் 5:11-21)

புது சிருஷ்டியாகி, கிறிஸ்துவைப்பற்றியும், மற்ற மனுஷர்களைப்பற்றியுமுள்ள தனது கண்ணோக்கத்தை மாற்றுவது, ஒரு தனிப்பட்ட நபரின் வாழ்க்கையிலுள்ள தேவனுடைய வேலையாகும்.

நாம் காண்பிக்கும் பங்கு, கிறிஸ்துவிலுள்ள நமது விசுவாசத்தை வெளிப்படுத்துவதேயாகும். அவர்:

1. கிறிஸ்து மூலமாய் நம்மை அவரோடு ஒப்புரவாக்கினார். (எபேசியர் 2:8-9).

2. ஒப்புரவாக்குதலின் ஊழியத்தை நமக்குக் கொடுத்தார். பவுல் எபேசியருக்கு எழுதின நிருபத்தில், "நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்" என்கிறார் (எபேசியர் 2:10).

ஆ. வசனம் 19. "தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமல், கிறிஸ்துவுக்குள்ளே அவர்களைத் தமக்கு ஒப்புரவாக்கி, ஒப்புரவாக்குதலின் உபதேசத்தை எங்களிடத்தில் ஒப்புவித்தார்" "ஒப்புரவாகுதல்" என்பது பிதாவாகிய தேவனிடத்தில் சரியான உறவுக்குள் திரும்ப வருவதாகும். பவுல் இதை நமக்கு அதிகமாக தெளிவுப்படுத்த முயற்சிக்கிறார்.

1. கிறிஸ்துவை விசுவாசித்திருக்கிற நம் ஒவ்வொருவருக்கும் ஒப்புரவாக்குதலின் ஊழியமுண்டு.

2. இந்த ஊழியத்தின் விளைவானது, தேவன் உலகத்தாருடைய பாவங்களை எண்ணாமலிருப்பதேயாகும்.

3. அவர்கள், அவரோடு கூட சரியான உறவுக்குள் மீண்டும் வர முடியும்.

ஆகவே அதற்கு முற்றிலும் அர்ப்பணியுங்கள் அதைக்குறித்து ஆர்வமுள்ளவர்களாக இருங்கள். கிறிஸ்துவின் அன்பு நம்மை பலவந்தம் பண்ணுகிறது. பவுலை பண்ணினதுபோல்! இனி நீங்கள் உங்களுக்காக வாழக் கூடாது, மற்றவர்களுக்கான சுவிசேஷ சேவையில் வாழவேண்டும். (வசனம் 14-15; 1கொரிந்தியர் 9:16; ரோமர் 1:14-16).

இ. வசனம்20. "ஆனபடியினாலே, தேவனானவர் எங்களைக் கொண்டு புத்தி சொல்லுகிறது போல, நாங்கள் கிறிஸ்துவுக்காக ஸ்தானாபதிகளாயிருக்கிறோம்" "கிறிஸ்துவின் ஸ்தானாபதியானவன்"

1. மனுஷர் மத்தியில் கிறிஸ்துவின் இடத்தில் நிற்பவன்.

2. சுவிசேஷம் சம்பந்தப்பட்ட விஷயங்களில் கிறிஸ்துவுக்காக பேசுகிறவன்.

3. சுவிசேஷத்தின் உண்மையைக் குறித்து மனுஷருக்கு புத்தி சொல்லும்படி, தனக்கு கிறிஸ்துவினால் கொடுக்கப்பட்ட அதிகாரத்தையும், வல்லமையையும் பயன்படுத்துபவன் (2கொரிந்தியர்2:14-17; லூக்கா 10:1-20, மத்தேயு 10:19; 28:19-20; அப்போஸ்தலர் 1:4-8).

ஈ. வசனம் 20. "தேவனோடு ஒப்புரவாகுங்கள், (கிறிஸ்துவின் மூலமாய்) என்று கிறிஸ்துவினிமித்தம்உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம்." "உங்களை" என்ற பிரதி பெயர்ச்சொல் இந்த வசனத்திலிருந்து விடப்பட வேண்டும்.

ஒப்புரவாக்குதலின் ஊழியர்

(2 கொரிந்தியர் 5:11-21)

அப்பொழுது அது "கிறிஸ்துவினிமித்தம் நாங்கள் வேண்டிக்கொள்ளுகிறோம். தேவனோடு ஒப்புரவாகுங்கள். இந்த வேண்டுகோள் கொரிந்து விசுவாசிகளிடத்தில் வைக்கப்படவில்லை. ஒப்புரவாக்குதலின் ஊழியர் என்ற முறையில் தான் அவிசுவாசிகளுக்கு சொல்வதையே பவுல் வெறுமனே கூறுகிறார். நாமும் கூட சொல்ல வேண்டியது இதுவே!

உ. இந்த வேண்டுகோளை தனிப்பட்ட விதத்தில் உங்களிடம் ஒரு ஒப்புரவாக்குதலின் ஊழியர் செய்திராத நிலையில் இந்தக் கூட்டத்தில் ஒரு சிலர் இருக்கக் கூடும். நீங்கள் இன்னும் கிறிஸ்துவின் மூலமாய் தேவனிடத்தில் ஒப்புரவாகவில்லை என்றால் நான் (உங்களை) கிறிஸ்துவின் சார்பில் கெஞ்சுகிறேன். "தேவனோடு ஒப்புரவாகுங்கள்".

ஊ. வசனம் 21 தேவன் "பாவம் அறியாத அவரை நமக்காகப் பாவமாக்கினார்" தேவனுக்கு முன்பாக சரியான நிலையில் நிற்பதும், நமது பரலோக பிதாவோடு சரியான உறவுக்குள் மீண்டும் கொண்டு வரப்படுவதும், கிறிஸ்துவின் மூலமாய் சாத்தியமாகிறது.

எ. பாவம் செய்யாத, பரிசுத்தமான, தூய்மையான, குற்றமற்ற கிறிஸ்து, கல்வாரி சிலுவையில் நம்முடைய ஸ்தானத்தை எடுத்துக்கொண்டார். நம்முடைய பாவங்களுக்காக, ஆக்கினைத் தீர்ப்படைந்து ஒரு குற்றவாளியின் மரணத்தை அனுபவிக்க தனக்கு தானே இடங்கொடுத்தார். அவர் நம்முடைய ஸ்தானத்தில் நின்றார்.

நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார். நம்முடைய பாவங்களுக்காக மரித்தார், குற்றவாளிக்கான ஒரு நிரபராதி (ஏசாயா 53:4-5,11; எபிரெயர் 4:15; 7:26; 9:26; 1பேதுரு 2:22,24; 1யோவான் 3:5).

ஏ. இதுவே, பிதாவாகிய தேவனோடு சரியான உறவுக்குள் மீண்டும் வருவதற்கு, நம்மையும், நம்முடைய ஒப்புரவாக்குதலின் ஊழியத்தின் மூலமாய் நாம் புத்தி சொல்லுகிறவர்களுக்கும், சாத்தியமாக்குகிறது.

முடிவுரை

அ.நம்ஒவ்வொருவரையும் ஒப்புரவாக்குதலின் ஊழியராய் கர்த்தர் ஒப்புக்கொடுத்தார். நாம் ஒப்புரவாக்குதலின் ஊழியராய் இருக்கும்படி உற்சாகப்படுத்தப்படுகிறதின் காரணம்.

1. ஒவ்வொரு விசுவாசியும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன் நின்று, தன்னுடைய ஒப்புரவாக்குதலின் ஊழியத்தைக் குறித்து கணக்கு ஒப்புவிக்கவேண்டும் என்றும்.

2. கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டிகளாய் மாறி, நம் பரலோக பிதாவோடு சரியான உறவுக்குள் மீண்டும் வரவேண்டிய ஏராளமான மக்கள் உண்டு என்றும், நாம் அறிந்திருப்பதேயாகும்.

ஆ. நாம் அப்போஸ்தலர் பவுலைப் போல பாவனை செய்வோமானால், நாம் அதைக் குறித்து மிகுந்த ஆர்வமுடையவராக இருப்போம். சுவிசேஷத்திற்காக நாம் இரத்த சாட்சிகளின் கண்ணோட்டத்தை எடுத்துக்கொள்வோம்.

இ. தேவனோடு கூட ஒப்புரவாகும்படி, கர்த்தரால் அழைக்கப்பட்ட சிலர் இந்த கூட்டத்திலிருக்கலாம். நீங்கள் முன்பாக வந்து, கல்வாரியில் கிறிஸ்துவின் பலியானது உங்கள் பாவங்களை நிவிர்த்தி செய்ய இடங்கொடுங்கள். பிதாவாகிய தேவனோடுகூட சரியான உறவுக்குள் திரும்ப வாருங்கள்.

அவிசுவாசிகளோடு நீதிமான்களுக்குள்ள உறவு

(2 கொரிந்தியர் 6:14-7:1)

முகவுரை

கொரிந்தியருக்கு தான் எழுதின முதலாம் நிருபத்திலே விக்கிரக ஆராதனைக்காரரோடும், கோயில் வேசிகளிடத்தில் சென்றவர்களோடும் சம்பந்தம் கொள்வதைக் குறித்து அவர்களை பவுல் எச்சரித்திருந்தார். (1கொரிந்தியர் 10:14-22; 6:12-20).

ஆ. அவரது ஆலோசனையை ஏற்று, தங்களுக்கு முன்பு இருந்த நண்பர்கள் மற்றும் சம்பந்தப்பட்டவர்களிடமிருந்து, முற்றிலுமாய் அவர்கள் விலகவில்லை என்பது தெளிவாகிறது.

இதினால் தான், பவுல் தான் எழுதின இரண்டாம் நிருபத்தில், விசுவாசிகள், அவிசுவாசிகளோடு உறவுகளை ஏற்படுத்தாமலிருப்பதையும், அதை நிரந்தரமாக கொள்ளாமலிருப்பதையும், அதிகமாக வலியுறுத்துகிறார். அதற்கு இரண்டு காரணங்களைக் கூறுகிறார்.

1. விசுவாசிகளுக்கும் அவிசுவாசிகளுக்கும் பொதுவான காரியம் ஏதுமில்லை. (6:14-16).

அ. வசனம் 14. "அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருப்பீர்களாக" "பிணைக்கப்படுதல்" என்றால், ஒத்துக்கொள்ளாதவர்கள், முரணாக உள்ளவர்கள், எதிர்க்கிறவர்கள் மற்றும் ஆவிக்குரிய விஷயத்தில் உங்களோடு ஒவ்வாதவர்கள் ஆகியவர்களோடு வித்தியாசமாய் பிணைக்கப்படுவதாகும்.

ஆ. விசுவாசிகளின் ஐக்கியத்திற்கு புறம்பாக உள்ளவர்களிடத்திலிருந்து கிறிஸ்தவர்கள் எவ்வளவு தூரம் பிரிந்திருக்கவேண்டும் என்று அறிந்துக்கொள்வதே, விக்கிரக பட்டணங்கள் மற்றும் நாடுகளிலுள்ள மிகப்பெரிய பிரச்சனைகளில் ஒன்று, அதே பிரச்சனை இன்றும் அமெரிக்காவில் இருக்கிறது.

இ. இந்தக் கேள்விக்கான பதிலை பவுல் நமக்குத் தருகிறார்:

"கிறிஸ்துவுக்கு புறம்பானவர்களோடு, புறஜாதிகளோடு நிரந்தரமான உறவுகளை உருவாக்காதீர்கள்" இதிலுள்ள ஆபத்துக்கள்:

1. அவர்களது தார்மீக தரத்தோடு ஒத்துப்போதல்,

2. அவர்களது வாழ்க்கை முறையைப் பின்பற்றி நடத்தல்,

3. கிறிஸ்துவை விட்டு விலகுதல், ஆகும்.

இந்த உறவுகள், ஒவ்வாமை, சண்டை, உணர்ச்சி மற்றும் வார்த்தைகளால் எதிர்ப்புகள், ஐக்கியமற்ற நிலைமை குழப்பம் ஆகியவற்றில்தான் முடியும்.

ஈ. அப்போஸ்தலர் பவுலின் மூலமாக வருகின்ற பரிசுத்த ஆவியின் இந்த ஆலோசனையானது:-

1. ஆலோசனை மற்றும் அறிவுரையை நாடுவது.

2. வியாபார பங்காளித்தனம்.

3. திருமணமாகாத, மற்றும் விதவைகளின் திருமணத்திற்கு முன்பு உள்ள சிநேகம், மற்றும் திருமணம்.

4. பொழுதுபோக்கு.

அவிசுவாசிகளோடு நீதிமான்களுக்குள்ள உறவு

(2 கொரிந்தியர் 6:14-7:1)

5. தோழமைகள், ஆகியவைகளை ஒருவேளைக் கொண்டிருக்கும்.

உ. பவுல், தான் எபேசியருக்கு எழுதின நிருபத்தில் நமக்குக் கூறுகிறார். "கீழ்ப்படியாமையின் பிள்ளைகள்மேல் தேவ கோபாக்கினை வரும்". "அவர்களுக்குப் பங்காளிகளாகாதிருங்கள்" (எபேசியர் 5:6,7). மறுபடியும், "கனியற்ற அந்தகாரக் கிரியைகளுக்கு உடன்படாமல், அவைகளைக் கடிந்துகொள்ளுங்கள்" (எபேசியர் 5:11; 1கொரிந்தியர் 10:21) ஒன்று போவானிலும் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்.

"நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று (கிறிஸ்துவின் மூலமாய்) சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால் (இருளில் நடக்கிறவர்களோடிருந்தால்), சத்தியத்தின்படி நடவாமல் பொய் சொல்லுகிறவர்களாயிருப்போம்". (1யோவான் 1:6).

ஊ. பவுலின் கூற்றின் பாஷையானது ("அவிசுவாசிகளுடன் பிணைக்கப்படாதிருங்கள்") என்பது ஒரு வேளை பழைய ஏற்பாட்டு நியாயப்பிரமாணமான. "மாட்டையும் கழுதையையும் பிணைத்து உழாதிருப்பாயாக" (உபாகமம் 22:10; லேவியராகமம் 19:19).

எ. வசனம் 16 "யாருமில்லை அல்லது எதுவுமில்லை" என்றே பதிலாகக் கூறப்பட வேண்டிய ஐந்து கேள்விகளைக் கேட்பதன் மூலம் பவுல் தனது குறிப்பை எடுத்துரைக்கிறார்:

அவிசுவாசிகள்:-

1. அந்தகாரத்தில் நடக்கிறார்கள் (தீய, ஆவிக்குரிய நீதியற்ற நிலைமை)

2. பிசாசினால் கட்டுப்படுத்தப்படுகிறார்கள்.

3. வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தையை எதிர்க்கிறார்கள்.

4. உலகிலுள்ள அநேகர் விக்கிரகங்களை வணங்குவதுபோல் இந்த உலகத்தின் காரியங்களையும், வழிகளையும், வணங்குகிறார்கள்.

ஏ. ஒரு அவிசுவாசி செய்கிற எந்த காரியத்திற்கும் விசுவாசிகளுக்கும் பொதுவானதாக எதுவுமில்லை. ஒரு அவிசுவாசியோடு கூட அவர்களால் ஐக்கியங்கொள்ள முடியாது, இசைந்து நடக்கமுடியாது எந்த ஒரு காரியத்திலும் ஒத்துப்போக முடியாது.

இவற்றிற்கெல்லாம் காரணம், அவர்கள்:

1. நீதிமான்களாயிருக்கிறார்கள் (பரிசுத்தமாய் மற்றும் வேறு பிரிக்கப்பட்டு).

2. வெளிச்சத்திலே நடக்கிறார்கள் (ஆவிக்குரிய விதத்திலே சரியாய்).

3. கிறிஸ்துவின் ஆவியினால் கட்டுப்படுத்தப் பட்டிருக்கிறார்கள்.

அவிசுவாசிகளோடு நீதிமான்களுக்குள்ள உறவு

(2 கொரிந்தியர் 6:14-7:1)

4. வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய வார்த்தையோடு ஒத்துபோகிறார்கள்.

5. தேவனை மட்டும் ஆராதிக்கிறார்கள்.

ஐ. கிறிஸ்தவர்கள், கிறிஸ்துவில் புதிய சிருஷ்டிகளாய் இருக்கிறார்கள். பழைய மனுஷன் மரித்துப்போனான். பரத்திலிருந்து வருகிற ஆவியினால் நாம் மறுபடியும் பிறக்கும்போது, அவிசுவாசிகளோடு இருக்கவும், அவர்கள் செய்வதைச் செய்வதும், அவர்கள் எவ்விதம் இருக்க விரும்புகிறார்களோ அவ்விதம் இருப்பதுமாகிய ஆசையும் மரித்துவிடுகிறது (2கொரிந்தியர் 5:17; யோவான் 3:3-8).

ஒ. ஒரு அவிசுவாசியோடு கூட ஒரு விசுவாசிக்கு பொதுவானதாக ஏதுமில்லை! ஆகையால் நாம்.

1. அவர்களோடு நிரந்தர உறவுகளை வளர்க்கவோ, கொள்ளவோ கூடாது.

2. அவர்களது தார்மீக நிலைகளோடு ஒத்துப்போகக் கூடாது.

3. அவர்களது வாழ்க்கை முறையை பின்பற்றி நடக்கக் கூடாது.

அப்படி நாம் செய்யும்போது, நம்மை ஆவிக்குரிய துன்பத்திற்குள் நாமே வைக்கிறோம்!! நம்முடைய இரட்சிப்புக்கே உலை வைக்கிறோம்!!.

2. நீதிமான்கள், பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறார்கள் (6:16-18).

அ. வசனம் 16 "நாம் தேவனுடைய ஆலயமாயிருக்கிறோம். விசுவாசிகள் அவிசுவாசிகளோடு அந்நிய நுகத்திலே பிணைக்கப்படாதிருக்கும்படி பவுல் கூறுகிற முதல் காரணம், நம்மை கிரயத்திற்கு வாங்கின தேவனே, நமக்குள் தனிப்பட்ட விதத்திலேயும், கூட்டாகவும் நமக்குள்ளே வாசம் செய்து நமது கர்த்தரும் ஆண்டவருமாகி இருக்கிறார்" (1பேதுரு 1:18-19; 2:9; யோவான்14:17; 1கொரிந்தியர் 6:19-20; 3:16-17).

ஆ. எபேசியருக்கு எழுதின தனது நிருபத்தில், பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், "இசைவாய் இணைக்கப்பட்டு கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிற மாளிகையைப் போலிருக்கிறார்கள்" என்று பவுல் நமக்கு கூறுகிறார் (எபேசியர் 2:21). புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து சொல்லும் போது, "அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" என்று கூறுகிறார். (எபேசியர் 2:22).

இ. விசுவாசிகள் "தேவனுடைய ஆலயமாயிருக்கிறார்கள்" என்று அவர் சொல்லும்போது, பவுல், பழைய ஏற்பாட்டு தேவாலயத்தை மனதிலே கொண்டிருக்கிறார். மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிருபாசனத்தின் மேலுள்ள, ஒன்றை ஒன்று நோக்கியிருந்த இரண்டு கேருபீன்களுக்கு நடுவிலே தேவாலயத்தில், தேவன் பிரசன்னமாயிருந்தார்.

எருசலேம் தேவாலயத்தில் இருந்ததுபோல, தேவன் இப்பொழுது ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் தனிப்பட்ட விதத்திலேயும், கூட்டாக தனது ஜனத்தின் நடுவேயும், பிரசன்னமாயிருக்கிறார்.

அவிசுவாசிகளோடு நீதிமான்களுக்குள்ள உறவு

(2 கொரிந்தியர் 6:14-7:1)

ஈ. வசனம்16. "நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி". இந்த எண்ணமானது, பழைய ஏற்பாட்டின் மூன்று வேத வசனங்களிலிருந்து உருவாகிறது.

1. "நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" (*லேவியராகமம் 26:12*).

2. அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன் (*எரேமியா 32:38*).

3. "என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (*எசேக்கியேல்37:27*).

உ. அவிசுவாசிகளோடுங்கூட நம்மால் நிரந்தரமான உறவுகளையோ அல்லது எந்த விதமான பங்காளித் தனத்தையோ நம்மால் உருவாக்க முடியாததன் காரணம்:

1. நாம் தேவனுடைய தனிப்பட்ட சொத்து, மற்றும்,

2. நம் ஒவ்வொருவருக்குள்ளும் அவர் வாசம் செய்து, விசுவாசிகளின் கூட்டம் என்ற முறையில் நம் மத்தியில் அவர் உலாவுகிறார்.

அவர் நம்முடைய தேவன், நாம் அவர்கள் ஜனமாயிருக்கிறோம்.

3. நீதிமான்கள், தீமையான உலகைவிட்டு வேறுபிரிக்கப்பட்டு, பரிசுத்தத்தை தொடருகிறார்கள் (6:17-7:1).

அ. விசுவாசிகள், அந்நிய நுகத்திலே அவிசுவாசிகளுடன் பிணைக்கப்பட கூடாததற்கு இன்னொரு காரணம், அவர்கள், தீமையையும், உலகையையும் விட்டு வேறு பிரிக்கப்பட்டு, பரிசுத்தமான வாழ்க்கையை தொடருவதே.

ஆ. வசனம் 6:17-18. தன்னுடைய குறிப்பை நிரூபிக்கும்படி, தேவன், இஸ்ரவேல் தேசத்தை அவர்களது பாபிலோனிய சிறையிருப்பு, மற்றும் நாடுகடத்தலிலிருந்து வெளியே வரும்படி அழைத்ததைக் கூறும் பழைய ஏற்பாட்டு வேதப் பகுதிகளிலிருந்து, பவுல், மேற்கோள் காட்டுகிறார். அசுத்தமானதாய் கருதப்பட்ட யாவையும் தங்களுக்கு பின்னே விட்டுவிட்டு, தேவாலயத்தின் பரிசுத்த பாத்திரங்களை மட்டுமே எடுத்துச்செல்லும்படி சொல்லப்பட்டார்கள்.

1. "அவ்விடம் விட்டுப்போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; உங்களைச் சேர்த்துக்கொள்வேன்" (*ஏசாயா 52:11, எசேக்கியேல்11:17; 20:34,41, செப்பனியா3:20*).

2. "நான் உங்கள் பிதாவாயிருப்பேன், நீங்கள் என் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்கள் என்று சர்வவல்ல கர்த்தர் கூறுகிறார். (யாவே, யெகோவா, சர்வவல்லவர், தனிப்பட்ட, இஸ்ரவேலின் உடன்படிக்கையின் தேவன்)" (*2சாமுவேல் 7:14; எரேமியா 31:9, ஓசியா 1:10, ஏசாயா 43:6*).

இ. "வெளியே வருவது", "வேறுபிரிக்கப்பட்டு இருப்பது", "அசுத்தமானதை தொடாதிருப்பது" ஆகியவற்றின் அர்த்தம், தேவனோடு கூட பரிசுத்தமான வாழ்க்கையை தொடராதிருக்கிற, எல்லாவற்றிலிருந்தும், எல்லாரிடத்திலிருந்தும், நாம் கடந்துபோக வேண்டும் என்பதே (*எபிரெயர் 12:1*).

அவிசுவாசிகளோடு நீதிமான்களுக்குள்ள உறவு

(2 கொரிந்தியர் 6:14-7:1)

ஈ. வசனம் 7:1. "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால்".

"வாக்குத்தத்தங்கள்" பவுல் இப்பொழுது மேற்கோள் காட்டிய பழைய ஏற்பாட்டிலுள்ளவைகளேயாகும். அவற்றை நிறைவேற்ற வல்லவரான "சர்வவல்லவரால்" கூறப்படுகின்றன.

தேவ ஜனங்கள் "வெளியே வந்து", "வேறுபிரிக்கப்பட்டிருந்து", "அசுத்தமானதை தொடாதிருந்தால்",

சர்வவல்ல தேவன்:

1. நம்மை ஏற்றுக்கொள்வார்.

2. நம் பிதாவாயிருப்பார்.

3. நாம் அவர் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்போம்

உ. வசனம் 7:1 "இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள்நமக்குஉண்டாயிருக்கிறபடியினால்... மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும்நீங்க, நம்மை சுத்திகரித்துக்கொள்வோம். கறைப்படுத்தக்கூடிய எல்லாவற்றிலிருந்தும், நமது ஆவி, ஆத்துமா, சரீரத்தை பரிசுத்தமாக வைத்துக்கொள்ள நாம் பிரயாசப்படவேண்டும்.

"சுத்திகரிப்பது" என்பது, நம்மை சுத்தப்படுத்திக்கொள்வது, தார்மீக குற்ற உணர்வு, மற்றும் கறைகளிலிருந்து விடுபடுதலாகும்.

ஊ. வசனம் 7:1 "பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம்". "பரிசுத்தமாக்குதலை பூரணப்படுத்துவது" என்பது எப்பொழுதும் முழுவதுமாய் பரிசுத்தமாய் இருக்கப் பிரயாசப்படுவதாகும் பிலிப்பியருக்கு தான் எழுதிய நிருபத்தில், பவுல் நமக்கு கூறுகிறார். "சகோதரரே, அதைப் பிடித்துக் கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை; ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி... தொடருகிறேன்" (பிலிப்பியர் 3:13-14; 2கொரிந்தியர் 3:18, 1தெசலோனிக்கேயர் 5:23, எபிரெயர் 12:14)

எ. நாம் "பரிசுத்தமாக்குதலை தேவபயத்தோடே பூரணப்படுத்த" பிரயாசப்பட்டுக் கொண்டேயிருப்பதன் காரணம் தேவன்மேல் நாம் கொண்டிருக்கிற பயபக்தியேயாகும். "தேவபயம்" என்று இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ளது. "பயத்துடன் கூடிய பக்தி" என்று தான் பொருள்படும்.

நாம் தொடர்ச்சியாக:-

1. நமது பரமபிதாவை பிரியப்படுத்த,

2. அவர் நம்மை எப்படியிருக்க விரும்புகிறாரோ அப்படியிருக்க,

3. அவர் நாம் எவைகளை செய்யும்படியாக விரும்புகிறாரோ, அவைகளை செய்ய,

4. அவருக்கு பிரியமற்ற உறவுகள் மற்றும் பங்காளித்தனங்களை விலக்க, முயற்சிக்காவிட்டால், நமக்கு உண்டாகிற அச்சம், பயம், இருதயத்தில் திகில் கொள்ளுதல் ஆகியவற்றைக் குறிக்கும்.

அவிசுவாசிகளோடு நீதிமான்களுக்குள்ள உறவு

(2 கொரிந்தியர் 6:14-7:1)

ஏ. அது, தேவன் நமக்கு என்ன செய்துவிடுவாரோ என்று பயப்படுவதல்ல, நம்மை அதிகமாய் நேசித்து, நமக்காக தனது ஒரே பேறான குமாரனை கொடுத்த நமது பரம பிதாவின் பார்வையிலே, நாம் பிரியமுள்ளவர்களாய் இருக்காமல் போய்விடுவோமென்று பயப்படுவதேயாகும். பேதுரு நமக்கு சொல்லுகிறார்: "அன்றியும், பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுது கொண்டு வருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்" (1பேதுரு 1:17).

முடிவுரை

அ. அவிசுவாசிகளோடு பொதுவானதொன்றும் நமக்கில்லை. நாம் பரிசுத்த ஆவியின் ஆலயமாயிருக்கிறோம். தீமையான உலகை விட்டு வேறு பிரிக்கப்பட்டு, பரிசுத்தத்தைத் தொடருகிறோம். நமக்கென்று அதிகமாய்க் கொடுத்த நமது பரம பிதாவை பிரியப்படுத்த நாம் விரும்புகிறோம்.

ஆ. பிலிப்பியருக்கு எழுதின தனது நிருபத்தில், பவுல், நமக்குக் கூறுகிறார் "நம்மில் தேறினவர்கள் யாவரும் இந்தச் சிந்தையாயிருக்கக் கடவோம்....நாம் எதுவரையில் தேறியிருக்கிறோமோ...(கிறிஸ்துவுக்குள்) அது முதல் நடப்போம்" (பிலிப்பியர் 3:15,16).

விசுவாசிகளும் பிசாசு பிடித்தலும் (2. கொரிந்தியர் 6:16)

முகவுரை

அ. அமெரிக்காவில் பெந்தெகொஸ்தே இயக்கம் ஆரம்பித்தது முதல், பிசாசுகள் விசுவாசிகளை பிடிக்க முடியுமா, முடியாதா என்பதேவிவாதத்தின்ஒருதலைப்பாயிருந்திருக்கிறது. இது மற்ற நாடுகளுக்கும் உள்ளது என்று நான் எண்ணுகிறேன்!!

ஆ. விசுவாசிகள்:

1. ஒரு விசுவாசியின் வாழ்க்கையிலுள்ள பரிசுத்த ஆவியின் ஆள்தத்துவம் மற்றும் வேலை.

2. கிறிஸ்துவை தங்கள் ஆண்டவரும், இரட்சகருமாய் ஏற்றுக்கொள்ளும்போது உண்டாகிற, பாவம் மற்றும் பொல்லாங்கினின்று அவர்கள் வேறுபிரிக்கப்படுதல், ஆகியவற்றை புரிந்துக்கொள்வார்களானால், விவாதத்தின் இந்த தலைப்பைக் குறித்து ஒரு வேளை அவர்கள் கொண்டுள்ளசிலபயங்களை அது அமைதிப்படுத்தும்.

1. விசுவாசிகள் பரிசுத்த ஆவியாகிய தேவனின் ஆலயமாயிருக்கிறார்கள் (பரிசுத்த வாசஸ்தலம்), பிசாசினுடையதல்ல. (2கொரிந்தியர் 6:16).

அ. வசனம் 16. "நாம் தேவனுடைய ஆலயமாயிருக் கிறோம். நம்மை கிரயத்திற்கு வாங்கின தேவனே, நமக்குள் தனிப்பட்ட விதத்திலேயும், கூட்டாகவும், நமக்குள்ளே வாசம் செய்து, நமதுகர்த்தரும், ஆண்டவருமாயிருக்கிறார். (1பேதுரு 1:18-19; 2:9, யோவான் 14:17, 1கொரிந்தியர் 6:19-20; 3:16-17; ரோமர்8:9).

ஆ. எபேசியருக்கு தான் எழுதின நிருபத்திலே, பழைய ஏற்பாட்டு மற்றும் புதிய ஏற்பாட்டு பரிசுத்தவான்கள், "முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிற... மாளிகை" போலிருக்கிறார்கள், என்று நமக்கு பவுல் கூறுகிறார். (எபேசியர் 2:21). புதிய ஏற்பாட்டு சபையைக் குறித்து குறிப்பாகச் சொல்லும்போது, அவர், "அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக் கட்டப்பட்டு வருகிறீர்கள்" என்று கூறுகிறார். (எபேசியர்2:22).

இ. விசுவாசிகள் "தேவனுடைய ஆலயமாயிருக் கிறார்கள்" என்று அவர் சொல்லும்போது, பவுல் பழைய ஏற்பாட்டு தேவாலயத்தை மனதிலே கொண்டிருக்கிறார். மகா பரிசுத்த ஸ்தலத்திலுள்ள கிருபாசனத்தில், மேலுள்ள, ஒன்றை ஒன்று நோக்கியிருக்கிற இரண்டு கேரூபீன்களுக்கு நடுவிலே, தேவாலயத்திலே, தேவன் பிரசன்னமாயிருக்கிறார்.

எருசலேம் தேவாலயத்தில் இருந்தது போல, தேவன் இப்பொழுது ஒவ்வொரு விசுவாசிக்குள்ளும் தனிப்பட்ட விதத்திலேயும், கூட்டாக தனது ஜனத்தின் நடுவேயும், பிரசன்னராயிருக்கிறார்.

ஈ. வசனம் 16. "நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று தேவன் சொன்னபடி" இந்த எண்ணமானது, பழைய ஏற்பாட்டின் மூன்று வேத வசனங்களிலிருந்து உருவாகிறது:

1. "நான் உங்கள் நடுவிலே உலாவி, உங்கள் தேவனாயிருப்பேன், நீங்கள் என் ஜனமாயிருப்பீர்கள்" (லேவியராகமம் 26:12).தேசங்களின் நடுவிலே பாழாய்ப்போகப் பண்ணுவேன் (எசே 29:12).

**விசுவாசிகளும்
பிசாசு பிடித்தலும்
(2. கொரிந்தியர் 6:16)**

2. "அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள், நான் அவர்கள் தேவனாயிருப்பேன்" (எரேமியா 32:38).

3. "என் வாசஸ்தலம் அவர்களிடத்தில் இருக்கும், நான் அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனமாயிருப்பார்கள்" (எசேக்கியேல் 37:27).

விசுவாசிகள், பரிசுத்த ஆவியாகிய தேவனின் ஆலயமாயிருக்கிறார்கள் (வாசஸ்தலம்), பிசாசுனுடையதல்ல!.

உ. சாத்தானையும் அவனது பிசாசுகளையும், அவர்களது கிளர்ச்சி மற்றும் கலகத்தின் காரணமாக பரலோகத்திலிருந்து துரத்தின தேவன், தன்னுடைய பிரசன்னத்தில் இன்று தங்குவதற்கு நிச்சயமாய் அனுமதிக்கமாட்டார். (எசேக்கியேல் 28:12-17; ஏசாயா14:12-14; லூக்கா10:18).

2. தங்களுக்குள் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்துக்கொண்டிருக்கிற விசுவாசிகளை பிசாசுகள் பிடிக்க முடியாது. (மத்தேயு 12:43-45).

அ. வசனம் 43 "அசுத்த ஆவி ஒரு மனுஷனைவிட்டுப் புறப்படும்போது, வறண்ட இடங்களில் அலைந்து, இளைப்பாறுதல் தேடியும் காணாமல்". "வறண்ட இடம்" என்பது, தண்ணீரற்ற இடத்தை, காய்ந்ததும் வனாந்தரம் போன்ற இடங்களைக் குறிக்கிறது. மேலும் "இளைப்பாறுதல்" என்பது, புத்துயிர் அளித்து, சற்று தளர்த்துகின்ற நேரம் என்று பொருள்படும்; மனுஷர்களை விட்டு கிளம்பும் போது, அல்லது வெளியே வரும்போது, பொல்லாத ஆவிகள் (பிசாசுகள், அசுத்த ஆவிகள்) வனாந்திரம் போன்ற இடங்களில் இளைப்பாறுதல் மற்றும் புத்துயிர் அளிக்கும் நேரத்தை தேடுகின்றன என்பது தெளிவாகிறது. ஆனாலும், அவைகள் சிலரை பிடித்துக் கொண்டு, அவர்களுக்கு துன்பம் விளைவிக்காவிட்டாலோ, அவைகள் ஒருபோதும் திருப்தி அடைவதில்லை.

ஆ. வசனம் 44. பின்பு அது "நான் விட்டு வந்த என் வீட்டுக்குத் திரும்பிப் போவேன் என்று சொல்லி, அங்கே வந்து, அந்த வீடு வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப் பட்டதாகவும் இருக்கக்கண்டு". பிசாசு ஒரு மனுஷனை விட்டு வெளியே வரும்போது, அந்த நபர், வெறுமையாகவும், பெருக்கி, ஜோடிக்கப்பட்ட வீட்டைப்போல இருக்கிறான்.

இ. வசனம் 45. "திரும்பிப்போய், தன்னிலும் பொல்லாத வேறு ஏழு ஆவிகளைத் தன்னோடே கூட்டிக் கொண்டுவந்து, உட்புகுந்து, அங்கே குடியிருக்கும், அப்பொழுது அந்த மனுஷனுடைய முன்னிலைமையிலும் அவன் பின்னிநிலைமை அதிக கேடுள்ளதாயிருக்கும்." பிசாசுகள் துரத்தப்பட்ட ஒரு நபர் பிசாசு திரும்பி வருமுன், இயேசுவை, ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக் கொள்ளாவிட்டால், மீண்டும் அவனுக்குள் பிரவேசித்து, அவனை அது ஆள முடியும். உண்மையில், மற்ற பிசாசுகளும் விரும்பினால், அவனோடு கூட வரலாம்!.

ஈ. ஆகவே ஒரே ஒரு பிசாசு பிடித்திருந்தபோது இருந்ததை விட, அந்த நபர் இன்னும் மோசமாகிறான். கிறிஸ்துவை அறிவதின் மூலம் இந்த உலகத்தின் கறைகளினின்று தப்பின ஒருவன், மறுபடியும் அதில் சிக்கி, பாவத்தினாலும், பொல்லாப்பினாலும் மேற்கொள்ளப்படுவது போலாகும். (2பேதுரு 2:21-22).

விசுவாசிகளும் பிசாசு பிடித்தலும் (2. கொரிந்தியர் 6:16)

உ. பிசாசுகள் தங்களை விட்டுப்போனபின்பு, இயேசுவை தங்கள் ஆண்டவரும், இரட்சகருமாக ஏற்றுக்கொண்ட நபர்களுக்கோ அது வித்தியாசமாக இருக்கிறது. அவர்கள் இயேசுவின் மேல் விசுவாசம் வைக்கும்போது, ஒரே நேரத்தில் பல காரியங்கள் நடக்க ஆரம்பிக்கின்றன.

1. அவர்களுடைய ஆவிகளின் புதிய பிறப்பை பரிசுத்த ஆவி உண்டாக்குகிறது (யோவான் 3:3-8).

2. அவர்களது பாவ சுபாவத்தின் வல்லமையிலிருந்து விடுதலையாக்கப் படுகிறார்கள். (ரோமர் 8:1-4).

3. சாத்தானின் ஆளுகையிலிருந்து அவர்கள்எடுக்கப்படுகிறார்கள் (1யோவான் 5:18-19).

4. பரிசுத்த ஆவியானவர் அவர்களில் வாசம் செய்து, அவர்களது ஜீவியத்தை ஆளுகிறார் (ரோமர் 8:9; 1கொரிந்தியர்6:19, 12:13, யோவான் 14:17).

ஊ. எப்பொழுது அசுத்த ஆவி, ஒரு நபருக்குள் பரிசுத்த ஆவியை பெரியவரும், வல்லமையுள்ளவராயும் வாழ்வதைப் பார்க்கிறதோ, அது மறுபடியும் உள்ளே நுழைய முயற்சிக்கிறதில்லை. (1யோவான் 4:4). அப்படித்தான் அவனது பிசாசு நண்பர்களும் கூட!.

எ. இயேசுவின் நாமத்தில் (அதிகாரத்தில்) பிசாசுகளை நாம் நபர்களை விட்டு விரட்டும்போது, அவர்கள் கிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொள்ளச் செய்வது எவ்வளவு முக்கியம் என்பதை இது வெளிப்படுத்துகிறது.

(மாற்கு 16:17; லூக்கா10:17-19; அப்போஸ்தலர் 16:18; யோவான் 14:12) தங்களது விசுவாசத்தை அவர்மேல் அவர்கள் வைக்காவிட்டால்:

1. பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வாசம் பண்ண வரமாட்டார்.

2. பிசாசு தன்னுடைய சில பிசாசு நண்பர்களோடு கூட திரும்பி வருவான்!.

ஏ. வசனம் 45. "அப்படியே இந்தப் பொல்லாத சந்ததியாருக்கும் சம்பவிக்கும்" "இந்தப் பொல்லாத சந்ததி" என்பது இப்பொழுதுக்கும், சபைக்கான கிறிஸ்துவின் இரகசிய வருகையில் அவரது தோற்றத்திற்கும் நடுவிலுள்ள ஜனங்கள் மற்றும் நேரத்தைக் குறிக்கிறது. "பொல்லாத" என்பது சீரழிகிற, வருத்தம், வேதனை மற்றும் துன்பத்தை உண்டாக்குகிற தீய நாடோடிகளின் தலைமுறையைக் குறிக்கும். "விபச்சாரமாய்" இருப்பது என்பது, ஒரு விபச்சாரியைப் போல நடப்பது. (வேசி) தன்னுடைய புருஷனுக்கு உண்மையில்லாமலிருந்த ஒரு ஸ்திரீயைப் போன்றதாகும். (ஓசியா4:12, 5:4; 9:1) இக்காலத்தின் மக்கள், அதிக காலத்திற்கு தேவனுக்கு உண்மையற்றவர்களா யிருக்கிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய விபச்சாரம் செய்தும், செய்துக் கொண்டும்இருக்கிறார்கள் (யாக்கோபு 4:4)

ஐ. கிறிஸ்துவை ஆண்டவரும் இரட்சகருமாக ஏற்றுக்கொள்ளாவிட்டால், அவர்களை விட்டுப்போகவும் அவர்களது மாம்ச சரீரத்தின் உட்குழிக்குள்ளே மீண்டும் நுழையவும் அவைகளின் விருப்பம் போல செய்ய, பிசாசுகளுக்கு விடுதலையுண்டு. ஆனால் இது, பரிசுத்த ஆவியானவரை தங்களுக்குள் வாழ்கிறவராக கொண்டிருக்கிறவர்களுக்கு பொருந்தாது!.

விசுவாசிகளும்
பிசாசு பிடித்தலும்
(2. கொரிந்தியர் 6:16)

3. தார்மீக பொல்லாப்பு மற்றும் அசுத்தமான பிசாசுகளினின்று விசுவாசிகள் வேறு பிரிக்கப்பபட்டவர்கள் (2கொரிந்தியர் 6:17-18).

அ. வசனம் 17-18. விசுவாசிகள் பிசாசுகள் பிடித்தவர்களாக முடியாது என்று சொல்வதற்கு மூன்றாவது காரணம் அவர்கள் பாவம் மற்றும் பொல்லாப்பினின்று வேறு பிரிக்கப்பட்டவர்கள். இந்த இரண்டு வசனங்களிலும், தேவன், இஸ்ரவேல் தேசத்தை அவர்களது பாபிலோனிய சிறையிருப்பு, மற்றும் நாடு கடத்தலிலிருந்து வெளியே வரும்படி அழைத்ததைக் கூறும் பழைய ஏற்பாட்டு வேதப் பகுதிகளிலிருந்து, பவுல், மேற்கோள் காட்டுகிறார். அசுத்தமானதாய் கருதப்பட்ட யாவையும் தங்களுக்கு பின்னே விட்டு விட்டு, தேவாலயத்தின் பரிசுத்த பாத்திரங்களை மட்டுமே எடுத்துசெல்லும்படி சொல்லப்பட்டார்கள்.

1. "அவ்விடம் விட்டுப் போங்கள்; அசுத்தமானதைத் தொடாதிருங்கள்; உங்களைச் சேர்த்துக்கொள்வேன்" (ஏசாயா 52:11; எசேக்கியேல் 11:17; 30:34,41, செப்பனியா 3:20).

2. "நான் உங்கள் பிதாவாயிருப்பேன், நீங்கள் என் குமாரரும், குமாரத்திகளுமாயிருப்பீர்கள்" என்று சர்வவல்ல கர்த்தர் கூறுகிறார். (யெகோ, யெகோவா, சர்வவல்லவர், தனிப்பட்ட இஸ்ரவேலின் உடன்படிக்கையின் தேவன்" (2சாமுவேல் 7:14; எரேமியா 31:9, ஓசியா1:10 ஏசாயா43:6).

(ஆ. "வெளியே வருவது", "வேறுபிரிக்கப்பட்டு இருப்பது", "அசுத்தமானதை தொடாதிருப்பது" ஆகியவற்றின் அர்த்தம், தேவனோடு கூட பரிசுத்தமான வாழ்க்கையை தொடராதிருக்கிற, எல்லாவற்றிலிருந்தும், எல்லா இடத்திலிருந்து நாம் கடந்து போக வேண்டும் என்பதே (எபிரெயர் 12:1). எல்லா பாவம் மற்றும் பொல்லாங்கு, எல்லா பாவம் மற்றும் பொல்லாத ஜனங்களினின்றும் (அவர்களோடு வேலை செய்வது, மற்றும் அவர்களோடும், அவர்களுக்கருகிலும் வாழ்வதின் அவசியத்தைத் தவிர) முற்றிலும் நாம் வேறுபிரிக்கப்பட்டவர்களாய் இருக்கவேண்டும்.

இது எல்லா அசுத்த மற்றும் பொல்லாத ஆவிகளையும் (பிசாசுகள்) சேர்க்கும்' கறைப்படுத்தக்கூடிய எல்லாவற்றையும் விட்டு, நமது சரீரம், மனம் மற்றும் ஆவியை சுத்தமாகவும், வேறு பிரிக்கப்பட்டதாகவும் வைத்துக்கொள்ள பிரயாசப்படவேண்டும்.

இ. தனது முதலாம் நிருபத்தில் பேதுரு கூறுகிறார்: "உங்களை அழைத்தவர் பரிசுத்தராயிருக்கிறது போல, நீங்களும் உங்கள் நடக்கைகளெல்லாவற்றிலேயும் பரிசுத்தராயிருங்கள்".

"நான் பரிசுத்தர் ஆகையால் நீங்களும் பரிசுத்தராயிருங்கள்" (1பேதுரு 1:15-16; லேவியராகமம் 11:44-45, 19:2, 20:7, எசேக்கியேல் 39:7). "பரிசுத்தம்" என்ற பதத்தின் அர்த்தம் வித்தியாசமாய் இருப்பது; வேறு பிரிக்கப்பட்டிருப்பது விசுவாசிகள் தார்மீக பொல்லாப்பு மற்றும் அசுத்தத்தினின்று வேறு பிரிக்கப்பட்டு, தேவனுக்கென்று முழுவதுமாய் தத்தம்செய்யப்பட்டு (ஒப்புக்கொடுக்கப்பட்டு) இருப்பதால், அவர்கள் மற்ற மனிதரிலும் வித்தியாசமானவர் களாய் இருக்கவேண்டியவர்கள்.

விசுவாசிகளும் பிசாசு பிடித்தலும் (2. கொரிந்தியர் 6:16)

ஈ. பாவம், பொல்லாப்பு, தார்மீக அசுத்தம் ஆகியவற்றிலிருந்து தேவன் பிரிந்திருக்கிறவர். உலகிலுள்ள பொல்லாத மனுஷர்களினின்று அவர் வித்தியாசமானவர். பொல்லாத மற்றும் அசுத்த ஆவிகளிலிருந்தும் கூட அவர் பிரிந்திருக்கிறவர்! அவருடைய பிள்ளைகள் என்ற முறையில், விசுவாசிகளும் பாவம், பொல்லாப்பு, மற்றும் தார்மீக அசுத்தத்தினின்று பிரிந்திருக்கிறவர்கள். உலகிலுள்ள பொல்லாத மனுஷர்களிலிருந்தும் அவர்கள் வித்தியாசமானவர்கள். அவர்களும், தங்கள் பரலோக பிதாவைப்போல, பிரிந்திருக்கிறவர்களாகவும், பொல்லாத, மற்றும் அசுத்த ஆவிகளிலிருந்தும் வித்தியாசமானவர்களாய் இருக்கின்றனர். இதனாலேயே, அவர்கள் பிசாசு பிடித்தவர்களாக முடியாது. இது நடைபெறுமுன், அவர்கள் கிறிஸ்துவின் எதிரியாய் மாறி, பரிசுத்த ஆவியானவர் தங்களிலிருந்து வெறியேற விட வேண்டும். (எபிரெயர் 6:4-6; சங்கீதம் 51:11; ஏசாயா63:10; எபேசியர் 4:30; எசேக்கியேல்10:4, 18-19; 1சாமுவேல் 16:14; 20:15-16).

உ. கொரிந்தியருக்கு எழுதின தனது முதலாம் நிருபத்திலே, பவுல் நமக்கு கூறுகிறார். "அஞ்ஞானிகள் பலியிடுகிறவைகளை தேவனுக்கு அல்ல, பேய்களுக்கே பலியிடுகிறார்களென்று சொல்கிறேன்; நீங்கள் பேய்களோடே ஐக்கியமாயிருக்க எனக்கு மனதில்லை. நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும், பேய்களுடைய பாத்திரத்திலும் பானம்பண்ணக் கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜன பந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக் கூடாதே (1கொரிந்தியர் 10:20-21). பழைய, மற்றும் புதிய ஏற்பாடு ஆகிய இரண்டிலுமே, விக்கிரகங்கள், பேய்களைக் குறித்தன. (உபாகமம் 32:17).

"விக்கிரக ஆராதனை மற்றும் போஜன பந்திகளுக்குப் பின் பேய்கள் இருக்கின்றன!."

ஊ. ஆகவே, விசுவாசிகள் பேய்களிடத்தில பக்தி காட்டி அவைகளுக்கு படைக்கப்பட்ட போஜனபந்திகளில் புசித்துக்கொண்டு, கர்த்தரிடத்தில் பக்தி காட்டி, அதே வேளையில் கர்த்தருடைய பந்தியில் புசிக்க முடியாது.

அவர்கள் ஒரு தேர்வு செய்யவேண்டும். பேய்களோடு ஐக்கியங்கொண்டிருக்கும்போது, ஒரு நபர் கர்த்தரோடு ஐக்கியம் கொள்ளமுடியாது. பேய்களுக்கும், கர்த்தருக்கும் எந்த தொடர்புமில்லை. ஒரே இடத்தில் அவைகள் தங்காது, தங்கவும் முடியாது, ஏனென்றால், விசுவாசிகள், அவிசுவாசிகள் போல, அவைகளுக்கு பொதுவானதொன்றுமில்லை (2கொரிந்தியர் 6:14-15). விசுவாசிகள் பிசாசு பிடித்தவர்களாக முடியாது என்ற கூற்றிற்கு இதுவும் இன்னொரு காரணம்.

முடிவுரை

அ. பிசாசுகள், விசுவாசிகளை பிடிக்க முடியாது:

1. பரிசுத்த ஆவியாகிய தேவனின் ஆலயமாய் விசுவாசிகள் இருக்கிறார்கள், பேய்களின் அல்ல.

2. தங்களுக்குள் பரிசுத்த ஆவியானவரை வாசம் செய்ய கொண்டிருக்கும் விசுவாசிகளை பேய்கள் பிடிக்க முடியாது.

3. தார்மீக பொல்லாப்பு மற்றும் அசுத்தமான பேய்களினின்று விசுவாசிகள் பிரிக்கப்பட்டவர்கள்.

விசுவாசிகளும் பிசாசு பிடித்தலும் (2. கொரிந்தியர் 6:16)

ஆ. ஆனால் விசுவாசிகள் பிசாசோடு பிணைப்பு மற்றும் தொடர்பை மீண்டும் ஸ்தாபிக்க முடியும். அவர்கள் இவ்வுலகில் அவிசுவாசிகள் நடுவில் வாழ்கிறார்கள்; சில வேளைகளில் அவர்களோடு தார்மீக ரீதியிலே உரசி, அவர்களது பொல்லாத, மற்றும் பாவ வழிகளில் எளிதில் ஈடுபடக்கூடும். தங்களது பரலோக பிதாவைக் கேட்பார்களாகில் அவர்:

1. தீமையினின்று (தீமையானவனிடமிருந்து), விடுவித்து (காப்பாற்றி) (இழுத்து).

தன்னிடம் சேர்த்துக்கொள்வார் (மத்தேயு 6:13).

2. அவர்கள் பிசாசோடு நிறுவின சங்கிலிகள், கட்டுகளை உடைப்பார்.

இ. ஆனால், முற்றிலும் கிறிஸ்துவை விட்டு திரும்பி, அவருக்கு சத்துருவாய் மாறி, பொல்லாங்காய், அசுத்தமாயிருக்கும் விசுவாசிகளோ, பேய் பிடிப்பதற்கு சாத்தியமுள்ளவர்களாயிருக்கிறார்கள். இது, பரிசுத்த ஆவியானவர் அவர்களை விட்டு கடந்துப்போனதால் ஆகும் (எபிரெயர் 6:4).

தேவையுள்ள மற்ற சபைகளுக்குக் கொடுப்பது (2 கொரிந்தியர் 8:1-15)

முகவுரை

அ. வேதத்தின் இந்தப் பகுதியிலே, தரித்திரமும், போராட்டமும் நிறைந்த எருசலேமின் சபைக்காக, மக்கெதோனியாவின் சபைகள் (பிலிப்பி, தெசலோனிக்கேயா, பெரேயா) வசூலித்த பணத்தைக் குறித்து பவுல் கூறினார்.

ஆ. தான் கொரிந்தியருக்கு எழுதின முதலாம் நிருபத்தின் கடைசியிலே, இந்த பண வசூலிப்பை அவர் ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறார் (1 கொரிந்தியர் 16:1-4). அந்த நேரத்தில், சபையில் காணிக்கை எப்படி எடுக்கப்படவேண்டும் என்றும், அந்த காணிக்கையை எருசலேமிற்கு கொண்டு செல்ல ஆட்களை எப்படி தெரிந்தெடுக்கவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

இ. ஆனால் ஒரு கலகக்கார பிரிவானது, தனது அசிங்கமான தலையை கொரிந்துவிலே உயர்த்தி, எருசலேமிலுள்ள தரித்திரம் நிறைந்த சபைக்கு உதவுவதைக் காலதாமதம் செய்திருந்தது. அந்த கலகம் ஏதோ ஒரு முடிவுக்கு கொண்டு வரப்பட்டது வெளிப்படையாகிறது. ஏனெனில், இப்பொழுது, அப்போஸ்தலர் காரியத்தை மீண்டும் அவர்களோடு பேசுகிறார்.

ஈ. இந்த சிறிய வேதப்பகுதியானது (2 கொரிந்தியர் 9:6-15) ஒவ்வொரு காலத்திலும் உள்ள சபைக்கு பொருத்தமாகக் கூடிய கிறிஸ்தவ கொடுத்தலின் தத்துவத்தைக் கொண்டிருக்கிறது.

1. தேவையிலுள்ள மற்ற சபைகளுக்குக் கொடுப்பதில் மக்கெதோனியா சபைகள் ஒரு உன்னத மாதிரியாய் உள்ளன (ஊழியம்) (8:1-9)

அ. வசனம் 1: "மக்கெதோனியா நாட்டுச் சபைகளுக்கு தேவன் அளித்த கிருபையை உங்களுக்கு அறிவிக்கிறோம்." "கிருபை" என்பது மற்றவர்களுக்கு கொடுக்கவும், அதை வெளியரங்கமாக காண்பிக்கும் திறமையை கொண்டிருக்கவும் செய்யக்கூடிய இருதயத்திலுண்டாகும் தெய்வீக செல்வாக்காகும்; தேவைகளுள்ள மற்ற சபைகளுக்கு கொடுக்கக்கூடிய, மக்கெதோனியா சபைகளிலுள்ள விசுவாசிகளின் சந்தோஷம், மகிழ்ச்சி மற்றும் விடுதலையாகும். "தேவைகளுள்ள என் சகோதர சகோதரிகளுக்கு கொடுக்கும்படியான இந்த சந்தர்ப்பத்தை எனக்கு கொடுத்ததற்காக, பிதாவே உமக்கு ஸ்தோத்திரம்" என்று சொல்லக் கூடிய சாதுரியத்தையும் இது கொண்டுள்ளது.

ஆ. வசனம் 2: "அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினாலே சோதிக்கப்படுகையில், கொடிய தரித்திரமுடையவர்களாயிருந்தும், தங்கள் பரிபூரண சந்தோஷத்தினாலே மிகுந்த உதாரத்துவமாய்க் கொடுத்தார்கள்."

"மிகுந்த உபத்திரவம்" என்பது, கிறிஸ்துவுக்காகவும், சுவிசேஷத்திற்காகவும், மக்கெதோனியா சபைகளிலுள்ள விசுவாசிகள் அனுபவித்துக் கொண்டிருந்த உபத்திரவத்தைக் குறிக்கிறது. இந்த உபத்திரவத்தைக் குறித்து, நாம் பவுல் தெசலோனிக்கேயருக்கு எழுதின முதலாம் நிருபத்திலேயும், அப்போஸ்தலரிலுள்ள லூக்காவின் சாட்சியிலும் காண்கிறோம் (1 தெசலோனிக்கேயர் 1:6; 2:14; அப்போஸ்தலர் 16:20; 17:5). இது போதாதென்று, மக்கெதோனியாவிலுள்ள சபைகள் மிகவும் தரித்திரர்களாயிருந்தார்கள்.

இ. எடுத்துக்காட்டாக விளங்குகிறபடி, நம்மில் மிகுந்த தரித்திரமுடையவர்களும், மிகவும் அதிகமாக உபத்திரவப் பட்டவர்களுமே மற்ற பரிசுத்தவான்களுக்கும், சபைகளுக்கும் உதவும்படி கேட்கப்படும்போது, அதிகமாய் கொடுக்கிறார்கள்.

தேவையுள்ள மற்ற சபைகளுக்குக் கொடுப்பது (2 கொரிந்தியர் 8:1-15)

இரண்டே சிறிய காசுகளை தேவாலயத்தின் பொக்கிஷ சாலையில் போட்ட விதவைக்கு இயேசு சொன்னது போல, நிச்சயமாய் மக்கெதோனியாவிலுள்ள சபைகளுக்கு சொல்லுவார். "நீங்கள் மற்றெல்லாரைப் பார்க்கிலும் அதிகமாய் போட்டீர்கள் (ஏனெனில்) நீங்கள் உங்கள் வறுமையிலிருந்து (உங்கள்) ஜீவனத்துக்கு உண்டாயிருந்ததெல்லாம் (காணிக்கையை) போட்டு விட்டீர்கள் (லூக்கா 21:4) இயேசு மிகவும் திருப்தியடைந்தாரென்று அறிவேன்!.

ஈ. வசனம் 3 "தங்கள் திராணிக்கு மிஞ்சியும் கொடுக்க, தாங்களே மனதுள்ளவர்களாயிருந்தார்களென்பதற்கு நான் சாட்சியாயிருக்கிறேன்" பவுல் அல்லது மற்ற அப்போஸ்தலர் களிடத்திலிருந்து எந்தக் குறிப்பிட்ட வேண்டுகோளோ அல்லது கட்டாயமோ இல்லாமலேயே, மக்கெதோனியாவின் விசுவாசிகள் தங்கள் திராணிக்கு மிஞ்சி ஒரு வேளை கொடுத்திருப்பார்கள்.

உ. வசனம் 4 "தங்கள் உபகாரத்தையும், பரிசுத்த வான்களுக்குச் செய்யப்படும் தர்ம ஊழியத்தின் பங்கையும் நாங்கள் ஏற்றுக்கொள்ளும்படி அவர்கள் எங்களை மிகவும் வேண்டிக்கொண்டார்கள்" "மிகவும் வேண்டிக் கொள்வது" என்பது பலமான வேண்டுகோள் விடுப்பது, ஒரு சந்தர்ப்பத்திற்காக கெஞ்சுவதாகும் "ஊழியத்தின் பங்கு" என்பது எருசலேமிலுள்ள விசுவாசிகளுக்காக, கொரிந்து சபை எடுத்த காணிக்கையைக் குறிக்கிறது. மக்கெதோனியா சபைகள் எப்பொழுது அதைக்குறித்து கேள்விப்பட்டார்களோ, அப்பொழுதே, இந்த ஊழிய முயற்சியின் ஒரு பகுதியாக தாங்கள் இருப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தைக் கொடுக்கும்படி அவசரமாக கெஞ்சினார்கள்.

ஒருவருக்காக ஒருவர் செய்யும் உலகளாவிய விசுவாசிகளின் ஐக்கியத்தின் ஒரு பங்காக இருப்பதை அவர்கள் ஒரு சிலாக்கியமாக எண்ணினார்கள்!

ஊ. வசனம் 5 "தேவனுடைய சித்தத்தினாலே முன்பு தங்களைத் தாமே கர்த்தருக்கும், பின்பு எங்களுக்கும் ஒப்புக் கொடுத்தார்கள்" அத்தியாவசிய தேவையோடிருந்த மற்ற பரிசுத்தவான்களுக்கும், சபைகளுக்கும் தாங்கள் கொடுப்பது, தேவசித்தம் என்பதை அறிந்ததினால், மக்கெதோனியர்கள் எருசலேமின் சபைக்கு கொடுத்தார்கள் (நீதிமொழிகள் 11:24-25; 19:17; லூக்கா 6:38).

கிறிஸ்துவிற்கு உள்ள தங்கள் அர்ப்பணிப்பானது, தங்களை ஜீவ பலிகளாக ஒப்புக்கொடுப்பதையும் கொண்டிருந்தது. (ரோமர் 12:1) தகுதியானதாகக் கருதப்படும் சேவைக்கென அப்போஸ்தலர்களுக்கு தங்களை கிடைப்பவர்களாக்கினார்கள் (கலாத்தியர் 2:10).

எ. வசனம் 6 "ஆதலால், தீத்து இந்த தர்மகாரியத்தை உங்களிடத்தில் தொடங்கினபடியே, அதை முடிக்கவும் வேண்டுமென்று அவனைக் கேட்டுக் கொண்டோம்". கொரிந்து சபைக்கு பவுல் எழுதின முதலாம் நிருபத்தை தன் கையாலே தீத்து கொண்டு சென்றது தெளிவாகிறது. அந்த நேரத்தில் எருசலேமிற்கான காணிக்கை சேகரிப்பைக் குறித்த பவுலின் போதனைகளை அவன் படித்தறிந்து, இந்த நிதிக்கென்று ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஒரு தொகையை எடுத்து வைக்கத் தொடங்கியிருந்தான் (1கொரிந்தியர் 16:1-4). இன்னும் சமீபகாலத்தில், தாங்கள் முன்பு தொடங்கின காரியத்தை முடிக்கும்படி பவுலி டத்திலிருந்து போதனைகளோடு அவன் திரும்பியிருந்தான்.

தேவையுள்ள மற்ற சபைகளுக்குக் கொடுப்பது (2 கொரிந்தியர் 8:1-15)

ஏ. வசனம் 7 "மற்றெல்லாக் காரியங்களிலும் நீங்கள் பெருகியிருக்கிறதுபோல, இந்த தர்மகாரியத்திலும் பெருகவேண்டும்" "எல்லாக் காரியங்கள்" என்பது கொரிந்துவிலுள்ள சபையிலே அபரிமிதமாக வெளிப்படுத்தப் பட்டுக் கொண்டிருந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆவிக்குரிய வரங்களைக் குறிக்கிறது. (1கொரிந்தியர் 1:5-7; அதிகாரங்கள் 12-14; முக்கியமாக 12:8-10).

1. விசுவாசம் (மற்றெல்லாத ஆவியின் வரங்களோடு வரும் ஆவிக்குரிய வரமாகிய விசுவாசம்)

2. பாஷை (அன்னிய பாஷைகள் மற்றும் அந்நிய பாஷையின் வியாக்கியானங்கள்)

3. அறிவு (அறிவின் செய்தி, ஞானத்தின் செய்தி, மற்றும் தீர்க்கதரிசனம்).

ஐ. இந்த ஆவியின் வரங்களை வெளிப்படுத்துவதில் கொரிந்தியர்கள் முற்றிலும் ஊக்கமாக இருந்தார்களென்று பவுல் கூட்டிக் கூறுகிறார். தாங்கள் தனிப்பட்ட விதத்தில் அவர்மீது கொண்டிருந்த அன்பை வெளிப்படுத்தும் ஒரு சந்தர்ப்பமாக இதை பயன்படுத்துகிறார். இது இல்லாத பட்சத்தில், ஆவியின் வரங்கள் வெளிப்படுவது மிகவும் அர்த்தமற்றதாக ஆக்கக்கூடிய ஒரு ஆவியின் கனி (கலாத்தியர் 5:22-23; 1 கொரிந்தியர் அதிகாரம் 13).

ஒ. தான், கொஞ்சம் முன்பு கூறின இயற்கைக்கு அப்பாற்பட்ட எழுப்புதலின் வரங்கள் வெளிப்பட்டது போல, "தேவையுள்ள மற்றவர்களுக்கு கொடுக்கும் வரமானது" கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் மூலம் ஏராளமாகவும், ஊக்கமாகவும் வெளிப்படுவதை காண விரும்பினதாலேயே, பவுல் இந்த ஆவியின் வரங்களைக் குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவியானவர் அவர்களுக்குள் வளர்த்திருப்பார் என்று நம்புகிற கிறிஸ்துவின் அன்பினால், இது உந்தப்படுவதை பார்க்க அவர் விரும்புகிறார்.

ஓ. வசனம் 8-9 "இதை நான் கட்டளையாகச் சொல்லாமல், மற்றவர்களுடைய ஜாக்கிரதையைக் கொண்டு, உங்கள் அன்பின் உண்மையைசோதிக்கும்பொருட்டே சொல்லுகிறேன்" தான் யாரையும், மற்றவர்களுக்குக் கொடுக்கும்படி பலவந்தம் பண்ண முடியாது என்பதை பவுல் அறிவார். கொரிந்துவிலுள்ள விசுவாசிகள்:

1. பரிசுத்த ஆவியின் சத்தத்தை அறியக்கூடிய நிலைக்கு, கர்த்தரோடு உள்ள தங்கள் நடையில் முதிர்ச்சி அடைந்தார்கள் என்றும், தேவையுள்ள மற்றவர்களுக்கு கொடுக்கும்படி அவர் உந்தும்போது செயல்படுவார்கள் என்றும்,

2. மக்கெதோனியாவின் சபைகளிலுள்ள விசுவாசிகள் மூலம் வெளிப்பட்ட ஈவின் கிருபையின் மாதிரியை பின்பற்றுவார்களென்றும்,

3. (தான் தேவனாக இருந்தும்) தன்னை வெறுமையாக்கி, நாம் ஐசுவரியவான்களாகும்படி அடிமையின் ரூபமெடுத்த கிறிஸ்து காட்டின பரம ஈவின்கிருபைமாதிரியைநாம்பின்பற்றுபவர்களென்று ம், அவரால் நம்பத்தான்முடியும் (பிலிப்பியர் 2:6-8).

2. தான் பெற்றிருக்கும் மற்ற தேவைகளுள்ள சபைகளுக்கு (ஊழியங்களுக்கு) ஒருவன் கொடுப்பதுநிர்ணயிக்கப்படுகிறது (8:10-12).

அ. வசனம் 10"இதைக்குறித்து என் யோசனையை உங்களுக்கு அறிவிக்கிறேன்; வேலையை செய்து நிறைவேற்றுங்கள்" என்றால், எருசலேம் சபைக்காக கடந்த வருஷத்திலே, கொரிந்து விசுவாசிகள் சேர்க்க ஆரம்பித்த பணத்தை, சேர்த்து முடிப்பது என்று அர்த்தம். மீண்டும்

தேவையுள்ள மற்ற சபைகளுக்குக் கொடுப்பது (2 கொரிந்தியர் 8:1-15)

இது ஒரு கட்டளைபல்ல, ஒரு கருத்தே, "ஆலோசனை" என்றால் என்னுடைய சிறந்த நியாயத்தீர்ப்பு, என் எண்ணம், இந்த காரியத்தைக் குறித்த என் யோசனை.

ஆ. பவுலின் ஆலோசனையில் இந்த எண்ணமும் உள்ளடங்கியிருக்கிறது. "நீங்கள் தான் எருசலேம் சபைக்காக பணம் சேர்க்க ஆரம்பித்தீர்கள்.

மக்கெதோனியாவின் சபைகள் இதில் ஈடுபடுமுன்னே நீங்கள் இதை செய்ய விரும்பினீர்கள். ஆகையால் வேலைக்குச் சென்று, அதை நிறைவேற்றுங்கள்!". கிறிஸ்து சொல்லுவார் "கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனுடைய ராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல" (லூக்கா 8:62).

இ. வசனம் 11 "உங்களுக்கு உள்ளதின்படியே" கொரிந்து சபையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும், தனிப்பட்ட நபரும் தங்கள்

1. வருமானம்

2. செலவுகள்

3. தங்கள் தசமபாகங்கள் மற்றும் இதர காணிக்கைகள் ஆகியவற்றைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

மீதம் அவர்களிடத்தில் இருக்கக்கூடியதற்கு ஏற்ப, அவர்கள் எருசலேம் சபைக்கு கூடுதல் காணிக்கையைக் கொடுக்க வேண்டும். இது மிஷினெரி காணிக்கையாகக் கருதப்படும்.

ஈ. வசனம் 12 "ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால்,(ஈவானது)..அங்கீகரிக்கப்படும்" 'மற்றவர்களுக்கு கொடுப்பதிலுள்ள முக்கிய காரியம், தேவன் கொடுக்கிற திராணிக்கு ஏற்ப, ஆயத்தமாகவும், மனவிருப்பமுடையவர் களாகவும் இருப்பதே. அன்பும், மனவிருப்பமுள்ள இருதயம் நமக்கு இருக்குமட்டும், மற்றவர்களின் தேவைகளுக்கென்று நாம் கொடுப்பதற்கு திராணியை நமக்குக் கொடுக்க தேவன் தவறவே மாட்டார் (2கொரிந்தியர் 9:10). ஆகையால், தொகைஎவ்வளவாய்இருந்தாலும்,அதுதேவனுடையப ார்வையில்ஏற்றுக்கொள்ளப்படக்கூடியதாய்இருக்கும்'

உ. வசனம் 12 "அவனுக்கு இல்லாததின்படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கீகரிக்கப்படும்".தேவன்நமக்கு கொடுக்காததை நம்மால் கொடுக்க முடியாது. மற்றவர்களின் தேவைகளுக்கென்று நாம் கொடுக்கும்படியாக, திரும்ப நம்மால் செலுத்த முடியாத கடனை நாம் பெற்றால், முட்டாள்களாயிருப்போம். நம்முடைய சொந்த குடும்பத்தின் தேவைகளை சந்திக்க முடியாமல் போகுமளவிற்கு, அதிகமாய் கொடுப்போமானாலும்,நாம் முட்டாள்களாயிருப்போம் (1தீமோத்தேயு 5:8).

3. மற்ற தேவைகளுள்ள சபைகளுக்கு (ஊழியம்) கொடுப்பதினால், விசுவாசிகளிடையே சமநிலை பெறப்படுகிறது (8:13-15).

அ. வசனம் 13 "மற்றவர்களுக்கு சகாயமும், உங்களுக்கு வருத்தமும்" உண்டாவது எங்கள் விருப்பமல்ல, எருசலேமிலுள்ள தங்கள் சகோதர சகோதரிகளுக்கு தற்போது மறுக்கப்பட்டிருந்த செழிப்பின் ஒரு அளவை கொரிந்துவிலுள்ள விசுவாசிகள் அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் (கலாத்தியர் 6:10). மற்றவர்கள் ஆடம்பரத்தில் வாழும்படியாகவோ, அல்லது மற்றவர்கள் சோம்பேறித்தனமாய் இருந்ததாலேயே, தியாகமாக கொடுக்கும்படி அவர்கள் கேட்கப்படவில்லை.

ஆ. வசனம் 13 "சமநிலையிருக்கும்படியாகவே" "சமநிலை" என்பது ஒருவரைப்போல் ஒருவர் பொருளாதார செழிப்பிலிருப்பதே.

தேவையுள்ள மற்ற சபைகளுக்குக் கொடுப்பது (2 கொரிந்தியர் 8:1-15)

சூழ்நிலைகள் மற்றும் தேவைகளுக்கேற்ப, உலகளாவிய விசுவாசிகளின் சமுதாயத்தினிடையே, பரஸ்பரமான கொடுக்கல் வாங்கல் இருக்கவேண்டும். தேவன் கொடுக்கிறபடி, இலக்கானது, விசுவாசிகளிடையே உள்ள சமநிலையாகும்.

இ. வசனம் 14,15 "இக்காலத்திலே, உங்களுடைய செல்வம் அவர்களுடைய வறுமைக்கு உதவும். மாறாக, அவர்களுடைய செல்வம் உங்கள் வறுமைக்கு உதவும்". இக்காலத்தில், எருசலேம் விசுவாசிகளின் தேவையானது, கொரிந்துவிலுள்ள விசுவாசிகளின் தாராளமான ஈவின் மூலம் சந்திக்கப்படும். ஆனாலும், கொரிந்து சபையின் அத்தியாவசியமான தேவைகளுக்கு, எருசலேமின் விசுவாசிகள் கொடுக்கும்படி கேட்கப்படும் காலம் வரலாம்! எந்த நபரோ, அல்லது சபையோ, எப்பொழுது, துன்பம் அல்லது ஆபத்து அவர்களுக்கு வரக்கூடும் என்பதை அறியார்கள்!

ஈ. வசனம் 14-15 "எழுதியிருக்கிற பிரகாரம் சமநிலைப் பிரமாணம்" உண்டாகும். தான் சொல்லுவதை விளக்கும்படியாக, வனாந்தரத்திலே இஸ்ரவேலருக்கு மன்னா கொடுக்கப்படுவதை உதாரணமாகக் கூறுகிறார். (யாத்திராகமம் 16:18). மன்னாவை பகிர்ந்து கொடுப்பதின் மூலம் இஸ்ரவேலருக்குள் சமநிலையை தேவன் எவ்வாறு நிச்சயித்துக் கொண்டாரோ, அதேபோல நாமும் கூட விசுவாசிகள் மற்றும் சபைகளுக்கு உள்ளே சர்வதேச சமநிலை ஏற்பட நாம் முயன்று செல்லவேண்டும். அத்தியாவசிய தேவையிலிருப்பவர்களுக்கு, அதிகம் பெற்றவர்கள், தாங்கள் பெற்றுக் கொண்டிருப்பதற்கேற்ப கொடுக்க வேண்டும்.

முடிவுரை

அ. இக்கால முழுவதற்கும் சபைக்கு வழிகாட்டியாய் இருக்கக்கூடிய ஊழியங்களுக்கு கொடுக்கும் உன்னத எடுத்துக்காட்டை மக்கெதோனியா சபைகள் நமக்குக் கொடுக்கின்றன. அவர்கள் ஏழைகளாகவும், சுவிசேஷத் திற்காக உபத்திரவத்தை அனுபவிக்கிறவர்களாகவும் இருந்தார்கள். ஆனாலும், மிகவும் அதிகமாக தரித்திரமும், போராட்டமும் நிறைந்த எருசலேமின் சபையிலுள்ள விசுவாசிகளின் உணவு, உடை மற்றும் அடிப்படை தேவைகளுக்காக பயன்படக்கூடிய பணத்தை, தாங்கள் கொடுக்கும்படியாக பவுலை கெஞ்சினார்கள்.

ஆ. சில மாதங்களுக்கு முன்பு, எருசலேமிற்காக ஆரம்பித்த காணிக்கை சேகரிப்பை முடிக்கும்படி, கொரிந்து விசுவாசிகளை உற்சாகப்படுத்தும்படி, மக்கெதோனியா சபையின் ஈவை பவுல் குறிப்பிடுகிறார். இன்று தேவையுள்ள சபைகளுக்கு உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் நாம் உதாரத்துவமாய் கொடுக்கும்படி நம்மை உற்சாகப்படுத்த, பரிசுத்த ஆவியானவர் இதை ஒரு உதாரணமாகப் பயன்படுத்த உத்தேசித்தார் என்று நான் நிச்சயமாய் அறிவேன்.

இ. இந்த உதாரணத்தோடு கூட்டுவதன் மூலம் பவுல் நமக்கு சொல்லுகிறார்.

1. தான் பெற்றுள்ளதே, ஒருவன் கொடுப்பதை நிர்ணயிக்கிறது.

2. மிகவும் குறைவாக உள்ள சபைகளுக்கு அதிகமாக பெற்றுள்ள சபைகள் கொடுப்பதின் மூலமே, விசுவாசிகளின் மத்தியில் சமநிலையை அடையமுடிகிறது.

உதாரத்துவமாய்க் கொடுப்பது (2 கொரிந்தியர் 9:6-15)

முகவுரை

அ. பெந்தெகோஸ்தேக்கு பின் எருசலேமிலுள்ள சபையானது கஷ்டப்படுகிற ஒரு சபையாக இருந்தது. அது அநேக தரித்திரரைக் கொண்டதாகவும், பணத்தேவையிலும் இருந்தது. ஆகவே இரண்டு கொரிந்தியர் 8,9 அதிகாரங்களில், இந்த கஷ்டப்படுகிற சபைக்கு கொடுக்கப்பட வேண்டிய காணிக்கை சேகரிப்பை முடிக்கும்படி, பவுல், கொரிந்துவிலுள்ள விசுவாசிகளை உற்சாகப்படுத்துகிறார் (2 கொரிந்தியர் 8:6,10-11)

ஆ. எருசலேமின் சபையின் தேவைக்காக கொரிந்துவிலுள்ள சபை என்ன செய்கிறது என்பதை மக்கெதோனியாவிலுள்ள மற்ற சபைகளுக்கு பவுல் கூறியபோது, அவர்களுக்கு கொடுப்பதில் தாங்களும் பங்கடைய விரும்பினார்கள். அவர்களது உதாரத்துவமான ஈவின் நன்மைகளை விளக்குவதின் மூலம், இந்த காரியத்தின் தனது விவாதத்தை பவுல் முடிக்கிறார்.

1. உதாரத்துவமாய்க் கொடுப்பதின் மூலம் நாம் தனிப்பட்ட விதத்தில் ஆசீர்வதிக்கப் படுகிறோம் (9:6-11).

அ. வசனம் 6 "சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்".

நாம் மற்றவர்களுக்குக் கொடுக்கிற ஈவின் அளவுக்குத்தக்கதாய் தேவனிடத்திலிருந்து பெறுகிறோம். "உதாரத்துவமாய்" என்பது, உங்கள் தகுதிக்குத் தக்கதாக அதிகமன்று பொருள்படும்.

ஒவ்வொரு உதாரத்துவமுள்ள ஈவும், உதாரத்துவமுள்ள ஆசீர்வாதத்தினால் பலனளிக்கப் படும். நீதிமொழிகளில் இந்த உண்மையானது ஒரு முறைக்கு மேல் கூறப்பட்டுள்ளது.

1. "வாரியிறைத்தும் விருத்தியடைவாரும் உண்டு... உதாரகுணமுள்ள ஆத்துமா செழிக்கும்; எவன் தண்ணீர் பாய்ச்சுகிறானோ அவனுக்குத் தண்ணீர் பாய்ச்சப்படும் (நீதிமொழிகள் 11:24-25).

2. "ஏழைக்கு இரங்குகிறவன் கர்த்தருக்குக் கடன் கொடுக்கிறான்; அவன் கொடுத்ததை அவர் திரும்பக் கொடுப்பார்" (நீதிமொழிகள் 19:17).

ஆ. இயேசுவின் வாய்மொழிகளில், இதுவும் சேர்க்கப் பட்டுள்ளது: "கொடுங்கள் அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்... நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும்" (லூக்கா 6:38) "அளவு" என்றால் அளக்கும் கருவியாகும். இந்த வசனம் இவ்விதமாய் வாசிக்கப்படும்படி நாம் இதை மொழி பெயர்க்கலாம். "மற்றவர்களுக்கு கொடுக்கும்போது, ஒரு பெரிய அளக்கும் கருவியை பயன்படுத்துங்கள். தேவன் உங்களுக்கு கொடுக்கும்போது ஒரு பெரிய அளக்கும் கருவியைப் பயன்படுத்துவார்".

இ. வசனம் 7 "அவனவன்... தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்" இங்கே பவுல் கூறுகிற கொடுத்தல் என்பது, எருசலேம் சபைக்காக எடுத்த காணிக்கையோடு சம்பந்தப்படுத்தப்பட்டது (வெளிநாட்டிலுள்ள ஒரு சபை) உள்ளூர் சபையின் நிர்வாகத்திற்காக, தற்பொழுது கொடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும், தசமபாகங்கள் மற்றும் காணிக்கைகளுக்கு அப்பாற்பட்ட ஈவு இது.

ஈ. வசனம் 7 "விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல...உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்." "விசனமாயும், கட்டாயமாயும்" கொடுப்பதின் அர்த்தம்.

உதாரத்துவமாய்க் கொடுப்பது (2 கொரிந்தியர் 9:6-15)

1. சுயநலத்தின் காரணமாக, சபைக்கோ மற்ற விசுவாசிகளுக்கோ இவ்வளவு அதிகமாய்க் கொடுப்பதைப் பற்றி தயங்குவது.

2. காணிக்கைக்கு என்று நீங்கள் கொடுப்பதைப் பற்றி மற்றவர்கள் என்ன நினைப்பார்களோ என்று நீங்கள் பயப்படுவது.

கொடுப்பதினால் வரக்கூடிய சந்தோஷம் மற்றும் ஆசீர்வாதத்தை, இந்த இரண்டு தகுதியற்ற எண்ணங்களும் ஒரு மனுஷனிடமிருந்து திருடுகின்றன.

உ. தேவன் நேசிக்கிற விசுவாசி, "உற்சாகமாய்க் கொடுக்கிறவன்", பயனும், உதவியுமாய் இருக்க விரும்புகின்ற நபர். அவன் உடனடியாகவும், மனமுவந்தும் கொடுக்கிறான்; அவன் கொடுக்கும் போது, தன் இருதயத்தில் மகிழ்ச்சி கொள்ளுகிறான். நீதிமொழிகள் நமக்கு சொல்லுகிறது, "மனமகிழ்ச்சி முகமலர்ச்சியைத் தரும்". (நீதிமொழிகள் 15:13). இது முழு சபையின் சரீரத்திற்கும் கூட பொருந்தும்!

ஊ. வசனம் 8-11 "தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச் செய்ய வல்லவராயிருக்கிறார். "கிருபை" என்பது பூமிக்கடுத்த ஆசீர்வாதங்கள் மற்றும் ஐசுவரியத்தைக் குறிக்கும். தாராளமாகவும், மனமுவந்தும் ஒரு மனுஷன் கொடுக்கும்போது, சம்பவங்களின் ஒரு காலச்சக்கரம் சுற்ற ஆரம்பிக்கிறது.

1. தேவன் உங்களுக்குக் கொடுத்ததிலிருந்து நீங்கள் மற்றவர்களுக்கு தாரளமாய் கொடுக்கிறீர்கள் (இந்த சம்பவத்தில், வேறு நாட்டிலுள்ள இன்னொரு சபைக்கு, வெளிநாட்டு ஊழிய முயற்சி).

2. எல்லா காரியங்களிலும், எல்லா நேரங்களிலும், உங்கள் சொந்த தேவைகளுக்கு அதிகமாக உங்களுக்கு இருக்கும்.

3. மற்ற விசுவாசிகளுக்கும், மற்ற சபைகளுக்கும் தொடர்ந்து தாராளமாகக் கொடுக்கும்படியாக உங்களுக்கு இன்னமும் இருக்கும். எங்கே தாராளமான, மனமுவந்து கொடுக்கும் ஆவி இருக்கிறதோ, அது வெளிப்படக்கூடிய வழியை தேவன் எப்பொழுதுமே கொடுப்பார்!

எ. கொஞ்சமாய் வைத்திருப்பவர்கள், எல்லாவற்றையும் பிடித்து வைத்துக்கொண்டு, தாங்கள் வைத்திருக்கும் எல்லாவற்றையுமே தங்களுக்கென்று பயன்படுத்துவார்கள். கொஞ்சம் வைத்திருப்பவர்கள் தாங்கள் வைத்திருப்பதிலிருந்து ஒரு பகுதியைக் கொடுப்பது ஆபத்தானதாகத் தோன்றும். ஆனால், இது, தேவன் மேலுள்ள மிகக்குறைந்த விசுவாசத்தின் வெளிப்பாடாகும். ஒரு கிறிஸ்தவனுடைய வழி இதுவல்ல. நாம் எல்லோரும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

1. தேவனுக்கு எல்லா அதிகாரமும், வல்லமையுமுண்டு. எல்லா பொன்னும், வெள்ளியும் அவருடையது. பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்கள் அவருக்கு சொந்தமானவைகள். எல்லா வளங்களும் அவரது பராதீனத்தில் உள்ளன.

2. நம்மிடம் உள்ளதெல்லாம் கடைசியில் தேவனிடத்திலிருந்து வருகிறது.

3. அவர் விரும்புகிற நேரத்தில், நம்முடைய வளத்தை பெருக்க தேவன் வல்லவர்.

4. நமக்கு கொடுக்கப்பட்டதிலிருந்து ஒரு சிறியதை நாம் உதாரத்துவம் மற்றும் மனவிருப்பமுள்ள ஆவியோடு கொடுக்கும்பொழுது, தேவன் நமக்கு ஒரு பெருக்கத்தைக் கொடுப்பார்.

உதாரத்துவமாய்க் கொடுப்பது (2 கொரிந்தியர் 9:6-15)

5. எதிர்காலத்தில், நம்முடைய தேவைகளை சந்திக்கவும், ஊழியங்களுக்கு கொடுக்கவும் நம்மிடம் அதிகமிருக்கும்.

ஏ. தம் ஜனங்கள் மூலமாய் ஏழைகளுக்கு ஈவுகளைக் கொடுக்கவும், இந்த ஈவுகள் சதாகாலத்திற்கு தொடரும். தேவன் எப்பொழுதும் நோக்கங் கொண்டிருந்தார் என்பதை காண்பிக்கும்படி சங்கீதம் 112:9 இலிருந்து பவுல் குறிப்பிடுகிறார்.

"வாரியிறைத்தான்,ஏழைகளுக்குக் கொடுத்தான், அவனுடைய நீதி (தானம், இரக்கத்தின் நீரூபணம்) என்றென்றைக்கும் நிற்கும்".

ஐ. வசனம் 10 (தேவன்) உங்களுக்கு விதையை அளித்து, அதைப் பெருகபண்ணி, உங்கள் நீதியின் விளைச்சலை வர்த்திக்கச் செய்வார்.

"நீதி" என்று இந்த வசனத்திலுள்ளது (சங்கீதம் 112:9இல் உள்ள அர்த்தத்திற்கு ஒத்தது) "தர்மத்தின் செய்கை; தேவையிலுள்ள மற்ற விசுவாசிகளுக்கும், மற்ற சபைகளுக்கும் கொடுப்பது" (மத்தேயு 6:1) உதாரத்துவமாகவும், மனமுவந்தும் தேவையிலுள்ள மற்றவர்களுக்கு கொடுக்கிறவர்கள், தேவனிடத்திலிருந்து அபரிமிதமான அறுவடையை அறுத்து, எதிர்காலத்திலும், தேவையிலுள்ள மக்களுக்கு தொடர்ந்து கொடுக்கக்கூடிய தகுதி (விதையில் ஒருபோதும் குறைவதில்லை. (ஏசாயா 55:10, ஓசியா 10:12) உண்மையிலே, தேவையிலுள்ள மற்றவர்களுக்குக் கொடுக்கும்படியான ஒரு பெருக்கும் அவர்களுக்குக் கிடைக்கும்!

ஒ. தசமபாகங்கள், மற்றும் விசேஷ காணிக்கைகளுக்கு மேலாக நீங்கள் தற்போது கொடுத்துக் கொண்டிருக்கின்ற, நமது ஊழிய வாக்குறுதிக்கு, இந்த காலை வேளையிலே இதை பொருந்தச் செய்ய நான் விரும்புகிறேன். உங்கள் தேவைக்கு மேலாக உள்ளதிலிருந்து உதாரத்துவமாய் வாக்குக் கொடுங்கள். தேவன் நீங்கள் கொடுத்ததை திரும்ப பெறுவதை மட்டுமல்லாமல், ஒரு பெருக்கத்தையும் கூட பெறுவதை செய்வார்! உங்கள் இருதயத்தில் தீர்மானம் செய்ததைக் கொடுங்கள்; உதாரத்துவமாய் நீங்கள் கொடுக்கக்கூடிய ஈவை அடுத்த முறை கொடுக்கும் உங்கள் திராணியை தேவன் பெருக்குவதை எதிர்பாருங்கள்!

2. இந்த மனமுவந்த ஈவின் மூலமாய் நமது பரமபிதாவும், மற்ற விசுவாசிகளும் ஆசீர்வதிக்கப்படுகின்றனர் (9:12-15).

அ. வசனம் 12,14. "இந்த தர்மசகாயமாகிய பணிவிடை பரிசுத்தவான்களுடைய குறைவுகளை நீக்குகிறதுமல்லாமல், அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாயும் இருக்கும்" "பணிவிடையானது" எருசலேமின் சபையில் தேவையிலுள்ள விசுவாசிகளுக்கு உதாரத்துவ மாகவும் மனமுவந்தும் கொரிந்து விசுவாசிகள் கொடுப்பதாகும். இதன் விளைவு தேவன் மற்றும் மற்ற விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படுவதே என்று பவுல் கூறுகிறார் அது:

1. தேவனுடைய ஜனங்களின் (எருசலேமிலுள்ள) தேவைகளை சந்திக்கும்.

2. அநேகர் தேவனை ஸ்தோத்திரிப்பதினாலே சம்பூரண பலனுள்ளதாய் இருக்கும் (எருசலேமின் விசுவாசிகளால்)

3. தங்கள் தேவைக்கென்று கொடுத்த விசுவாசிகளுக்காக, எருசலேமிலுள்ள விசுவாசிகள் தேவனிடம் ஜெபங்களை ஏறெடுப்பதில் முடியும்.

உதாரத்துவமாய்க் கொடுப்பது (2 கொரிந்தியர் 9:6-15)

4. பெற்றுக்கொண்ட, மற்றும் கொடுத்தவர்களின் இருதயங்களின் ஆவிக்குரிய ஐக்கியத்தில் முடியும்.

ஆ. மிக அதிகமான ஆவிக்குரிய தேவைகளுள்ள நகரங்கள் மற்றும் பட்டண மையங்கள், மற்றும் வெளிநாடுகள் ஆகியவற்றிலுள்ள தனிப்பட்ட மிஷினெரிகள், சபைகள் மற்றும் விசுவாசிகளுக்கு நாம் கொடுப்பதின் விளைவாக நடைபெறுவதை நாம் பார்க்க விரும்புகிற சில காரியங்கள் இவைகளே.

இ. வசனம் 13 "நீங்கள் உதாரத்துவமாய் தர்மஞ் செய்கிறதினிமித்தம் (பணிவிடை)... நீங்கள் கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கீழ்ப்படிதலோடே அறிக்கையிட்டிருக்கிறீர்கள்" (வெளிப்படுத்துகிறது). "நீதியின் கிரியைகளைச் செய்வது (மற்றவர்களுக்கான நற்கிரியைகள்) எப்பொழுதும் ஒரு நபரின் இரட்சிப்பின் அனுபவத்துடனிருக்க வேண்டும். யாக்கோபு நமக்கு சொல்லுகிறார், "நான் என் விசுவாசத்தை (கிறிஸ்துவின் மேல்), என் கிரியைகளினாலே உனக்குக் காண்பிப்பேன்" மீண்டும், "விசுவாசம், கிரியைகளோடே கூட முயற்சி செய்கிறது" மறுபடியும், "கிரியைகளினாலே (நற்கிரியைகள்) விசுவாசம் பூரணப்படுகிறது" (யாக்கோபு 2:18,22). மற்றவர்களுடைய தேவைக்கென்று உதாரத்துவமாய்க் கொடுப்பதின் மூலம் விசுவாசிகள், கிறிஸ்துவின் மேலுள்ள தங்கள் விசுவாசத்தை நிரூபிக்கிறார்கள்!

ஈ. வசனம் 14. இந்த வசனத்தில் பவுல் மீண்டும் "தேவன் உங்களுக்கு அளித்த மிகவும் விசேஷித்த கிருபையைக்" கூறுகிறார். தேவன் தமது பூங்கடுத்த ஆசீர்வாதங்களையும், செல்வத்தையும் (கிருபை) நம்மேல் உதாரத்துவமாய் ஊற்றியிருக்கிறார்.

இது, தேவையிலுள்ள மற்ற விசுவாசிகள் மற்றும் சபைகளிடம் நமக்குள்ள உறவில் பிரதிபலிக்க வேண்டும் என்றும் நோக்கம் கொண்டிருக்கிறார்; ஊழியங்களுக்கு பணத்தை நாம் கொடுப்பதிலே.

உ. வசனம் 15 "தேவன் அருளிய சொல்லி முடியாத ஈவுக்காக அவருக்கு ஸ்தோத்திரம்!"

அவரது குமாரனாகிய இயேசுகிறிஸ்து தான் "ஈவு" (யோவான் 3:16) முதலில் நம் ஒவ்வொருவருக்கும் தம்முடைய ஈவாகிய குமாரனை, தேவன் கொடுத்தார். அநேகர் விசுவாசிக்கிறதினால் அவர் ஆசீர்வதிக்கப்படுகிறார்! இந்த உன்னத உதாரணத்தைப் பின்பற்றி, நாமும் தேவையிலுள்ள மற்ற விசுவாசிகள் மற்றும் சபைகளுக்கு உதவும்படி தாராளமாகவும், மனமுவந்தும்கொடுக்கவேண்டும் (1 யோவான் 4:9-11ஐயும் பார்க்கவும்). தேவன் தமது தியாகமான ஈவினால் ஆசீர்வதிக்கப்படுவதுபோல, நாமும் கூட நம்முடைய ஈவினால் ஆசீர்வதிக்கப்படுவோம்!

முடிவுரை

அ. மற்ற விசுவாசிகள் மற்றும் சபைகளின் தேவைகளுக்கென்று நாம் தாராளமாகவும் மனமுவந்தும் கொடுக்கும்போது, தனிப்பட்ட விதத்தில் ஆசீர்வதிக்கப் படுகிறோம். விசுவாசிகளின் ஒரு குழுவாகிய சபைகளுக்கும் கூட இந்த நியதி பொருந்துகிறது.

ஆ. மற்றவர்களுக்கு இவ்விதமாக தாராளமாக கொடுப்பதின் விளைவால்.

1. தொடர்ந்து மற்றவர்களுக்கு தாராளமாக கொடுக்கும்படி, நாம் ஒரு பெருக்கத்தைப் பெறுகிறோம்.

2. துதி மற்றும் ஸ்தோத்திர பலிகள் தேவனுக்கு ஏறெடுக்கப்படுகின்றன.

3. நமது நாடு மற்றும் வெளிநாடுகளிலுள்ள மற்ற விசுவாசிகள், மற்றும் சபைகளுடன் நாம் கிறிஸ்தவ அன்பினால் கட்டப்படுகிறோம்.

ஆவிக்குரிய யுத்தத்தின் நமது போராயுதங்கள் (2 கொரிந்தியர் 10:1-6)

முகவுரை

அ. பவுலின் அப்போஸ்தலத்துவத்திற்கும், ஊழியத்திற்கும் உள்ள தங்களது எதிர்ப்புக்காக, கொரிந்துவிலுள்ள பெரும்பான்மையான விசுவாசிகள் மனஸ்தாபப்பட்டிருந்தார்கள் (2கொரிந்தியர் 7:6-13). ஆனாலும் சபைக்குள்ளாக மெதுவாக நுழைந்து தவறான குற்றச்சாட்டுகளையும் பழிசுமத்தலையும் பவுலுக்கு விரோதமாக கொண்டு வந்த கள்ள அப்போஸ்தலர்களை இன்னும் கூட பின்பற்றினவர்களும் உண்டு. சத்தியத்தின் இந்த திரித்தலும், சுவிசேஷத்திற்கான தடையும், பவுலின் கோபத்தை எழுப்பினது. தனது இரண்டாம் நிருபத்திலுள்ள பத்தாம் அதிகாரத்தை அவர் ஆரம்பிக்கும் விதத்திலிருந்து இது தெரிகிறது.

ஆ. அவரை அவமானப்படுத்திக் கொண்டிருந்தவர்கள், அவர் தூரத்தில் கண்டிப்புள்ளவர் (தனது நிருபங்களில்) என்றும், உண்மையில் நேரடியாக வரும்போது, அவர் உண்மையில் பெலவீனராகவும், தீர்மானம் எடுக்கும் திறனற்றவர் என்று கூறிக்கொண்டிருந்தனர். அவர்களது குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கும் வகையில் கூறுகிறார். "உங்கள் முன்பாக இருக்கும்போது, நான் கண்டிப்புள்ளவனாயிராத படிக்கு, நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக் கொள்ளுகிறேன்" (வசனம் 2).

இ. இவையெல்லாம், தான் எப்படி ஆவிக்குரியயுத்தம் செய்கிறார் என்பதைக் குறித்தும் தனது எதிரிகளை வீழ்த்த, பயன்படுத்தும் ஆயுதங்களின் உன்னத வல்லமையைக் குறித்தும் ஒரு விவாதத்திற்குள் பவுலைக் கொண்டு செல்லுகிறது.

1. உலகம் செய்கிற விதமாய் நாங்கள் யுத்தம் செய்கிறதில்லை (10:1-3).

அ. வசனம் 1 "கிறிஸ்துவின் சாந்தத்தையும், தயவையும் முன்னிட்டு உங்களுக்குப் புத்தி சொல்லுகிறேன்" கலாத்தியர் (கலாத்தியர் 5:2) மற்றும் எபேசுவிலுள்ள (எபேசியர் 3:1) சபைகளுக்கும் பிலேமோனுக்கும் (வசனம் 19) இதேவிதமான தனிப்பட்ட புத்தி சொல்லுதலை தனது நிருபங்களில் பவுல் பயன்படுத்துகிறார். தவறான குற்றச்சாட்டுகளை தனக்கு எதிரே கொண்டுவந்து, அவரது அப்போஸ்தல அதிகாரம் மற்றும் ஊழியத்தை அவமானப்படுத்த முயற்சி செய்பவருக்கு பவுல் புத்தி சொல்லுகிறார்.

ஆ. "சாந்தம்" என்பது தாழ்மைக்கு சம்பந்தப்பட்டது; அதின் அர்த்தம் ஆவியிலே அடக்கமாயிருப்பது; தேவனுக்கு முன்பு உன்னை தாழ்த்துவது; தேவன் நம்மிடத்தில் நடப்பிப்பதை சர்ச்சையோ அல்லது எதிர்ப்போ இல்லாமல் நல்லதென ஏற்றுக்கொள்வதாகும். "தயவு" என்பதின் அர்த்தம், மற்றவர்களைக் குறித்து கரிசனைக் கொள்வது; இரக்கம், மனதுருக்கம் மற்றும் மன்னிப்பை காட்டுவது; அமைதியான குணம் கொண்டிருப்பதாகும். தன்னை தவறாக குற்றப்படுத்துவோருடன், உள்ள தனது உறவில், கிறிஸ்துவினிடத்திலிருந்த இந்த குணங்களை தான் பவுல் பின்பற்ற விரும்புவார் (மத்தேயு 11:29).

இ. வசனம் 1 உங்களுக்கு முன்பாக இருக்கும் போது "தாழ்மையாயும்" தூரத்திலே இருக்கும்போது உங்கள்மேல் "கண்டிப்பாயும்" இருக்கிற பவுலாகிய நான் தனக்கு விரோதமாக குற்றஞ்சாட்டுகிறவர்களின் குற்றசாட்டுகளை பவுல் மீண்டும் கூறுகிறார் என்பது தெளிவாகிறது.

ஆவிக்குரிய யுத்தத்தின் நமது போராயுதங்கள் (2 கொரிந்தியர் 10:1-6)

"தாழ்மையாய்" இருப்பது என்பது "நொந்துபோய் காணப்படுவது, நாட்டத்தில் எளிமையாயிருப்பது; தோற்றத்தில் தாழ்மையாகவும் அற்பமாகவும் இருப்பது (1கொரிந்தியர் 2:3)".

"கண்டிப்பாக" இருப்பது என்றால் தன்னம்பிக்கைபோடும் உற்சாகமாகவும் இருப்பது; மிகுந்த தைரியத்தைக் காண்பிப்பது. அவர்கள் சமூகத்தில் இல்லாதபோது, பாதுகாப்பான தூரத்திலிருக்கும் ஒரு குலைக்கின்ற நாயைப் போல பவுல் இருக்கிறார் என்று இங்கே அர்த்தப்படுகிறது!

ஈ. பவுலின் பெயரைக் கெடுக்க முயன்றுக் கொண்டிருந்த சிறிய பெரும்பான்மையானது, சபையிலுள்ள விசுவாசிகளின் மத்தியில் தீய எண்ணம் கொண்ட வம்பு மற்றும் இழுக்கு மூலமாக, அவர் வெளியே சென்றிருந்தபோது (அவரது முதுகிற்கு பின்னால்) செய்துக் கொண்டிருந்தனர். இப்படிப்பட்ட வகையான ஜனங்களைப் பற்றி, எபேசு போதகர்களை பவுல் ஏன் எச்சரித்தார் என்று நாம் பார்க்கிறோம் (அப்போஸ்தலர் 20:28-30). இன்று உலகின் அநேக சபைகளில் அவர்கள் இருக்கிறார்கள்! தேவனுடைய வார்த்தையின் உண்மையை புரட்டி, போதகரின் (ஆவிக்குரிய தலைவர்கள்) பெயரை அவதூறு பண்ணி, சபையிலிருந்து வெளியே இழுத்து, தங்கள் ஆதிக்கத்தில் கொண்டுவருவது தான் எப்பொழுதும் அவர்களது நோக்கம்.

உ. வசனம் 2 "உங்கள் முன்பாக இருக்கும்போது,நான்கண்டிப்புள்ளவனாயிராதபடிக்கு நீங்கள் எச்சரிக்கையாயிருக்க உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்" பிரச்சனை உண்டுபண்ணுகிறவர்களுக்கும் அவர்களைப் பின்பற்றுகிறவர் களையும் தான் வருமுன் மனந்திரும்பும்படி பவுல் புத்தி சொல்லுகிறார்.

அவர் இயேசுகிறிஸ்துவின் அப்போஸ்தலர் சபைகளையும், போதனைகளையும் ஸ்தாபிக்கும்படி, அவர் கிறிஸ்துவால் அனுப்பப்பட்டிருந்தார். அடுத்த முறை அவர் கொரிந்துவை வந்தடையும்போது கிறிஸ்து அவருக்குக் கொடுத்த அதிகாரத்தைப் பயன்படுத்துவார். தன்னம்பிக்கை யையும், தைரியத்தையும் நிருபங்களில் மட்டும் சித்தரித்து, அவர்களை விட்டு தூர இருக்கும்போது மட்டும் வெளிப்படுத்துகிறார் என்று அவர்கள் சாதித்ததற்கு மாறாக, அவர் வரும்போது, உண்மையாகவே தன்னம்பிக்கையும், தைரியமுமுள்ள அப்போஸ்தலராக இருப்பார் (10:9-11; 13:1-3).

ஊ. வசனம் 2 "எங்களை மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் என்று எண்ணுகிற சிலரைக் (கொரிந்துவிலுள்ள) குறித்து" "மாம்சத்தின்படி நடக்கிறவர்கள்" என்றால் இயற்கையான (மாம்ச) மனுஷனின் ஞானம் மற்றும் பெலத்தால் நமது இலக்குகளை அடைவது மற்றும் யுத்தங்களை செய்வது என்று அர்த்தம்.

எ. வசனம் 3 "நாங்கள் மாம்சத்தில் நடக்கிறவர் களாயிருந்தும், மாம்சத்தின்படி போர் செய்கிறவர்களல்ல" தனது இயற்கையான சாதுரியம், ஞானம், மற்றும் பெலத்தால், தான் இந்த உலகத்தில் வாழ்ந்தாலும், இவ்விதத்தில் அவர் ஆவிக்குரிய யுத்தத்தைச் செய்வதில்லை என்று கொரிந்துவிலுள்ள தனது எதிராளிகளுக்கு சொல்ல பவுல் முயற்சிக்கிறார். இது முற்றிலும் வித்தியாசமான காரியம். ஆவிக்குரிய யுத்தம், முற்றிலும் வித்தியாசப்பட்ட விதத்தில் நடத்தப்படவேண்டும். சகரியா நமக்கு சொல்லுகிறார் "(நம்முடைய சொந்த) பலத்தினாலும் அல்ல, (நம்முடைய சொந்த) பராக்கிரமத்தினாலும் அல்ல, தேவனுடைய ஆவியினாலேயே" நாம் சாத்தானின் வல்லமையை மேற்கொள்ளுகிறோம் (சகரியா 4:6).

ஆவிக்குரிய யுத்தத்தின் நமது போராயுதங்கள் (2 கொரிந்தியர் 10:1-6)

2. நமது போராயுதங்களுக்கு, அரண்களை நிர்மூலமாக்கிறதற்கு உன்னத வல்லமை உண்டு (10:4).

அ. "எங்களுடைய போராயுதங்கள் மாம்சத்துக்கேற்றவை களாயிராமல்" "போராயுதங்கள்" என்று இங்கே சொல்லப்படுவது, ஒரு யுத்தத்தை நடத்தும்போது பயன்படுத்தும் எதிர்ப்பதற்கான கருவிகள் (ஆயுதங்கள்) நாம் ஈடுபட்டிருக்கின்ற யுத்தம் ஆவிக்குரியது. நம்முடைய சத்துருவும் ஆவிக்குரியவன்.

ஆகவே ஆவிக்குரிய உலகில் யுத்தம் செய்யும்போது நாம் பயன்படுத்த வேண்டிய எதிர்ப்பதற்கான ஆயுதங்களும், ஆவிக்குரிய சுபாவமுடையதாகவே இருக்கவேண்டும்.

ஆ. உலகத்தின் ஆயுதங்களில் அடங்கக்கூடியவை. அரசியல் செல்வாக்கு, இராணுவ வல்லமை, மதசம்பந்தமான விவாதம், மனுஷ ஞானம் மற்றும் திறம், தனிப்பட்ட சரீர பெலன், வஞ்சகம், பொழுதுபோக்கு, பெரிய மற்றும் சுப சேவை நிறுவனங்களும் அவைகளின் நிகழ்ச்சிகளும்.

இ. பவுல் தனது மற்ற நிருபங்களில் சொன்ன அநேக காரியங்களை ராணுவ சொற்கள் நமக்கு நினைவுப்படுத்துகின்றன (எபேசியர் 6:11-17; 1 தீமோத்தேயு 1:18; 2தீமோத்தேயு 2:3-4; 4:7)

ஈ. ஆவிக்குரிய யுத்தங்களை செய்தபோது, பவுல் பயன்படுத்திய சில ஆயுதங்கள் எவை?

1. நீதியான வாழ்க்கை வாழ்வது; ஆவிக்குரிய உண்மை நிறைந்த வாழ்வு.

2. மற்றவர்களோடுள்ள தனது தொடர்பு மற்றும் உறவுகளில் உண்மையாயிருப்பது.

3. கிறிஸ்துவிலுள்ள நிலையான விசுவாசம்

4. தேவனுடைய வார்த்தையின் மேல் நிற்பது (சாத்தானுக்கு எதிராய் இயேசுவைப் போல் எபேசியர் 6:14-18). அவரது எதிர்க்கும் ஆயுதங்களில் அடங்கியவை;

5. ஜெபமும், உபவாசமும்.

6. ஆவியிலே ஜெபிப்பது.

7. சுவிசேஷத்தின் உண்மையை பிரசங்கிப்பது.

8. பிசாசுகளைத் துரத்துவது.

9. சுகமளிப்பதும், அற்புதங்களும் (1கொரிந்தியர் 14:18; அப்போஸ்தலர் 13:2,3,5; 14:3,23; 16:18).

உ. மாறாக "தேவபலமுள்ளவைகளா யிருக்கிறது" இந்த ஆவிக்குரிய ஆயுதங்களுக்கு உன்னத பலமுண்டு. "உன்னத" என்றால் தேவனுடைய வல்லமை, தகுதிகள், மற்றும் பலத்தைக் குறிக்கிறது. இந்த போராயுதங்களை நாம் பயன்படுத்தும்போது, தேவனை (அவரது தூதர் சேனையை) நமது போராட்டங்களில், நமக்கும் நமது எதிராளிகளுக்கு மிடையே நடந்துக் கொண்டிருக்கும் யுத்தத்தில், நாம் ஈடுபட வைக்கிறோம்.

ஊ. "அரண்களை நிர்மூலமாக்குகிறதற்கு தேவ பலம்". தனது எதிராளிகளுக்கு விரோதமாக ஆவிக்குரிய யுத்தங்களைச் செய்யும் போது, இந்த சர்வவல்லமையைத் தான் பவுல் பயன்படுத்துகிறார்.

ஆவிக்குரிய யுத்தத்தின் நமது போராயுதங்கள் (2 கொரிந்தியர் 10:1-6)

"நிர்மூலமாக்குதல்" என்றால் அதை முழுவதுமாய்நாசம்செய்வது,முழு-அழிவுக்குள்ளாக்கு வதாகும். "அரண்கள்" என்பது மனதுக்கடுத்தவை. பிசாசினால் கட்டுப்படுத்தப்பட்ட மனங்களில் கடுத்தவை. பிசாசினால் கட்டுப்படுத்தப்பட்ட மனங்களில் உருவாகும் எண்ணங்கள், பகுத்தறிவு மற்றும் முடிவுகளாகும்; தனிப்பட்ட விதத்திலேயும், சுவிசேஷ செய்திக்கும் எதிராக உள்ளதாகும்.

எ. இவை, தங்களைச் சுற்றி சாந்து அவர்களுள்ள மனதின் அறைகள் போன்றவை. கிட்டத்தட்ட நுழைய முடியாதபடி அவைகள் ஆகும். அளவிற்கு இந்த சுவர்கள், பல அடுக்குகளால் அரணாக்கப்பட்டிருக்கின்றன. நாம் பயன்படுத்துகின்ற ஆவிக்குரிய ஆயுதங்களோ, இந்த அரண்களை நிர்மூலமாக்கி, அவைகளை முழுமையான அழிவுக்குக் கொண்டு வர வல்லமையுள்ளது. நீதிமொழிகளில் நாம் வாசிக்கிறோம். "பலவான்களுடைய பட்டணத்தின் மதிலை ஞானமுள்ளவன் ஏறிப் பிடித்து, அவர்கள் நம்பின அரணை இடித்துப் போடுவான்" (நீதிமொழிகள் 21:22).

3. நமது போராயுதங்கள், நமது எதிராளியை சக்திவாய்ந்த விதத்திலே தோற்கடிக்க வல்லமையுள்ளவை. (10:5-6)

அ. வசனம் 5. "நாங்கள் தர்க்கங்களையும், தேவனை அறிகிற அறிவுக்கு விரோதமாய் எழும்புகிற எல்லா மேட்டிமையையும் நிர்மூலமாக்குகிறோம்". "தர்க்கங்களையும் மற்றும் மேட்டிமை" என்பவை,தேவனுடைய வார்த்தைக்கும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தின் உண்மைக்கும் விரோதமாக உள்ள, கருத்துக்கள், தீர்ப்புகள், ஊகித்தல்கள், பகுத்தறிவு, தத்துவம், வாதங்கள், மற்றும் போதனைகளாகும். இவை இடறிப் போகிறவர்களின் மனங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட, பிசாசின் பொய்களாகும். (ரோமர் 1:18-32)

ஆ. அவைகள் ஒன்றுமில்லாமல் போகும்; முழுவதும் வெளியரங்கமாகி, தோற்கடிக்கப்படும். விசுவாசிகளின் விசுவாசத்தை அசைப்பண்ணி, அவர்களை பவுலுக்கு விரோதமாக திரும்பத்தக்கதாக கள்ளப்போதகர்கள் கொரிந்துவில் பயன்படுத்திக் கொண்டிருந்த தவறான கருத்துக்கள், மற்றும், பகுத்தறிவையும் இது உள்ளடக்க வேண்டும் என்று பவுல் எத்தனிக்கிறார்.

இ. "எந்த எண்ணத்தையும் கிறிஸ்துவுக்குக் கீழ்ப்படியசிறைப்படுத்துகிறவர்களாயிருக்கிறோம்". "எந்த எண்ணம்" என்பது, கொரிந்துவில் கள்ளப் போதகர்களின் போதனைகளால் குருட்டாட்டம் அடைந்தவர்களின் மனங்களிலுள்ள எண்ணங்களும், தீர்ப்புகளுமே. "சிறைப்படுத்துவது" என்பது தேவனுக்கு விரோதமாக உள்ள மனுஷர்களின் எண்ணங்களை எடுத்து, தேவனுடைய வார்த்தைக்கும், கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கும் ஒத்துவரும்படி செய்வதே. கொரிந்துவில் தனது எதிராளிகளுக்கு விரோதமாக, பவுல் பயன்படுத்திய ஆவிக்குரிய போராயுதங்களை பயன்படுத்துவதாலேயே இதை செய்யமுடியும்.

ஈ.வசனம்6."எல்லா கீழ்ப்படியாமைக்குந்தக்க நீதியுள்ள தண்டனையைச் செலுத்த ஆயத்தமாயிருக்கிறோம்". "தண்டனை செலுத்த என்றால் ஒரு காயத்தை ஏற்படுத்த என்று அர்த்தம்.

ஆவிக்குரிய யுத்தத்தின் நமது போராயுதங்கள் (2 கொரிந்தியர் 10:1-6)

பவுலின் எழுத்திலான புத்தி சொல்லுதல், கொரிந்துவிலுள்ள அவரது எதிராளிகளின் மனதை மாற்றாவிட்டால், அவர் தனது அப்போஸ்தல அதிகாரத்தைப் பயன்படுத்தி, தான் அங்கு வந்தப் பின்னர், கள்ள அப்போஸ்தலர்களையும், அவர்களைப் பின்பற்றுகிறவர் களையும் சபையிலிருந்து வெளியேற்றுவார்! எல்லா இவ்வித கீழ்ப்படியாமையும் தண்டிக்கப்படவேண்டும்!

உ. வசனம் 6. "உங்கள் கீழ்ப்படிதல் நிறைவேறும் போது" ஒரு வழி அல்லது இன்னொன்றில், இப்பொழுதோ அல்லது "தேவனுடைய மகா வெள்ளை நியாசனத்திற்கு" முன்போ, ஒவ்வொரு நபரும், தேவனுடைய வார்த்தை மற்றும் இயேசுவின் சுவிசேஷத்திற்கான கீழ்ப்படிதலுக்குள் கொண்டு வரப்படுவார்கள். (பிலிப்பியர் 2:10-11) பவுலோ, கிறிஸ்துவைப்போல, மற்றெல்லா ஒப்புரவாக்குதலின் வழிகளும் பயன்படுத்தப்படுமட்டும், பிரச்சனை உண்டு பண்ணுகிறவர்களை சபையிலிருந்து வெளியேற்றும் வேலையில் ஈடுபடமாட்டார். அல்லது, யாரெல்லாம் கீழ்ப்படியப்போகிறார்களோ, அவர்கள் அப்படி செய்யுமட்டும்!

முடிவுரை

அ. தேவ வல்லமைக்கும், பொல்லாப்பின் வல்லமை களுக்கும் ஒரு ஆவிக்குரிய யுத்தம் நடந்துக் கொண்டிருக் கிறது. நாமும் அநேக முறை அதில் நேரடியாக ஈடுபடுகிறோம். நாம் கிறிஸ்துவுடன் கூட நெருக்கமாக நடந்துக் கொண்டிருந்தாலும், காணாமற்போனவைகளை அவரிடத்தில்ஆதாயப்படுத்திக் கொண்டிருந்தாலும், இது நடைபெறுவதை எதிர்ப்பார்க்க முடியும்.

ஆ. ஆனால் நாம் மறக்கக்கூடாதது என்னவென்றால, இந்த யுத்தம் ஆவிக்குரியதென்பதை நம்முடைய எதிராளி சாத்தானும் அவனால் ஆவிக்குரிய உலகில் கட்டுப்படுத்தப் படுகிறவைகளும் நாம்:

1. உலகம் செய்கிறபடி நாம் யுத்தம் செய்யக்கூடாது. நாம் ஆவிக்குரிய போராயுதங்களைப் பயன்படுத்தவேண்டும்.

2. மனுஷர்களுடைய மனதிலுள்ள சத்துருவின் அரண்களை நிர்மூலமாக்கத்தக்க, தேவபலமுள்ள ஆயுதங்களைப் பயன்படுத்த வேண்டும்.

3. நாம் வெற்றியுள்ளவர்களாயிருப்போம், நமது எதிராளிகளை நாம் சரியாய் தோற்கடிப்போம்.

இ. உங்களை கேட்டுக்கொண்டிருப்பவர்களின் வாழ்க்கைகளுக்கு இந்தப் போதனைகளை பொருத்த மாக்குங்கள்:

1. நீங்கள் கிறிஸ்தவர் என்ற முறையிலும், நீங்கள் பறைசாற்றும் சுவிசேஷ செய்திக்கும் எதிராக உங்களது குடும்பம், நண்பர்கள் மற்றும் அயலகத்தாரின் மனதில் உருவாக்கப்பட்டுள்ள வாதங்கள், மற்றும் வேஷங்கள் மற்றும்

2) கிறிஸ்துவுக்கு அவர்களை ஆதாயப்படுத்த முயற்சிக்கும்படி நீங்கள் பயன்படுத்தும் ஆயுதங்கள்.

பவுலின் தரிசனங்களும், அவரது சரீரத்திலுள்ள முள்ளின் வெளிப்பாடுகளும் (2 கொரிந்தியர் 12:1-10)

முகவுரை

அ. சுவிசேஷ ஊழியங்களுக்காக, கர்த்தராகிய இயேசுவினால் தெரிந்துக் கொள்ளப்படுகிற குறிப்பிட்ட சில தனி நபர்கள் சபையிலுண்டு. அநேக சமயங்களில், அவர்களது ஊழியத்தினால் மிகுந்த உபத்திரவம் மற்றும் கஷ்டங்கள் விளைவாகிறது. இதனால், அவர்களைத் தாங்கத்தக்கதாக, கிறிஸ்து அவர்களுக்கு விசேஷித்த தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் தருகிறார்.

ஆ. ஆனால் மற்றெல்லா விசுவாசிகளைப் போலவே இவர்களும் இந்த விசேஷ தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகளால், எளிதில் பெருமையும், இறுமாப்பும் அடையமுடியும். இதனால், இவ்விதம் அவர்கள் இருப்பதை தடுப்பதற்காக, சில ஆவிக்குரிய அல்லது சரீர துன்பத்தை சாத்தான் கொண்டு வருவதற்கு அநேகமுறை கர்த்தர் அவனை அனுமதிக்கவேண்டும்.

இ. பவுலைப் போல அவர்களும் எளிதில் கற்றுக்கொள்வது என்னவென்றால்:

1. தங்களது விசேஷ தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகளையல்ல, தங்கள் பெலவீனங்களைக் குறித்து மேன்மை பாராட்டுவதே, கிறிஸ்துவின் வல்லமை அவர்கள் மேல் தங்குவதற்கு ஒரே வழி.

2. கிறிஸ்துவின் நோக்கங்களை சாதிப்பதற்கு ஒரே வழி அவரது பெலன் மற்றும் வல்லமையுமே.

3. தங்களது விசேஷ தரிசனங்கள் மற்றும் வெளிப் பாடுகளைக் குறித்து மேன்மை பாராட்டுவதால் கிடைக்கக்கூடிய தங்கள் சொந்த பெலன், ஞானம் மற்றும் செல்வாக்கானது பயனற்றதும் வல்லமையற்றதுமாயிருக்கிறது: கிறிஸ்துவுக்கு எந்த ஒரு பிரயோஜனமாகவும் இது இல்லை.

1. கர்த்தரிடத்திலிருந்து வரும் விசேஷ தரிசனங்கள் மற்றும் வெளிப்பாடுகளைக் குறித்து நாம் மேன்மை பாராட்டும் போது, (கிறிஸ்துவுக்காக) நாம் ஆதாயப்படுத்தக் கூடியது ஒன்றுமில்லை (12:1-6)

அ. வசனம் 1. "மேன்மைபாராட்டுவது எனக்கு தகுதியல்லவே". பவுல் தனது அப்போஸ்தல ஊழியத்திற்காக எதிர்த்து வாதாடிக் கொண்டிருந்தார். கொரிந்துவிலுள்ள சபைக்குள்ளே ஊடுருவியிருந்த கள்ள போதகர்களால் அவர் குற்றஞ்சாட்டப்பட்டுக் கொண்டிருந்தார். அவரது உண்மை மற்றும் தார்மீக சுபாவம், மற்றும் ஊழியத்திற்கான சாதுரியம் மற்றும் நற்சான்றுகளை கேள்வி கேட்பதின் மூலம் அவரை அவதூறு செய்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் சொன்னார்கள். அவர்:

1. மாம்சத்தின்படி நடந்தார் (10:2)

2. பலமான ஆனால் ஆழமற்ற கடிதங்களை எழுதினார், ஆனால் நேரடியாக வரும் போது, சரியாக தன்னை வெளிப்படுத்திக் கொள்ள முடியவில்லை (10:10)

3. வேலை செய்வதின் மூலம் தன்னை கேவலப் படுத்தினார் (11:7)

4. ஆதி அப்போஸ்தலர்களில் ஒருவராக இல்லை (11:5)

5. தகுதிப்படுத்தப்பட்ட போதகராக இல்லை (12:11-12)

பவுலின் தரிசனங்களும், அவரது சரீரத்திலுள்ள முள்ளின் வெளிப்பாடுகளும் (2 கொரிந்தியர் 12:1-10)

6. அப்போஸ்தல நற்சான்றிதழ்கள் கொண்டிருக்க வில்லை (3:1)

7. இருமாப்பும், எருசலேமின் சபைக்காக எடுக்கப்பட்டுக் கொண்டிருந்த காணிக்கையை கையாள்வதற்கு நம்பிக்கை யற்றவருமாயிருந்தார் (12:16; 8:20-23).

ஆ. கிறிஸ்துவுக்கோ அல்லது சுவிசேஷத்திற்கோ எந்த ஆதாயமும் இல்லாத பட்சத்திலும் தனது யூத பூர்வீகம் மற்றும் கிறிஸ்துவுக்காக பட்டப்பாடுகளைக் குறித்தும் மேன்மை பாராட்டுவதின் மூலம், அவர்களது தவறான குற்றச் சாட்டுகளை எதிர்த்து வாதாட வேண்டியதின் அவசியத்தைக் கண்டார் (2கொரிந்தியர் 11:21-33)

இ. "கர்த்தர் அருளிய தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் சொல்லுகிறேன். தான் கர்த்தரிடத் திலிருந்து தனிப்பட்ட விதத்தில் பெற்றுக்கொண்ட விசேஷ வெளிப்படுத்தல்களை தன்னை குற்றஞ்சாட்டுகிறவர்களுக்கு முன்பாக ஐம்பமடிப்பதின் மூலம் தனது மேன்மை பாராட்டுதலை பவுல் தொடருகிறார். அவர் சொல்லி யிருக்கக்கூடியதான, பல மற்ற தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் பவுல் பெற்றிருந்தார். இந்த நேரத்தில், தனது ஊழியத்தில் அவர் நினைவில் கொண்டு வந்திருக்கக்கூடியவை:

1. தனது மனந்திரும்புதலின் போது, இருந்த கிறிஸ்துவின் தோற்றமும், வார்த்தைகளும் (அப்போஸ்தலர் 9:3-6).

2. தன்னை சுகமாக்கும்படி வந்த அனனியாவைக் குறித்த தரிசனம் (அப்போஸ்தலர் 9:12)

3. தனது தேசத்திற்கு வரும்படி, மக்கெதோனியா தேசத்தான் வந்து வேண்டிக்கொண்ட தரிசனம் (அப்போஸ்தலர் 16:9)

4. கொரிந்து பட்டணத்தில் சுவிசேஷத்தைத் தொடர்ந்து பிரசங்கிக்கும்படி அங்கு உள்ள கிறிஸ்துவின் உற்சாகமான வார்த்தைகள் (அப்போஸ்தலர் 18:9-10)

5. கிறிஸ்துவின் தோற்றமும், ஆபத்தினிமித்தம் எருசலேமை விட்டுப் போகும்படி அவரது போதனைகளும் (அப்போஸ்தலர் 22:17-21)

ஈ. வசனம் 2-4. "கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம் வரைக்கும்.. பரதீசுக்குள் எடுக்கப்பட்டான்" கதையில், பவுல் தன்னைக் குறித்தே பேசுகிறார் என்பது வெளிப்படையாக தெரிந்தாலும், வேறொருவரைப் பற்றி அவர் பேசுவது போல நடிக்கிறார். தனது அப்போஸ்தலத்துவத்தை தற்காக்க, கண்கவர்காட்சியைக் கூற வேண்டிய நிர்ப்பந்தத்தைக் குறித்து, ஒருவேளை அவர் சற்று சங்கடப்படுகிறார் "பதினாலு வருஷத்திற்கு முன்னே" என்பது, உண்மையாகவே அந்த வெளிப்பாட்டைப் பெற்றது பவுல் என்பதைக் காண்பிக்கிறது. தர்சுவில் அவர் இருக்கும்போது, அந்தியோகியா சபையில் உதவுவதற்கு பர்னபா வருமுன், ஒருவேளை இது நடந்திருக்கலாம் (அப்போஸ்தலர் 11:25-26).

உ. "எடுத்துக் கொள்ளப்படுவது" என்பதும்:

1. ஆவியானவரால், பிலிப்பு தூக்கிச் செல்லப்படுவதும் (அப்போஸ்தலர் 8:39)

2. சபைக்கான கர்த்தரின் இரகசிய வருகையிலே மத்திய ஆகாயத்திலே நாம் அவரை சந்திக்கும்படி எடுத்துக் கொள்ளப்படுவதும் (1தெசலோனிக்கேயர் 4:17)

பவுலின் தரிசனங்களும், அவரது சரீரத்திலுள்ள முள்ளின் வெளிப்பாடுகளும் (2 கொரிந்தியர் 12:1-10)

3. கிறிஸ்துவின் பரமேறுதலைக் குறித்த வெளிப்படுத்தலிலுள்ள வசனமும் (வெளிப்படுத்தின விசேஷம் 12:5) ஒன்றுதான்.

ஊ. தன்னுடைய வெளிப்படுத்தலின் சமயத்திலே, அவரது சரீரமும், ஆத்துமாவும் சேர்ந்து எடுத்துச் செல்லப்பட்டதா அல்லது அவரது ஆத்துமா மற்றும் மூன்றாம் வானத்திற்கு சென்றதா என்று பவுலுக்கு நிச்சயமாய்த் தெரியவில்லை (2கொரிந்தியர் 5:8; பிலிப்பியர் 1:23-24). "மூன்றாம் வானம்" என்பது, நான்காம் வசனத்தில் பவுல் சொல்வது போல தேவன் பற்றும் கிறிஸ்துவின் சமுகத்திலுள்ள 'பரதீசு' ஆகும். அது பூமியின் மண்டலம், மற்றும் விண்வெளியின் பரலோகம், மற்றும் அதன் விண்மீன்குழுவிற்கு அப்பால் உள்ளது (1இராஜாக்கள் 8:27, அப்போஸ்தலர் 1:9-10, எபிரெயர் 14; 7:26 ;எபேசியர் 4:10).

எ. "மனுஷர் பேசப்படாததும், வாக்குக் கெட்டாததுமாகிய வார்த்தைகளைக் கேட்டான்". மனுஷ பாஷையிலே சொல்லப்படமுடியாத காரியங்கள் இவை நம்மால் புரிந்துக் கொள்ள முடியாதபடி, இவை நாம் பார்த்திராதவைகளும், பூமியிலே அனுபவித்திராத காரியங்களுமாய் இருக்கின்றன! கிறிஸ்துவோடும், பிதாவோடும் பரதீசில் இருக்கும்போது, பார்த்ததையும், கேட்டதையும் சொல்ல வேண்டாமென்று கேட்டுக் கொள்ளப்பட்டார் என்பதற்கும் அடையாளம் இருக்கிறது.

ஏ. புறஜாதியாரிடத்தில் தன்னுடைய ஊழியத்தின் ஆரம்பத்திற்கு சற்று முன்பாக இந்த வெளிப்பாட்டை பவுல் பெற்றதற்கு, அவர் சகிக்க வேண்டிய பெரிய பாடு காரணமாயிருக்கலாம். துன்பம் மற்றும் கஷ்டத்தின் சமயங்களில் அவரைப் பலப்படுத்த அது உதவும். நம்மில் அநேகரிடத்தில் இன்று கிறிஸ்து இதையே செய்கிறார். விசேஷ ஊழியங்களில் ஈடுபட்டிருக்கிற நம்மில் சிலர், பவுலின் இந்த அநுபவத்திலிருந்து ஏன் நீங்கள், அநேக முறை கர்த்தரிடத்திலிருந்து தரிசனங்களையும், வெளிப்படுத்தல் களையும் பெற்றுக் கொள்ளுகிறீர்கள் என்று கற்றுக் கொள்ள வேண்டும். மேலும், ஏன் அநேக முறை இவைகள் உங்கள் பக்திவிருத்திக்காக மட்டுமே உள்ளன என்பதையும் கற்றறிய வேண்டும்!

ஐ. "என்னிடத்தில் காண்கிறதற்கும், என்னாலே கேட்கிறதற்கும் மேலாக என்னை எண்ணாதபடிக்கு அப்படி (மேன்மை பாராட்டுதலை) செய்யாதிருப்பேன்". கர்த்தரிடத்திலிருந்து தான் பெற்றிருந்த விசேஷ வெளிப்படுத்தல்களைக் குறித்து தொடர்ந்து தான் மேன்மை பாராட்டமாட்டாரென்று பவுல் இங்கே அர்த்தப்படுத்துகிறார். கிறிஸ்துவுக்கோ அல்லது சுவிசேஷத்திற்கோ அதினால் எந்த நன்மையும் வராது. கிறிஸ்துவிற்கு பதிலாக அது அவரைத் தான் மேன்மை பாராட்ட உதவியது! கர்த்தரிடத்திலிருந்து விசேஷ தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் கொடுக்கப் பட்டிருக்கிற நம் ஒவ்வொருவருக்கும் இதே காரியம் இன்று பொருந்துகிறது!

2. தேவனிடத்திலிருந்து, தரிசனங்களையும், வெளிப்படுத்தல் களையும் நாம் பெறும்போது, பெருமை மற்றும் அகந்தையுள்ளவர்களாய் நாம் மாறாமல் இருக்கமுடியாது, அநேக முறை, "நமது சரீரத்தில் ஒரு முள்ளைக்" கொடுக்க வேண்டிய அவசியத்தை அவர் காண்கிறார் (12:7-9).

பவுலின் தரிசனங்களும், அவரது சரீரத்திலுள்ள முள்ளின் வெளிப்பாடுகளும் (2 கொரிந்தியர் 12:1-10)

அ. வசனம் 7."எனக்கு வெளிப்படுத்தப் பட்டவைகளுக்குரிய மேன்மையினிமித்தம் நான் என்னை உயர்த்தாதபடிக்கு" கர்த்தரிடத்திலிருந்து விசேஷ தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் பெற்றுக் கொள்ளுகிற புதிதாக மனந்திரும்பியவர்களிடத்தில் சாதாரணமாக காணப்படுகிற சுபாவம் இதுவே. ஆனால், தங்களது விசுவாசம் மற்றும் ஊழியத்தில் முதிர்ச்சியடைகிற வர்களோ இது தேவனிடத்திலிருந்து வரவில்லை என்பதை வெகு விரைவில் அறிந்துக் கொள்வார்கள். கிருபையிலிருந்து விழவும், பெருமை மற்றும் அகங்காரம் கொள்ளவும் செய்யும்படியாக இது பிசாசின் ஒரு முயற்சியே.

ஆ. வசனம் 7. "என் மாம்சத்திலே ஒரு முள் கொடுக்கப்பட்டிருக்கிறது ...... அது என்னைக்குட்டும் சாத்தானுடைய தூதனாயிருக்கிறது" விசேஷ ஊழியங்கள் உடையவர்களிடம் இந்த சோதனைபோடு வருவாளென்று தேவன் அறிந்ததினால், பல சமயங்களில், அவர்களது வாழ்வில் குறிப்பிட்ட காரியங்கள் நடக்க அனுமதிக்க வேண்டியிருக்கிறது. பவுல் நடந்த காரியத்திற்கு மூன்று பகுதிகள் உண்டு. அது:

1. அவரது "மாம்சத்தில் ஒரு முள்ளாய்" இருந்தது - "முள்" என்பது முனை உள்ளதாகவோ அல்லது கூர்மையாகவோ உள்ள ஒன்று. அது ஒரு அசௌகரியமோ அல்லது தொந்தரவோ, அல்லது ஒரு வியாதியோ அல்லது மாம்ச சரீரத்தின் முடக்கமோ, அல்லது இரண்டுமாகவோ இருக்கலாம்.

2. அது சாத்தானுடைய தூதனாயிருந்தது - இது நிச்சயமாக பிசாசோ அல்லது பிசாசுக்கு சம்பந்தப்பட்ட செய்கையோ ஆகும்.

3. பவுலை உபத்திரவப்படுத்தியது - இதன் அர்த்தம் "கை முட்டியால் குத்துவது, இறுக மூடப்பட்ட கரங்களால் அடிப்பதாகும்". அது ஒரு ஆவிக்குரிய அல்லது சரீர அடிமைக்கூட குறிக்கலாம் (மத்தேயு 26:67; 1கொரிந்தியர் 4:11; 1பேதுரு 2:20) இந்த "மாம்சத்திலுள்ள முள்ளானது". பவுலுடன், அவரது முழு ஊழியத்திலும் இருந்தது என்று தான் எல்லா காரியங்களும் சுட்டிக் காட்டுகின்றன!

இ. பவுலின் அகங்காரம் மற்றும் பெருமையாகிய நீர்க்குமிழியை துளைக்கும்படியாகவும், தன்னைக் குறித்த அளவுக்கு மீறிய எண்ணத்திற்கு ஒருஅடிக்கொடுக்கும் படியாகவும் பவுலின் இந்த "மாம்சத்திலுள்ள முள்ளானது" ஆவிக்குரிய சுபாவமுடையதாகவும் தேவனால் அனுமதிக்கப்பட்டதாகவும் இருக்கக்கூடும்! சபையை நிறுவும்படி பவுல் எத்தனித்து, எந்த பட்டணங்களிலெல்லாம் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாரோ, அங்கேயெல்லாம் தொடர்ச்சியாக யூதர்களாலும் மற்றவர்களாலும் வந்த உபத்திரவத்தினால் இது நிச்சயமாய் நிறைவேறக்கூடும். (அப்போஸ்தலர் 13:8,45; 14:2,19; 16:17-19; 17:5, 18:6; 2தீமோத்தேயு 4:14; 2:17; மற்றும் எண்ணாகமம் 33:55). அவரது "மாம்சத்திலிருந்த முள்ளானது" ஒரு சரீரப்பிரகாரமான வியாதியோ அல்லது முடக்குதலாகவோ இருந்தால், அது ஒருவேளை அவருடைய கண்களோடு சம்பந்தப்பட்டிருக்கலாம். சிலர் அது கொசுவினால் வரும் வியாதியாக இருந்திருக்கலாம் என்று நினைக்கின்றனர் (கலாத்தியர் 4:13-15; 6:11)

ஈ. வசனம் 8 "அது என்னை விட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்று தரம் கர்த்தரிடத்தில் (இயேசு) வேண்டிக் கொண்டேன்."

பவுலின் தரிசனங்களும், அவரது சரீரத்திலுள்ள முள்ளின் வெளிப்பாடுகளும் (2 கொரிந்தியர் 12:1-10)

1. கெத்சமனேயில், கிறிஸ்துவும் தனது உபத்திரவத்தின் பாத்திரம் நீக்கப்படும்படி மூன்று முறை கேட்டார் (மத்தேயு 26:39-44). அவரது பாடுகளின் மூலமாய் மனுகுலத்திற்கு தேவன் கொண்டுவரக்கூடிய நன்மையின் நிமித்தமாய், அவரது வேண்டுகோளும், பவுலினுடையதைப் போலவே நிராகரிக்கப்பட்டது.

2. பாலஸ்தீனாவிலே மறுபடியும் மழைபெய்யும்படி, தான் செய்த ஜெபத்திற்கு பதிலைப் பெற்றுக் கொள்ளுமுன் எலியா ஏழு முறை ஜெபித்தான். (1 இராஜாக்கள் 18:43-45).

உ. விடாமுயற்சியும், மீண்டும் மீண்டுமாகவும் ஏறெடுக்கப்படும் ஜெபமானது; நமக்காக கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட ஒரு மாதிரியாகும். ஆனால் பதிலானது, "ஆம்" என்றோ அல்லது "இல்லை" என்றோ அல்லது "சற்று பொறுத்திரு" என்றோ, அல்லது "என் கிருபை உனக்குப் போதும்" என்றோ இருக்கக்கூடும் என்பதை நாம் புரிந்துக் கொள்ள வேண்டும். சில வேளைகளில் நாம் தவறான காரியத்தையோ அல்லது தவறான நோக்கங்களோடேயோ கேட்கிறோம். பவுலிடத்தில் அவர் செய்தது போலவே, நமக்கும், நமது முழு வாழ்க்கையையும் கருத்தில் கொண்டு; கிறிஸ்துவுக்குள் அவர் கொண்டிருந்த நம்மைக்குறித்த நோக்கங்கள், மற்றும் மற்றவர்களுக்கு நம்மூலமாய் அவர் செய்கின்ற காரியங்கள் ஆகியவற்றைக் கொண்டே நம்ஜெபங்களுக்கு அவர் பதிலளிக்கிறார். (லூக்கா 11:5-10; 18:1-7).

ஊ. வசனம் 9 "என் கிருபை உனக்குப் போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும்" கிறிஸ்துவின் பராமரிப்பும், பாதுகாவலும், எப்பொழுதும் பவுலுக்கு போதுமானதாயிருந்தது. அவருடைய எல்லா பாடுகளிலும், கஷ்டங்களிலும், அவரை உற்சாகப்படுத்தவும், விடுதலையாக்கவும் கிறிஸ்து எப்பொழுதும் அங்கிருந்தார் (1கொரிந்தியர் 10:13) அதிலும் முக்கியமானதாய், சுயமாய் தன்னால் நிற்க முடியாத ஒரு பலவீனமான, மாம்ச பாத்திரத்தின் மூலமாய் வெளிப்படும்போது, கிறிஸ்துவின் மகிமையும், வல்லமையும், வெளியாக்கப்படுகிறது.

எ. சாத்தானுடைய தூதன், பவுலுக்கு "மாம்சத்திலே ஒரு முள்ளைக்" கொடுக்க அனுமதித்ததின் மூலம், தேவன் இரண்டு நோக்கங்களை உண்மையில் நிறைவேற்றினார்.

1. அகங்காரம் கொள்ளாமல் அது பவுலைக் காத்தது; தாழ்மையுடையவராகவும், கிறிஸ்துவோடு நெருக்கமுடையவராகவும் அவரை வைத்தது.

2. அவர் மூலமாய் ஊழியத்தில் வெளிப்படுத்தப்பட்டது, உண்மையில் கிறிஸ்துவின் மகிமையும், வல்லமையுமேயன்றி, தன்னுடையதல்ல என்பதை வெளிப்படுத்தியது.

ஏ. அவசியமாயிருக்கிறபடியால் நம்முடைய சொந்த நலனுக்காகவும், மற்றவர்களின் நலனுக்காகவும், நம்மை தாழ்மையுள்ளவர்களாகவும், கிறிஸ்துவையும் அவரது மகிமையையும், வல்லமையையும் வெளிப்படுத்தவும், நம்முடைய "மாம்சத்திலே ஒரு முள்ளை" கொடுக்கும்படி சாத்தானுக்கு அனுமதி அளிப்பார். கர்த்தரிடத்திலிருந்து விசேஷ தரிசனங்களும், வெளிப்படுத்தல்களும் கொடுக்கப்பட்டுள்ள நம்மில் உள்ளவர்களுக்கு இது விசேஷமாக உண்மையாய் இருக்கிறது.

பவுலின் தரிசனங்களும், அவரது சரீரத்திலுள்ள முள்ளின் வெளிப்பாடுகளும் (2 கொரிந்தியர் 12:1-10)

3. தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும் குறித்தல்லாமல், நமது பெலவீனங்களில் நாம் மேன்மை பாராட்டும் போது, கிறிஸ்துவின் வல்லமை நம்மேல் தங்குகிறது (9-10).

அ. வசனம் 9 "ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன்" "என்மேல் தங்கும்படி" என்றால் "என்னில் தரித்திருக்கும்படி; நேராக நிறுத்தப்பட்ட கூடாரத்தைப்போல என்னை மூடுவது" தேவனுடைய பிரசன்னமாகிய "மேகம்" வனாந்தரத்திலே "சந்திப்பின் கூடாரத்தை" மூடினதுப்போல, கிறிஸ்துவின் வல்லமையினால், ஊழியத்தில் பவுல் மூடப்பட்டார் (யாத்திராகமம் 40:34-35). மற்ற மனுஷர்களால் பெலவீனம் உள்ளவர்களாய் காணப்பட்டு, நாம் கர்த்தருக்கு முன்பாக நம்மைதாழ்த்த ஆயத்தமாயிருக்கும்போது மட்டுமே இது நடக்கும்!

ஆ. வசனம்10 "ஆகையால்கிறிஸ்துவினிமித்தம் எனக்குவரும்பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும்நான் பிரியப்படுகிறேன்".

இதனால்தான், கொரிந்தியர்கள் தன்னை பெலவீனனாக, உள்ளத்தைக் கவரக்கூடாதவராக, தொடர்ச்சியாக ஊழியத்தில் கஷ்டங்களை சகிப்பவராக கண்டதைக் குறித்து, பவுல் மனமகிழ்ச்சி அடைந்தார் (நல்லதென்று நினைத்து, பெரும் திருப்தியடைந்தார்).

இ. அவரது ஊழியத்தில் வெளிப்படுத்தப்பட்ட வல்லமை, தன் சொந்தமானதல்ல, கிறிஸ்துவின் வல்லமையே என்பதை அவர்களுக்கு நிரூபிக்கும் (அப்போஸ்தலர் 3:11-12,16).

இ. வசனம் 10 "நான் பலவீனமாயிருக்கும் போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்" பவுல் பெலவீனராக காணப்படும் போது உண்மையில் பலமுள்ளராயிருப்பதற்குகாரணம், வனாந்திரத்திலே சந்திப்பின் கூடாரத்தை மேகம் மூடினதுபோல, கிறிஸ்துவின் மகிமையும், வல்லமையும் அவர்மேல் வருகிறது!

ஈ. நம்மை கர்த்தருக்கு முன்பாக தாழ்த்தி, ஊழியத்தில், நம்மைபல்ல, அவரை உயர்த்த முற்படும்போது, அதே காரியம் நமக்கும் நடக்கும்! நாமும்பவுலைப்போல,கிறிஸ்துவின் வல்லமையினால் ஊழியத்திற்காகஞானஸ்நானம்கொடுக்கப்பட்டிருக்கிறோம் (அப்போஸ்தலர் 1:4-8; 9:17).

முடிவுரை

அ. சுவிசேஷ ஊழியத்தில் ஈடுபட்டு, கர்த்தரிடத்திலிருந்து தரிசனங்களையும், வெளிப்படுத்தல்களையும்பெற்றுக்கொள்பவர்களுக்கென்று, இந்த குறுகிய கதையில் மூன்று முக்கியமான பாடங்களுண்டு:

1. நீங்கள் கர்த்தரிடத்திலிருந்து பெறக்கூடிய தரிசனங்கள் மற்றும் வெளிப்படுத்தல்களைக் குறித்து,மேன்மைபாராட்டுவதினால்,கிறிஸ்துவுக்கும், சுவிசேஷத்திற்கும்எந்த ஆதாயமுமில்லை.

2. பெருமை, மற்றும் அகங்காரம் உள்ளவர்களாக நாம் மாறாதபடிக்கு, பல சமயங்களில், நம்முடைய "மாம்சத்தில் ஒரு முள்ளைக்" கொடுக்கும்படிசாத்தானை அனுமதிக்க வேண்டிய அவசியத்தை தேவன் காண்பார்.

3. நம்முடைய தரிசனங்கள், மற்றும் வெளிப்படுத்தல்களில் அல்லாமல், நம்முடைய பெலவீனங்களில் நாம் மேன்மை பாராட்டும்போது, கிறிஸ்துவின் வல்லமை நம்மேல் தங்குகிறது!